# கிளிஞ்சல்கள்

## சிறுகதைகள்



ரா.சீ

# கிளிஞ்சல்கள்

பேராசிரியர்
டாக்டர். ரா. சீனிவாசன்,
எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்.டி.

அணியகம்
5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030.

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| முதற் பதிப்பு | செப்டம்பர் 1998 |
| நூல் பெயர் | கிளிஞ்சல்கள் |
| ஆசிரியர் | ரா. சீனிவாசன் |
| பொருள் | சிறுகதைகள் |
| பதிப்பகம் | அணியகம்<br>5 செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 30. |
| தாள் | 13.6 kg. Map litho |
| அளவு | டபுள் கிரௌன் |
| எழுத்து | 10 புள்ளி |
| பக்கம் | 192 |
| விலை | ரூ.30.00 |
| ஒளியச்சு | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 30. |
| அச்சீடு | நெல்சன் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 029. |



***"SILAPPATHIKARAM - Moolamum Thiranaaivam; MANIMEKALAI - Moolamum Thiranaaivum"***

"Literary expertise and scholarship of the editor can be easily seen on every page of the two books. These two volumes will enable the students and common readers to derive maximum benefit out of them". - **P.K.R.**

**Review - The Hindu dated 2nd June, 1998**

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| கம்பராமாயணம் | (உரைநடை) | ரூ.50 |
| மாபாரதம் | ,, | ரூ.50 |
| சீவக சிந்தாமணி | ,, | ரூ.35 |
| திருவிளையாடற் புராணம் | ,, | ரூ.40 |
| குப்பைமேடு | (சிறுகதைகள்) | ரூ.25 |
| படித்தவள் | ,, | ரூ.25 |
| பரிசு மழை | ,, | ரூ.25 |
| வழுக்கு நிலம் | ,, | ரூ.30 |
| அணியும் மணியும் | (கட்டுரை) | ரூ.30 |
| திருக்குறள் செய்திகள் | (தொகுப்புரை) | ரூ.40 |
| திருக்குறள் மூலம் | | ரூ.20 |
| நாலடியார் செய்திகள் | ,, | ரூ.20 |
| மொழியியல் | | ரூ.50 |
| தொல்காப்பியமும் நன்னூலும் | | ரூ.60 |
| திருப்பாவை விளக்கவுரை | | ரூ.20 |
| திவ்விய பிரபந்த சாரம் | | ரூ.15 |
| சொல்லின் செல்வன் | (நாடகம்) | ரூ.25 |
| தெய்வத் திருமகன் | (புதுக் கவிதை) | ரூ.25 |
| திரௌபதி சூள் உரை | ,, | ரூ.30 |
| தமிழ் இலக்கிய வரலாறு | | ரூ.20 |
| சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் | | ரூ.50 |
| மணிமேகலை மூலமும் திறனாய்வும் | | ரூ.50 |
| சிலம்பின் கதை | (உரைநடையாக்கம்) | ரூ.50 |

# முன்னுரை

பழங்கதைகள் சொல்வதில் ஓர் மகிமை இல்லை என்றான் பாரதி.

புதிய கதைகள் புனைவதில் ஒரு பயன் உண்டு என்பது இங்குக் கண்டது; ஒரு புதிய உண்மை.

வாழும் மனிதர்க்கு எழும் பிரச்சனைகள் அவற் றிற்குத் தீர்வு காண்பது இந்தப் புதிய கதைகள்.

இன்றைய நடைமுறை நிகழ்ச்சிகளை வைத்துப் புனையப்பட்ட கதைகள் இவை. இவை எழுத்து ஒவியங்கள் அல்ல; செய்திகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் தரப்பட்ட சொல்லோவியங்கள்.

கட்டுரை வெளிப் படையாகச் செய்திகளைச் சொல்வன. கதைகள் கவிதைகளைப் போன்றவை; ஒரே ஒரு செய்தியைச் சொல்வது. ஒவ்வொரு கதையும் ஒரே செய்தியைக் கூறுகிறது. நிகழ்ச்சிகளில் ஊடுருவிக் கண்ட உண்மைகள் அவற்றை உணர்த்த எடுத்துக் கொண்ட முயற்சிகள் இவை.

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன் அவற்றைக் கூற அறிமுகம் தேவைப்படுகிறது. அறிமுகம், நிகழ்ச்சி, முடிவு இவை மூன்றும் கொண்டவை ஒவ்வொரு கதையும்.

ஒவ்வொரு கதையும் வாழ்க்கையின் அனுபவங் களை ஒட்டி அமைந்தவை; பாதிப்புகள் என்றும் கூறலாம்.

இவை தனி மனிதர் கதைகளைக் கூறுவன அல்ல; இப்பண்புகளைக் கொண்ட மாந்தர்களின் நிகழ்ச்சிகளைக் கூறுவன. அதனால் இவை இலக்கியத் தரம் பெறுகின்றன.

புதுக்கவிதை கவிதையில் ஏற்பட்ட மாற்றம்; புதுக் கதைகள் புதுக் கவிதைகளைப் போலப் புதுப் பிரச்சனை களைச் சந்திக்க எழுவது. நேரிடை வாழ்க்கையத் தொடுவது; இவ்வகையில், இது ஒரு புதிய முயற்சி; கதை வடிவில் புதிய பரிசோதனையும் ஆகிறது.

எந்த முன்மாதிரியும் இதற்கு என்று எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதுவே இத்துறையில் முன் மாதிரியாகப் படைக்கப்பட்ட வடிவம்.

கதை என்பது உள்ளுறை உவமம் போன்றது; சிந்திக்க வைப்பது; வாசகர்களோடு கருத்துகளைப் பரி மாறிக் கொள்வது. நண்பர்களுடன் உரையாடுவது போன்ற அமைப்பைக் கொண்டது. எந்தப் பிரச்சாரமும் செய்ய இவை எழுதப்படவில்லை; செய்திகளை உணர்த் துவது; தீர்வுகளைக் காண்பது; உள்ளதை உள்ளவாறு காட்டுவது; இவை இக் கதைகள் உணர்த்தும் உண்மைகள்.

சுவைகள் இவற்றை இயக்குகின்றன. நகைச் சுவைக்குத் தரப்படும் சிறப்பு இறுதியில் இடம் பெற்றுள்ள கதைகள் காட்டும். நிகழ்ச்சிகளை நகைச்சுவையோடு சித்திரிக்க எடுத்துக் கொண்ட முயற்சி ஈற்றுக் கதைகள்.

இந்நூல் மகிழ்விக்கும்; சிந்தனையைத் தூண்டும்; பயன் உடையது.

ரா. சீனிவாசன்

# கதையடக்கம்


1. கிளிஞ்சல்கள் .......... 7
2. உறைத்தது .......... 13
3. சொந்த வீடு .......... 17
4. எல்லை கடந்த நிலை .......... 27
5. தவறு திருத்தப்பட்டது .......... 34
6. நூலிழை .......... 42
7. சுமை குறையாது .......... 51
8. விழிப்பு .......... 57
9. வெட்கக் கேடு .......... 64
10. வைர மோதிரம் .......... 68
11. எப்படி முடிப்பது? .......... 71
12. நன்கொடை .......... 75
13. கடைசி வரை .......... 80
14. அடி சறுக்கியது .......... 88
15. தகுதிகள் .......... 94
16. ஈடு ஆகாது .......... 100
17. மாற்றம் .......... 104
18. நிம்மதி அவள் 'சாய்ஸ்' .......... 108
19. சாப்பாடு என்ன செய்தது .......... 112
20. அறிமுகம் .......... 116
21. இணைக் கல்வி .......... 124
22. போயிருக்கக் கூடாது .......... 129
23. தூண்டுதல் .......... 135
24. ராசியான பேர் .......... 142
25. நாரத முனிவரின் பூலோக யாத்திரை .......... 153
26. நவீன தெனாலிராமன் .......... 163

# 1

# கிளிஞ்சல்கள்

அவளுக்கு மணம் ஆகவில்லை.

அவளை அடுத்து இந்தக் கேள்விக் குறி எழுகிறது. வாக்கியத்தின் முடிவில் அமைவது இது. அவளோடு பேசுகிறவர்கள் இதைத் தவறாமல் பயன்படுத்துகின்றனர். எப்பொழுது என்பது அவளைப் பற்றிய வினா.

வயதானவர்கள் அவர்களைப் பற்றி விசாரிக்கும் போது எழுவது "எப்படியிருக்கிறீர்கள்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்பது. இந்த வைத்தியர்களுக்கு அவர்கள் வழக்கமான பதில் சொல்ல வேண்டி நேருகிறது. சர்க்கரை இருநூற்று ஐம்பது; பி.பி. அதிகம் இல்லை; இவற்றை வைத்துத்தான் நாழிகைக் கணக்கு நிறுவப் படுகிறது. "பரவாயில்லை" இந்த ஆறுதல் அளிக்கப் படுகிறது. வேறு என்ன அவர்களைப் பற்றிக் கேட்க முடிகிறது.

விசாரணை நல்லுறவுகளுக்கு அவசியம் தேவைப் படுகிறது. "விசாரித்தானா" என்று அவர் சொல்லாமல் இருக்க வேண்டும்.

இவளைச் சந்திக்கின்றவர்கள் கேட்கும் வழக்கமான கேள்வி : "எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?" - அது அவள் முயற்சியில் இருப்பது போன்ற கேள்வி அது.

அவளும் பத்து ஏன் இருபது வருஷங்களாக இதே பதில்தான் சொல்லி வருகிறாள். "அதற்கென்ன என்ன அவசரம்?" என்று திருப்பிக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு இப்பொழுது நாற்பது எட்டுகிறது. ஆனால் அவளைப் பார்க்கின்றவர்கள் அப்படிச் சொல்லுவது இல்லை; அதற்குக் காரணம் அவளை இளமையாகவே வைத்துப் பார்க்கும் ஆர்வம்தான்.

"அறிவுக் கதிர்கள் ஒன்று இரண்டு வெளிப்பட்டாலும் அவற்றை மறைக்கக் கரு மை பயன்படுகிறது. பல்லிழந்தால் 'செட்' உதவுகின்றது. நிறம் மாறினால் அதன் தரம் கெடுவதில்லை; மை ஊட்டப்படுகிறது.

கண்களுக்கு மை தீட்டப்பட்டு வந்தது. அது இப்பொழுது உச்ச நிலையை எட்டுகிறது; அதற்குக் கிடைத்த உயர்வு அது.

கூந்தல் அதைப் பற்றிப் பேசும் காலம் இது அல்ல; அதற்காகவே காவியப் புலவர்கள் பத்துப் பாடல்களை எழுதிக் கொண்டிருந்தனர்; அதற்கு அவசியம் இங்கு ஏற்படவில்லை. வெட்டுகளுக்கு உள்ளாகி வெளிவரும் படம் அது; சென்சார் செய்யப்பட்டுச் சீவி விடப்பட்ட ஒன்று.

பார்க்க அவள் கவர்ச்சியைத் தந்தாள்; என்றாலும் மடித்து வைத்த தாள்கள் சில கோடுகளைப் பெறத்தான் செய்கின்றன. நிறைய துகள்கள் அந்தக் கோடுகளை நிரப்பத் தேவைப்பட்டன. அவள் நிறம் அவள் உடன் பிறந்தது. அது அவள் கால வேகத்தைத் தடுத்து நிறுத்தியது. 'மங்கையர்' கழகத்தில் அவள் ஒரு அங்கத்தினர் என்று அவள் ஏற்கப்பட்டாள்.

அந்த நிறம் அவள் தாய் தந்தது. அவள் தோலை அப்படியே இவளுக்கு உரித்து வைத்தாள் என்றால் அது மிகையாகாது. பழுப்பு நிறத்தில் சிறிது இழப்பு அவ்வளவுதான்.

அவள் தாய் தங்க நிறம். அதை அவள் தக்க விலைக்கு விற்க முடிந்தது. வைர வியாபாரி அவளைக் குத்தகைக்கு எடுத்தான் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு வீடுகளை அவள் பெயருக்கு எழுதி வைத்தான். ஒன்று அவள் குடியிருப்பதற்கு; மற்றொன்று அவள் குடித்தனம் நடத்துவதற்கு. அதன் வாடகைப் பணம் வீடு தேடி வந்தது. அதை அவள் வங்கியைத் தேடிச் சேமித்தாள். வசதிகள் வந்த அவன் அசதியைப் போக்கின; அவன் தங்கும் மடம் அது ஆகியது.

அவள் இன்று சாயி பக்தர். பங்காரு அடிகள் அவளுக்கு விதிவிலக்கு அல்ல. வயிறு தெரியும் அவர் படம் மாட்டப்பட்டிருந்தது.

காமகோடி அவள் வீட்டு மேல்மாடியில் இடம் பெற்றிருந்தார். ‘‘நான் இருக்க பயமேன்?’’ என்று அபயம் அளித்த உருவப்படம் அவளுக்கு நம்பிக்கை அளித்தது. அவள் சாயி பக்தர். அதனால் அவள் வீட்டு நாய் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் அவர் பெயர் சூட்டு விழா நடத்தியிருக்கிறாள். ‘‘சாயி நிலையம்’’ என்றும் அந்த வீட்டுக் கல் அறைந்து கொண்டிருந்தது.

இப்படித்தான் வாழ வேண்டும் என்பது சம்பிர தாயம். சமுதாயக் கட்டுக்கோப்பு; இவற்றை அவள் மதித் தவள்தான். ஆனால் எப்படியும் வாழலாம்; நாங்கள் விதிவிலக்குகள் என்று சமாதானம் கூறினாள்.

அந்த அம்மையார் அடிக்கடி கோயிலுக்கு வருவார். நெற்றியில் பொட்டு; அது சிகப்பு; தங்க நிறம்; அதனால் அவள் முகத்துக்கு மஞ்சள் நிறம் தேவைப்படவில்லை. அது மறைந்து கிடந்தது. அதை அவன் விரும்பியது இல்லை. அவன் வாங்கித் தந்த வண்ணப் பொடிகள் மணமும் தந்தன.

அவள் மங்கலமாகக் காட்சி அளித்தாள். பட்டுப் புடவை தவிர அவள் துட்டுக் கொடுத்து வேறு எதுவுமே வாங்கியது இல்லை. அது அவளுக்குத் தேவைப்பட்டது.

மற்றவர்களைவிட அவள் கோயில் அர்ச்சகர்க்கு அதிகம் தந்தாள். அதனால் அவன் கூடுதலாகப் பூச்சரம் தந்தான்; அவள் வெளியே வரும்போது தாலிச் சரத்தோடு அதுவும் சரிந்து அழகு செய்தது.

கட்டிய தாலி அவள் கழற்றியது இல்லை. அது அவளுக்குத் தேவைப்பட்டது.

வைரக் கம்மல் ஒளி அவளைத் தனித்துப் பிரித்துக் காட்டியது. அதன் விலையைக் கேட்டு விசாரித்தவர்கள் பலர், வாங்கும்போது இருந்த மதிப்பு இப்பொழுது கூடிவிட்டது. இரண்டையும் அவள் தவறாமல் கூற நேர்ந்தது.

வசதி இருந்தது; கார்கள் புதிதாக உற்பத்தியாகி வெளிவருகின்றன புதிய திரைப் படங்கள் போல; காரை அவள் அடிக்கடி மாற்றி வந்தாள். ஆளை மட்டும் அவள் ஒரே ஒரு முறைதான் மாற்றினாள்.

அந்தப் புதிய ஆள் அவன் அவளுக்கு வேண்டியதை வாங்கித் தந்தான்; கணக்கில் வராத பணத்தை அவன் அவளுக்குக் காணிக்கையாக்கினான். அவன் உபரிப் பணத்தை அவன் தன் உபரி மகிழ்ச்சிக்கு அவளுக்குக் கொடுப்பதில் சிரமம் இல்லை; வருமான வரித் துறைக்குத் தருவதைத் தரும காரியத்துக்குச் செலவு செய்தான்.

அவன் வருவது போவது அவளுக்குத்தான் தெரியும்; மற்றவர்களுக்கு அவன் விளம்பரம் ஆவது இல்லை; நீலக் கண்ணாடி அவன் வருவதை அவன் காரில் மறைத்தது. கண்களுக்கு அணியும் நீலக் கண்ணாடியைக் காருக்கே பூட்டிவிட்டான். அது அவனுக்குக் குளிர்ச்சி

தந்தது. அவள் துணிந்து அவனோடு வெளிப் பயணம் செய்தாள்.

அவன் மனைவி இவளால் கண்ணகியாயினாள்; அவளுக்கு இவன் எந்தக் குறையையும் வைக்கவில்லை. இரண்டு பிள்ளைகள்; இரண்டு பெண்கள்; கூட்டிப் பார்த்தால் நான்கு. அவர்கள் போதும்; அந்த அம்மை யாருக்கு நிறைவைத் தந்தது. இவனால் கூட்டல் கணக்குப் போடத் தேவையில்லை; அவன் கழித்தல் கணக்கு அவர்களுக்கு ஒரு வகையில் நிம்மதியைத் தந்தது. அவர் கள் தாய்மையில் மனநிறைவு கண்டார்கள்.

இந்த விவரம் எல்லாம் தேவையில்லை. என்றாலும் இப்படியும் சில சிவபார்வதிகள் சீலம் உள்ளது என்பதைக் கூற வேண்டியுள்ளது.

இந்தச் சிவபார்வதிக்கு ஒரு மகள் காலாவதி ஆகிவிட்டாள். அவள் எப்படி இறந்தாள்? அது எல்லாம் பழைய கதை. பூர்வ ஆசிரமத்துக் கதை. டாக்டர் கேட்ட தொகை தர இயலாமையால் அவளை இவள் இழக்க நேர்ந்தது. பழையவன் ஒரு குமாஸ்தா; அவன் கற்ற பாடம் அது; அதனால் அவளுக்கு அவன் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை; 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று வாழ்த்துக் கூறினான். ஸ்ரீதரின் படம் அவனுக்கு இவ் வகையில் உதவியது.

இந்தக் கதைகள் எல்லாம் எதற்காக! இப்பொழுது இந்தப் பெண் இவளுக்கு ஒரே மகள்; அந்த அன்பர் ஒரே தந்தை. வளர்ப்புத் தந்தை என்ற புதிய பதவி அவனுக்குக் கிடைத்தது.

அவன் அவள் வளர்ப்புக்கு எந்தப் பொறுப்பும் ஏற்க வில்லை. அவளேதான் வளர்ந்தாள். என்றாலும் அந்தத் தலைமை அவனுக்கு வாய்த்தது. அவள் மட்டும் அவனை 'அப்பா' என்று கூப்பிட்டது இல்லை;

கூப்பிடவும் தோன்றவும் இல்லை. ஏன் ஒருவரை அவள் கூறி விட்டதால். அவனைக் குறிப்பிட அவளுக்கு அகராதியில் சொல் கிடைக்கவில்லை. அவன் மட்டும் அவளைப் பெயர் வைத்து அழைக்க முடிந்தது.

அவள் முப்பதிலும் இப்படித்தான் கூறினாள். ''மணத்துக்கு அவசரம் இல்லை'' எனக் கூறினாள். நாற்பது அவளிடம் நகர்ந்து வருகிறது. இப்பொழுதும் அப்படித்தான் சொல்லுகிறாள்.

அவள் ஏன் அடிக்கடி கண்ணில் படுகிறாள்? அவளைப் பற்றி ஏன் நாம் கவலைப்பட வேண்டும்.

ஏனோ தெரியவில்லை; அரித்துக் கொண்டே இருக் கிறது.

அவள் இளமை கழிகிறது; அவளுக்கு மணம் நடக் குமா நடக்காதா.

அவள் கடற்கரையில் கிளிஞ்சல்களைப் பொறுக்கு கிறாள்; பொறுக்கிக் கொண்டே இருக்கிறாள். முத்துகள் கிடைக்கவில்லை. வெறும் சத்தைகள்தான் படுகின்றன.

நிறம் இருக்கிறது; கற்றிருக்கிறாள்; செல்வம் இருக் கிறது; அதனால் அவள் எந்தத் தொழிலையும் தேட வில்லை.

வேலியைக் கடந்துவிட்டாள்; வேலி அவளுக்குக் காப்பாக இருந்தது. முள் வேலிதான்; உள்ளே இருந்தால் அவளுக்குக் காப்புக் கிடைத்திருக்கும்.

அவள் கிளிஞ்சல்களைத்தான் தேடுகிறாள்; அவற் றைத் தூக்கி எறிகிறாள்; இன்னும் அந்த விளையாட்டுப் பருவத்திலேயே இருக்கிறாள். என்ன செய்வது? இப்படி யும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

# 2

# உறைந்தது

''நீங்கள் இதை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றாள் அவள்; அதில் வியாபாரம் மட்டும் இல்லை; உணர்ச்சிக் கலப்பும் இருந்தது.

அவள் பின்னணிப்பாட்டில் ஒரு சோக கீதம் இருப்பதை உணர முடிந்தது.

ஓரம் கட்டப்பட்டவள் என்பது அவள் சோர்வு காட்டியது.

அந்தக் கதையைக் கேட்பதற்காகவாவது அவள் கட்டுக்களை அவிழ்ப்பதற்குச் சம்மதம் தெரிவிக்க நேர்ந்தது.

கட்டியவன் அவன் உறவு வெட்டி இருக்கிறான் என்பது தெரிந்தது; தேய்ந்த பழங் கயிறு அவன் பழைய பந்த பாசத்தைக் காட்டியது.

''அவர் எதிர்பார்த்ததை என்னால் கொடுக்க இயல வில்லை'' என்றாள்.

புதிரா புனிதமா என்ற தலைப்பு என்று இவர் எண்ணத் தொடங்கினார்.

''வரதட்சணை என்று கேட்கவில்லை; கொடுத்திருக் கலாம்; அவர் நம்பிக்கைக்கு நான் பாத்திரமாக இருக்க வில்லை''

விடுகதைபோல் இருந்தது.

"அவர் ஒரு பிள்ளை பெற்றுத் தருவேன் என்று எதிர்பார்த்தார்; மூன்றும் பெண்கள்" என்றாள்.

"யார் இவர்களைக் காப்பாற்றுவது? நீயே வைத்துக் காப்பாற்று போ என்று என்னை ஒதுக்கிவிட்டார்."

அவள் சொன்னதை இவரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை; ஒரு சோகக்கதை தேவைப்பட்டு அதை அவள் சொல்லி முடித்தாள்.

அவள் இதில் இரக்க உணர்வைக் கூட்டி எழுப்பினாள். கதையைக் கேட்டுவிட்டு அவளை எப்படி அனுப்புவது?

கடலை உருண்டை; பிரிட்டானியா இந்த விளம்பரங்களில் திணிக்கப்படும் பண்டமாற்றுகள் பாலிதின் பைகளில் போட்டு அதை ஒளிபெறச் செய்திருந்தாள்.

இனி மறுக்க முடியாது; அவருக்கு அவற்றில் விருப்பம் இல்லை, வீட்டிலிருந்தால் யாராவது தீர்த்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்தது.

மறுபடியும் அவளைப் பார்த்தார்; மத்திய தர வகுப்பு; அதாவது அவள் வயது பற்றிக் கூறப்பட்டது; பொறுப்புமிக்கவள் என்பது தெரிந்தது.

படிதாண்டும் பத்தினிதான்; அவள் இப்படி வந்து சோர்ந்திருக்கிறாள் என்பதை அறிகிறார்.

அந்த நடுத்தர வர்க்கத்திடம் இந்த மேல்தர மனிதர் உரையாடுவதை இடைத் தர மாந்தர் விரும்ப மாட்டார்கள்.

அவர் வீட்டில் இந்த வசனங்களைக் கேட்டுக் கொண்டிருந்த 'வெகுசனம்' அதாவது அவர் துணைவியார் கண்டிக்கிறார்.

"என்ன அவளிடம் பேச்சு" இது அவள் வினா.

"வியாபாரம்; கொடுக்கல் வாங்கல்" என்று விளக்கம் தருகிறார்.

"இனிமேல் இந்த மாதிரி குப்பைகளை வீட்டுக்குக் கொண்டு வரவேண்டாம். அவர்களுக்கு உதவ வேண்டும் என்றால் காசு கொடுத்து அனுப்புங்கள்" இந்த ஆணை பிறந்தது.

"சுவை கண்டார்; அவர்கள் விடமாட்டார்கள்" இது எங்கோ படித்த நினைவு. குட்டி போட்ட பூனை சுற்றிச் சுற்றி வரும் என்பது பழமொழி.

அவள் மறுபடியும் இதே வீட்டை நாடி வருகிறாள். புதுக்கதை எதுவும் சொல்வதற்கு இல்லை. பழங்கதைகள் பேசினால் மகிமை இல்லை. அதனால் அவள் நேரே வியாபாரத்துக்கு வந்தாள்.

"என்னிடம் நீ விற்க வரும் பொருளில் உனக்கு என்ன லாபம் கிடைக்கும்?"

"இவர் இந்தத் தொழிலுக்குப் போட்டியாக வருகிறார். இவருக்கு என்ன அது தேவை யாரோ? இவருக்கு வேண்டியவருக்கு இவர் சிபாரிசு செய்யக் கருதுகிறார்" இது அவள் கணிப்பு.

"பத்து ரூபாய் கிட்டும்" என்று சட்டென்று பதில் தருகிறாள்.

தன் கைவசம் இருந்த பழைய நோட்டுகளில் புதிய நோட்டு; அது பத்து ரூபாய். அதை அவளிடம் தருகிறார்.

"போதுமா? சென்றமுறை நாற்பதுக்கு வாங்கினீர் களே"

"இது பண்ட மாற்று அல்ல; உலக நிதியில் இருந்து தரப்படும் பொருள் உதவி".

அவளுக்கு இந்தப் பத்திரிகைத் தமிழ் விளங்க வில்லை.

"நீ இங்கு எதிர்பார்க்கின்ற லாபம் பத்து; அதை உனக்குத் தருகிறேன்; நீ பெற்றுக்கொள். இது நான் தரும் பரிசு" என்றார்.

பரிசு என்பது இன்று கொச்சைப்படுத்தப்படும் சொல். ஆசிரியர்களுக்கு முன்பு பரிசு தந்தார்கள்; இன்று வாசகர்களுக்குத் தரத் தொடங்கிவிட்டார்கள்; நாடகக் கலைஞருக்குப் பரிசு தரப்பட்டது. அதைப் பொறுமையாகப் பார்க்கின்றவர்களுக்கு நஷ்ட ஈடு தரப்படுகின்றது. இதுவும் பரிசு என்றுதான் கூறப்படுகிறது. அவற்றின் தாக்கம் இவரையும் இந்தச் சொல்லைப் பயன்படுத்தச் செய்து இருக்கிறது.

பரிசு அவளுக்கு விளங்கவில்லை.

''இனாம்'' என்று எளிமைப்படுத்தி அந்தச் சொல்லைக் கூறுகிறார்.

''கண்ணியம் என்னைத் தடுக்கிறது; நீங்கள் என்னை வைத்துப் புண்ணியம் தேடத் தேவை இல்லை'' என்றாள் அவள்.

''இல்லை; பண்டம் தேவை இல்லை; இது ஒரு பொருள் உதவி''

''பெண் ஒருத்தி பணம் பெறுகிறாள் என்றால் உங்களுக்குத் தெரியும்; அவள் தன் உழைப்பைத் தருவாள்; அல்லது அவள் தன்னைத் தருவாள்; வியாபாரம் உழைப்பு; விபசாரம் தன்னைத் தருவது; இதில் முதல் வகுப்பைச் சார்ந்தவள் இவள்; தவறான வழியில் இவளுக்கு ஈட்ட விருப்பம் இல்லை; நீங்கள் தருகிற நன்கொடை அது இன்றைய கலாச்சாரம்; ஒப்புக் கொள்கிறேன்; பழைய கலாச்சாரம் 'ஏற்பது இகழ்ச்சி'; அந்த மரபை மதிக்கிறேன். தயவு செய்து என்னை இழிவுபடுத்த வேண்டாம்; உங்கள் 'நோட்டை' யார் இந்த அறிவுரை உமக்குத் தந்தார்களோ அவர்களிடமே தந்துவிடுங்கள். இதை அவர்களிடம் சொல்லிவிடுங்கள்'' என்று நிதானமாகத் தான் நினைத்ததைச் சொல்லி முடித்தாள்.

அவள் உரைத்தது அவருக்கு உறைத்தது.

# 3

# சொந்த வீடு

அவன் அதை எதிர்பார்க்கவில்லை; விளம்பரம் அவனைத் தூண்டியது.

''வீடு இல்லாதவர்க்கு வீடு'' இது விளம்பரம்.

''உன் பெயரில் வீடு நகரில் இங்கே இருக்கக் கூடாது; உன் மனைவி அல்லது வாரிசுதாரர் இவர்களின் பேரில் எந்த இதர வீடும் இருக்கக் கூடாது'' இது விளம்பரம்.

அதிருஷ்ட வசமாக அவனுக்கு எந்தச் சொத்தும் இல்லை; அவன் அப்பா அம்மா அவனை நடுத் தெருவில் விட்டிருந்தார்கள்; அவன் சொந்த முயற்சியில் காப்பி அடிக்காமல் தேர்வுகள் எழுதிக் காசு கொடுக்காமல் உத்தி யோகம் சம்பாதித்தவன்.

வீட்டு வாரியம் வெளியிட்ட விளம்பரம் அது, புதிய விஸ்தரிப்புகள் பொட்டல் காடுகள் அவற்றை மட்ட விலைக்கு வாங்கிச் சாலைகள் போடாமல் வரைபடம் வரைந்து ஒதுக்கப்பட்ட மனைகள்; அவற்றில் வங்கிக் கடன் பெற்று அங்குல அளவில் அளவிட்டு அடுக்கு மனைகள் கட்டுகிறார்கள். அவற்றுள் இது ஒரு விளம்பரம்.

இவன் எங்கே எதிர்பார்த்தான்; குலுக்கல் முறையில் பரிசுகள் கிடைக்கும் காலம் இது. இவன் அதற்கு எப்போதுமே முனைந்தது இல்லை.

நண்பர்கள் இவனைத் தூண்டினார்கள் "போட்டுப் பாரு; அதிர்ஷ்டம் அடிக்கும்" என்று ஊக்கம் தந்தார்கள்.

விண்ணப்பப் படிவம் பத்து ரூபாய்தான்; அதில் சிரமம் இல்லை; மிகையாகவே ஒன்று வாங்கி வைத்தான். ஒன்று கெட்டால் கூட மற்றொன்று உதவும். இப்படிச் சிலர் அதிக கவனம் செலுத்துவது உண்டு; இவனும் அதைப் போலச் செய்தான்.

இவனுக்கு அரசு பணி இருந்தது. அதுவும் ஒரு அடிப்படை; நிரந்தர வருவாய் எதிர்பார்க்கப்பட்டது; அதற்கு உரிய நற்சான்று முறைப்படி வாங்கிப் பிணைத் தான்.

இவன் போட்டுவிட்டு அதை மறந்துவிட்டான்; 'அக்கரைப் பணம்' என்று ஒரு ஆயிரம் அதற்கு 'டிராப்டு' வாங்கி இணைத்திருந்தான். கிடைக்காவிட்டால் அவர்கள் திருப்பித் தந்துவிடுவார்கள். எந்த நஷ்டமும் இல்லை.

அதில் குடி புகுந்தால் தவணை முறையில் ஆயுளில் கால்பங்கு கட்டிவந்தால் வீடு சொந்தமாகிவிடும் என்று தெரிவித்திருந்தனர்.

குலுக்கல் முறையில் இவன் எண் விழுந்தது; இனி அவன் தப்ப முடியாது; ஆசை யாரை விட்டது; தானாக வந்த சீதேவி; அவளை எப்படி எட்டி உதைக்க முடியும்?

அவனுக்கு ஒரு பெண் பிறந்திருந்தது. அவள் பிறந்த அதிருஷ்டம் என்று அவனுக்கு ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்தியவர் பலர்; அவள் பிறந்ததால்தான் வீடு கிடைத்தது என்பார் சிலர்; வீடு கிடைத்ததால்தான் அவள் பிறந்தாள் என்பார் சிலர் அவனுக்கு அந்தப் பெண் குழந்தை மேல் பாசம் கூடுதல் ஆவதற்கு அதுவும் துணை செய்தது.

அதில் தான் குடி புகுந்தால் தவணை முறையில் 'டியூக்களைக்' கட்ட முடியுமா? வெளியாருக்கு விடுவது

அதிகார பூர்வமாகத் தடை செய்யப்படவில்லை. செயல் முறையில் யாரும் தடுக்கவில்லை. நூற்றுக்குத் தொண் ணூறு பேர் வாடகைக்குத்தான் விட்டார்கள் என்று பேசிக் கொண்டார்கள். யார் அந்தப் பொட்டல் காட்டுக்குப் போக முடியும்?

இருக்கும் இடமே எல்லாவற்றிற்கும் சவுகரியமாக இருந்தது; சாக்கடை நாற்றம்தான்; மற்றபடி ஆபீசுக்கு, குழந்தையைச் சேர்ப்பதற்கு, மார்க்கட்டுக்கு, மற்றபடி பழகி விட்ட இடம்; அதை விட்டு எப்படிப் போவது? எப்பொழுதோ விட்ட இடம்; பழைய குடிக்கூலி; ஏற்ற முடியாது; வீட்டுக்காரர் தொந்தரவு கிடையாது. எம்.ஓ. அனுப்பினால் போதும்; பொங்கலுக்கு இவர்களே சொந்தச் செலவில் சுண்ணாம்பு அடித்துக் கொள்வார்கள். அது ஒன்றுதான்; மற்றபடி அதைவிட்டு வரத் தேவையில்லை; இது அவர்கள் மதிப்பீடு.

அதன் தொகையைக் கட்டுவதற்கு முன் நல்ல விலை வந்தால் விற்றுவிடுவது என்றும் பேசிக் கொண்டிருப்பான்.

கட்டிய மனைவி அவளை எப்படிக் கழற்றிவிட முடியும்? அந்த வீடு ஒட்டி அவனிடம் உறவு கொண்டு விட்டது.

அவன் ஒரு வீட்டுக்கு 'ஓனர்'; உயரிய பதவி. தனக்குச் சென்னையில் ஒரு வீடு இருக்கிறது என்றால் அது தனி கவுரவம்; மதிப்பு; ஒரே ஒன்று;இங்குக் குடி புகுவதென்றால் ரேஷன் கார்டு மாற்ற வேண்டிய தொல்லை; அங்கேயே பழைய இடத்தில் தங்கிவிடுவது என்று முடிவு செய்தான்.

அவனும் அவன் மனைவியும் புதிதாக அவதரித்த சின்ன பெண்ணும் அடிக்கடி 'வாக்கிங்' போக அந்த இடம் ஒரு எல்லையாகப் பயன்பட்டது. அதற்காக ஆகும் ஆட்டோ செலவை அவர்கள் பொருட்படுத்தவில்லை.

புதிய கட்டிடம்; ஆனால் போன பிறகுதான் தெரிந்தது; தீர்க்க தரிசனத்தோடு அந்த வீட்டைக் கட்டி இருக்கிறார்கள். அந்த வீடு யாருக்குமே சொந்தம் இல்லை. ஆறு பேருக்கும் சொந்தம். பிளாட்டு எண்கள் கொடுக் கப்பட்டிருந்தன. முன்னும் பின்னும் எங்கும் கொட்டிய குப்பைகள்; யாரும் கவலைப்படத் தேவை இல்லை; இவர்கள் யாருமே ஓனர் இல்லை; அதனால் அங்கு வீட்டு முன் ஒரு நடமாடும் சலவைச் சாலை வைக்கப் பட்டிருந்தது; அவன் யாரையுமே அனுமதி கேட்டதாகத் தெரியவில்லை. பொதுச் சொத்து; யாருக்குமே உரிமை இல்லை.

நகரங்களில் பழைய வீடுகளை இடிப்பது புதிய வீடுகளை உயர்த்துவது இது நடைமுறையாகிவிட்டது; அதனால் எப்படியும் சில வருஷங்களில் இதையும் இடித்து வேறு வகையாகக் கட்டுவார்கள்; அது தெரிந்து தீர்க்க தரிசனத்தோடு கல்லை மட்டும் சாமர்த்தியமாக ஒட்டவைத்திருந்தனர். அது அங்கங்கே வெடிப்பு நோயால் பாதிக்கப்பட்டு இருந்தது. சிமெண்டு அதிகம் கலக்க வில்லை என்பது பரிசோதனையில் வெளிப் பட்டது; வீடு விழாது; அதன் தவணைகள் கட்டி முடிக்கும் வரை தாங்கும் என்ற உறுதிப்பாடு இருந்தது.

வீடு இடிந்தால் என்ன? செத்தால் இன்சூரன்ஸ் தந்துவிட்டுப் போகிறது; பிழைத்தால் காலி மனை இருக் கிறது; நல்ல விலைக்கு விற்றுவிட முடியும்.

"வீட்டை வாங்கிப்பார்; அதைக் குடித்தனம் விட்டுப் பார்" என்ற புதிய பழ மொழியை அவனால் படைக்க முடிந்தது.

வீட்டுக்கு ஆள் வருவது சிரமமாகத் தான் இருந்தது. ஏன் என்றால் கட்டிய வீடுகள் இரு நூறு; அப்பொழுது அனைத்தும் காலியாக இருந்தது.

அதை அவன் மாற்றி அமைக்க வேண்டி இருந்தது. கதவுகளுக்கும் சன்னல்களுக்கும் கொக்கிகள் போட்டான். காற்றில் கதவு அடித்துக் கொண்டிருந்தது. எல்லாம் காட்டு மரம்; பெயிண்டு அடித்தால்தான் அது அவன் தவணைகள் கட்டி முடிக்கும் வரை தாங்கும்; "ஏன்டா கை வைத்தோம்" என்று ஆகிவிட்டது.

ஊதாரி ஒருத்தியை மணம் செய்து கொண்டு வேதனைப்படுவது போல அவன் நிலைமை ஆயிற்று. எதிர்பார்க்கவில்லை; கை வைத்தால் அது எங்கேயோ கொண்டு போய்விட்டது.

"பொறுத்திருங்கள்; நல்ல விலைக்கு விற்கலாம்; இங்கு மீன் மார்க்கெட் வருகிறது. கேரளாவில் பிடிக்கும் மீன்கள் இங்கு வைத்து விற்கப் போகிறார்கள். காவிரி தண்ணீர் திறந்து விட்டிருக்கிறார்கள்; மீன்களும் மிகுதியாகிவிடும். எங்குப் பிடிக்கிற மீன்களும் இங்குதான் வரவேண்டும்" என்று ஆருடம் கூறினர்.

"காய்கறி மார்க்கட்டு வந்தது; நூறு அடி ரோடு போட்டார்கள். போதவில்லை; இங்கே இரு நூறு அடிக்கு அகலமான பாதை போட இருக்கிறார்கள். இனிமேல் இந்த நகரத்துக்கு இந்த அளவு ரோடுகள் தேவை; நெருக்கடி அதிகம் ஆகப்போகிறது; இந்தச் சென்னை மும்பை, கல்கத்தா ஆகப் போகிறது. நெருக்கடியில் சாகப் போகிறார்கள் என்று தைரியம் தரப்பட்டது.

பின்னால் தெரியும் இது; வளரும் தமிழில் புதுக் கவிதைகள் கதைகள் இடம் பெறும் என்று சொல்வதைப் போல அவர்கள் நம்பிக்கை உரை இருந்தது.

'வீடு காலி' எப்படி விளம்பரம் செய்வது? ஆங்கில ஏடுகளில் தந்தால் கட்டுப்படி ஆகாது; அதிகம் செலவாகும்; மூன்று வரிதான்; மூந் நூறுக்கு மேல் கேட்பார்கள். இவ்வளவு தொகை கொடுப்பதா? கண்டவர்கள் எல்லாம் வீடு கேட்டால் என்ன செய்வது?

பத்திரிகையில் விளம்பரம் தந்தால் தொலைபேசி எண் தர வேண்டும்; இவன் நண்பர் வீட்டு எண் தந்தால் அவர் இதற்குச் சம்மதிப்பாரா? ஒரு நாள் முழுவதும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும்; சில சமயம் தொடர்ந்து ஒரு வாரம் நீடிக்கும்; மழை விட்டாலும் தூவானம் விடாது.

அப்படிக் கொடுத்தாலும் அவர்கள் என்ன கேட் பார் கள்? எத்தனை 'பெட்ரூம்' இருக்கிறது என்று கேட்பார் கள். இரண்டு பெட்ரூம் என்று எப்படிச் சொல்ல முடியும். இருக்கிற ரூம்கள் எல்லாம் பெட்ரூம்தானா? ஒரு பெட்ரூம் தான் இருக்கிறது. 'பாத்ரூம்' ஒட்டு இருக்கிறதா என்று ஒட்டுக் கேட்பார்கள். 'பொது உடைமை' என்றால் அந்தச் சொல் ஒரு சிலருக்குப் பிடிக்காது. அந்தக் கட்சி இன்று செல்வாக்குப் பெறவில்லை என்பது அவன் கணிப்பு.

தீவிரவாதிகள் அவர்கள் யாராவது வந்து கேட்டால் என்ன செய்வது; அவர்களுக்குத் தந்தாலும் தொல்லை; தராவிட்டால் அவர்கள் விடமாட்டார்கள். வரும்போது அவர்கள் தாம் யார் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டா வருகிறார்கள்! 'ஒற்றைக்கண்' இருந்தால் அடையாளம் காண முடியும். அவர்கள் நெற்றிக் கண்ணோடுதானே வருவார்கள். இந்த அச்சம் விளம்பரம் தருவதைத் தடுக்கிறது.

"அதெல்லாம் வேண்டாங்க ஒரு 'டு லெட்' பலகை எழுதி மாட்டி விடுங்கள்; போதும். அதுவும் பழைய காலண்டர் அட்டை அதன் பின்புறம் அழகாக எழுதுங்கள்; கயிறு கூடத் தேவையில்லை; அதிலேயே இருக்கும்; துளைகளாவது இருக்கும்; மாட்டி விடலாம்" என்று ஆலோசனை கூறப்பட்டது.

"ஆங்கிலத்தில் எழுதினால் ஐந்து எழுத்து; பஞ்சாட்சர நாமம்; அதை இந்திய மையில் எழுதுங்கள்; அழியாது" என்றாள்.

"உங்களால் எழுத முடியாவிட்டால் நான் எழுது கிறேன். நான் படித்த பள்ளியில் அழகாக எழுதத்தான் கற்றுத் தந்திருக்கிறார்கள். கான்வெண்டு படிப்பு" என்று தன் பெருமையைப் பகிரங்கப் படுத்தினாள்.

"நம் ஊர் ஓவியர் விளம்பரப் பலகை எழுதுகிறார். அவர் எழுதினால் கவர்ச்சியாக இருக்கும்; நீலப் பின்னணி; வெள்ளை முன்னணி; பார்டர் போட்டு எழுதினால் கண் கொட்டாமல் பார்த்து இந்த வீட்டுக்கு உடனே வருவார் கள்" என்றுரைத்தான்.

"ஏன் அவர் படம் எழுதுவது?"

"விளம்பரம்தான் இன்று காசு; இப்பொழுது அரசு தமிழில் விளம்பரம் செய்யச் சொல்லி இருக்கிறார்கள். நல்ல காசு" தேவை இல்லாத விஷயம் இது; இதைப் பற்றி இவர்கள் பேசினார்கள்.

அடுத்தது அவர்கள் தாவியது ரியல் எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரர்கள்; அவர்களுக்கு என்று இருக்கும் எஸ் டேட்டு ஒரு மேஜை; சுற்றியும் எளிதாக நகர்த்தக் கூடிய பிளாஸ்டிக் நாற்காலிகள்; வீட்டுக்காரர் உதவிய ஒரு தொலைபேசிக் கருவி; அவர்களைச் சுற்றி இயங்கிய உதவியாளர்கள்.

"வீடு வாங்க விற்க எங்களை அணுகுங்கள்" என்ற விளம்பரம் அங்கே தொங்க விடப்பட்டிருந்தது.

இவர்கள் போட்டிருந்த 'டு லெட்' பலகை அவர் களை இவர்களிடம் அணுகச் செய்தது.

அவர்கள் இந்தக் கையில் ஒரு பகுதி; அந்தக் கையில் மற்றொரு பகுதி; இரண்டு கை தட்டினால்தான் ஓசை என்பது அவர்கள் கோட்பாடு; அதைச் சொல்லி அவர்கள் இவர்கள் சுமையை ஏற்றுக் கொண்டார்கள்.

கலியாணம் ஆகிய காலத்தில் இவர்களுக்குத் தரகர் கள் உதவினார்கள். அந்த நன்றியை இவர்கள் மறக்க வில்லை; எல்லாவற்றிற்கும் இன்று தரகர்கள் செயல்படு கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்த ஒன்று; தரகர்கள் இல்லாமல் அவர்களுக்கு அந்த வீடு கிடைத்தது ஒரு விதி விலக்கு என்று பேசினார்கள்.

அந்த 'டு லெட்' பலகை அதிசயப் பிறவியாக அங்கே தொங்கவிடப்பட்டு இருந்தது.

ஒரு கால் அல்லது கை அதிகம் முளைத்து விட்ட குழந்தையைப் பார்ப்பது போல் அதைப் பார்த்துச் சென்றனர்.

''யார் சார் எழுதியது'' என்று முதலில் விசாரணை தொடங்கியது.

எழுத்துப் பிழை இருக்குமோ என்று அந்த வினா அஞ்ச வைத்தது.

''இல்லை சார்; எழுதியது அழகாக இருக்கிறது'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அந்தப் புது வீட்டை நோக்கி இவர்கள் படை எடுக்க நேர்ந்தது; தேர் ஏறிச் செல்லும் அரச குமரர்கள் போல் அடிக்கடி ஆட்டோவில் செல்ல நேர்ந்தது.

ஆட்டோ டிரைவர் ஒருவர் மேலே போட்டுக் கொடுத்ததை மறுத்துவிட்டார். அது அவர்களுக்கு வியப் பைத் தந்தது.

''எங்கள் சங்கம் செய்த முடிவு இது. அதிகம் வாங்க மாட்டோம்'' என்று அடித்துக் கூறினார்.

ஊழலின் ஆணிவேர் அகல்கிறது என்ற எண்ணம் அது தோற்றுவித்தது.

அந்த வீடு ஒரு மாதம் காலியாகக் கிடந்தது. மணமான புதிய தம்பதிகளைப் பிரித்து வைக்கும் ஆடி மாதம் அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தியது. நல்லது நடக்க இந்த ஆடிமாதம் ஏன் தடையாக இருக்கிறது என்பது அவர்களுக்கு விளங்கவில்லை.

பாத்ரூம் ஒட்டி இல்லை என்று எட்டிப்பார்த்தவர்கள் அதை ஒரு பெரிய குறையாகச் சுட்டிக் காட்டினார்கள்.

அதற்கு அவர் ஸ்பார்டெக்ஸ் கல் பதித்து இருந்தார். அதற்குப் பாராட்டும் கிடைத்தது. என்றாலும் அது ஒட்டி உறவு கொள்ளவில்லை என்ற குறை சுட்டப்பட்டது.

''நாங்கள் பேச்சிலர்கள்; எங்களுக்கு வீடு விட முடியுமா?'' என்று விசாரித்தார்கள் சிலர்.

''உங்களுக்குக் கலியாணம்?''

''எங்களுக்கு இப்பொழுது தேவை இல்லை; தேவைப்படும் போது தெரிவிக்கிறோம்; நாங்கள் இரண்டு மூன்று பேர் சேர்ந்து எடுத்துக் கொள்கிறோம்'' என்று உரைத்தனர்.

யாரும் வராவிட்டால் அவர்களுக்கே தருவது என்று நிச்சயிக்கப்பட்டது.

கடைசி வரை அவர்கள் பாச்சிலர்களாக எங்கே இருக்கப் போகிறார்கள். ஆட்கள் மாறிக் கொண்டு இருப் பார்கள்; யோசிக்க வேண்டியது தான் என்று விட்டு வைத்தார்கள்.

''கணவன் மனைவி இரண்டே பேர்'' என்று அறி முகம் செய்து கொண்டு வந்து பேசினார்கள். ''வீட்டைச் சுத்தமாக வைத்திருப்போம்'' என்று உறுதி மொழி தந்தார் கள். ''இவர்கள் மூன்று பேர் ஆவது விரைவில்; குழந்தை இருக்க வேண்டியதுதான். அவர்களுக்கே விடுவது'' என்று தீர்மானிக்கப்பட்டது.

பதிவு அஞ்சல் சட்டக் கல்லூரியில் படித்ததற்கு அடையாளமாக வழக்கு அறிந்தவர் தன் பெயரோடு பட்டமும் சேர்த்து அச்சு ஏட்டில் அனுப்பி இருந்தார்.

''வீட்டுக்காரர் தன் சொந்தத்துக்கு இவர்களுக்கு விடப் பட்டிருந்த வீடு இப்பொழுது தேவை'' என்று எழுதியிருந்தார். அதை அவர் நியமித்தவக்கில் தெரி வித்தார்.

''நீர் சொந்த வீடு வைத்திருப்பதால் மறுப்புக் கூறமுடியாது; எங்கள் சொந்தத்துக்குத் தேவை'' என்று காரணம் காட்டிக் கேட்கப்பட்டு இருந்தது.

காலத் தவணை வேறு கொடுக்கப்பட்டிருந்தது.

காலி செய்யாவிட்டால் வழக்குச் செலவும் கட்டித்தர வேண்டி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பதிவு அஞ்சல் செலவும் அதனுள் அடக்கம் என்பது தெரிந்த ஒன்று.

இந்த அதிர்ச்சியைத் தாங்க இயலவில்லை. குலுக்கல் முறையில் எது வந்தாலும் அது சங்கடம்தான். ஏற்கக் கூடாது. சவுகரியமாக இருந்த வீடு; வருங்கால மீன் மார்க்கெட்டு வளாகத்துக்குப் போய்த்தான் தீரவேண்டும்.

''சரி! நம் சொந்த வீடு'' ஆறுதல் மொழி அவர்களை அமைதிப்படுத்தியது. யாரும் அவர்களை வெளியேறச் சொல்லமாட்டார்கள்.

# 4

# எல்லை கடந்த நிலை

'வியட்நாம் வீடு' இதுதான் இந்தச் சுந்தரத்தின் வீடு. அதாவது 'ஒய்வு' அவருக்குத் தர இன்னும் சில புது வருடங்கள் பிறக்க வேண்டும். 'சீட்டுக் கிழிய' பல சீட்டு கள் கிழிபட வேண்டும்; என்றாலும் 'அந்தநாள்' அவர் எதிர்பார்த்த நாள்.

அதற்குள்ளாக வீட்டு 'பைல்' எடுத்துத் தீர்த்து முடித்தால் அதற்கப்புறம் அவர் 'சீனியர் சிட்டிசன்' ஆகி விடலாம். இப்பொழுது வயது முதிர்ந்தவருக்குத் தரப்படும் முத்திரை அது; வரி விலக்குகள், ரயில் பயணச் சலுகைகள், பஸ்ஸில் முந்தியில் குந்துவதற்கு ஒரு இடம். பெரியவர் என்ற பெருமைக்குத் தள்ளப்படும் வயது; அது வாழ்வின் எல்லை; அதற்குள் அவர் கடக்க வேண்டிய மைல்கல் மூன்று.

மூன்றும் பெண்ணாகப் பிறக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை; எதிர்பாராமல் நடப்பது விபத்து என்று சொல்வார்கள். பழகி விடுகிறது.

இதனால் பண்பாடு ஏற்படுகிறது. பொறுப்புள்ள வராகுவதற்கு இந்தப் பெண் பெற்றமை பெரிதும் உதவு கிறது; நரைமுடிகள் அவற்றிற்குக் காரண கர்த்தாவாக இந்த உதயங்கள் அவருக்கு உதவின.

அவர் கொஞ்சம் தமிழ்ப் பற்று உடையவர். அவரைத் 'தமிழ்மகன்' என்றும் கூறலாம். எதிலும் தமிழ்; எங்கும் தமிழ் என்பதில் அவருக்கு நாட்டம் மிகுதி. தன் மூத்த பெண்ணுக்கு அவர் மனைவி வைத்த பெயர் 'லட்சுமி'; இவர் மாற்றி வைத்தது 'திருமகள்'; அப்படித் தான் அந்தப் பெண் பதிவு செய்யப்பட்டாள். சிலர் அவளைத் 'தெருமகள்' என்று திரித்துக் கூறியது அவளுக்கு வேதனையாகத்தான் இருந்தது. என்றாலும், ஏட்டுப் பெயரை அவர்கள் மாற்றவே இல்லை. அவள் மண அழைப்பில் 'திருநிறைச் செல்வி திருமகள்' என்றே அழ காக அச்சிடப்பட்டது.

லட்சணமா லட்சுமி என்றே இருந்திருக்கலாம். அவர் தமிழ்ப் பற்று அவளை மாற்றி விட்டது. 'திரு', 'திரு' என்று கூப்பிடுவதற்கு இது சவுகரியமாகவே இருந்தது; இருக் கட்டும்; அவள் 'திரு திரு' என்ற விழிப்பும் அவளுக்கு அழகு தந்தது.

"என்னடா மூணும் பெண்; என்ன செய்யப் போறே" என்று இவர் அவரைக் கேட்டார். அவருடைய நல்வாழ்வில் அக்கரை இருப்பதால் இந்த வினாவினை எழுப்ப நேர்ந்தது.

மூன்று மனைகள் வாங்கிப் போட்டு இருக்கேன். அண்ணாநகரில் இப்பொழுது என்ன விலை போகிறது தெரியுமா? அந்தக் காலத்தில் வாங்கிப் போட்டது இன்று ஒவ்வொன்றும் 'முப்பது இலட்சம்' என்று தெம்போடு பதில் சொல்கிறார்.

"எல்லாம் இந்தப் பெண்களுக்குத்தானே அந்த மனை அதற்காகவே வந்து கட்டிக் கொண்டு போய்விடு வார்கள்" என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்.

மூன்றும் நட்சத்திரங்கள் போல் ஒளி விட்டன. ஆனால் ஒன்றுகூட நட்சத்திரம் ஆகவில்லை; ஒழுங்காகப்

படித்து புரோகிரஸ் ரிப்போர்ட்டில் 'முதல்' அல்லது இரண்டு இப்படியே விளக்கம் பெற்று ஒளிவிட்டன.

தை மாசங்கள் கடக்கின்றன. ''இப்பொழுது என்ன அவசரம்? அடுத்த தைக்குள் முடித்துவிடலாம் ''என்று கூறி வந்தார்.

'இனி மேலா ஒருத்தன் பிறக்கப் போறான். ஏற் கெனவே பிறந்திருக்கிறான்' என்கிற அபார உண்மையை அடிக்கடிச் சொல்லி வந்தார்.

''அப்படிப் பிறந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை; யார் பார்த்தார்கள்'' என்று கூறினார் இவர். அது இருவருக்கும் சிரிப்பை உண்டாக்கித் தந்தது.

''எப்படி? சாதிக்குள் தானே?''

''நாங்க அவ்வளவு தூரம் முன்னேற்றம் அடை யலை. உள்ளூரிலேயே ஒரு ஓணானைப் பிடிக்க வேண்டி யதுதான்; நமக்கு வெளியூர் கட்டுப்படியாகாது. முறை யிலே பார்த்தோம். உறையிலே இருக்கிற வெண்ணெய் மாதிரிதான்; எவன் சரியாப் படிக்கிறான். நம்ம பெண் ணுக்குப் படிச்சவனை எதிர்பார்க்கிறோம். கேட்கிறதைக் கொடுத்துவிடலாம். இப்படி அவர் பேசி வந்தது கேட்டுக் கேட்டுப் பழைய பாட்டாக ஆகிவிட்டது.

''புதிய பாடல்' அது ஏதாவது?''

''முடியட்டும் சொல்றேன். உனக்குச் சொல்லாமலா நடக்கப் போகுது. நீ வராமல் நடக்கவே நடக்காது'' என்று உறுதி அளித்தார்.

அடுத்தவள் கலைமகள். சரஸ்வதி அதை மாற்றி அவர் வைத்த பெயர் 'கலா'; பதிவில் கலைமகள்; ஒவ்வொருவரும் கூப்பிட்டது 'கலா' என்பதுதான்.

இரண்டுக்கும் வயது வித்தியாசம் அதிகம் இல்லை; விளம்பர இடைவெளிதான். அதிகம் இல்லை; அடுத்த

வெளியீடு இரண்டாவது சானல்; புதிய படம்; சிலசமயம் இவளையே மூத்தவள் என்று பல பேர் நினைத்தார்கள். உயரம்; அதுதான் காரணம்.

'இரண்டு' அதைப் பற்றி அவர் கவலைப்படவே இல்லை; படைப்பே இரண்டுதான் என்பார். கண், காது, கால், கை எல்லாம் இறைவன் படைப்புகள். அதுபோல் இரண்டு பெண்கள்; அழகாகத்தான் இருந்தனர். வேண்டியதுதான்; 'மூன்றாவது கண்' அது நெற்றிக்கண்; அது மானிடர்க்குத் தேவை இல்லை; வெறும் பொட்டு போதும். அது அழகு தரும்.

மூன்றாவது இவளுக்கு அவர் மனைவி வைத்த பெயர் பார்வதி; இவர் மாற்றியது 'மலைமகள்'. எப்படித் தான் இந்தத் தமிழ்மகனுக்கு இந்த மூன்று பெயர்கள் கிடைத்தனவோ தெரியவில்லை. திருமகள், கலைமகள், மலைமகள்; அழகான பெயர்கள் மற்றவர்கள் அவளை மலையாகக் கருதினர்., 'மலை', 'மலை' என்று கூப் பிட்டார்கள். எப்படி இவருக்கு மூணும் பெண்கள் என்பது பலருக்கு மலைப்பாகவே இருந்தது.

அவர் தனியாக வரும்போது எந்தச் சுமையோடும் வருவது இல்லை. "கடலில் கணபதியைக் கரைத்தனர். எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை; அது அன்றைய பத்தரிகைச் செய்தி.

வேறு என்ன அவரால் பேச முடியும்? அவருக்குப் பிடித்த செய்தி அது; நாட்டு நடப்பில் அவர் காட்டிய அக்கரை அது.

அவர் வந்து சந்தித்த நாளில் 'கிளிண்டன் காதல் விவகாரம்' பத்திரிகையில் இடம் பெறவில்லை. இருந்தால் அதை அவர் கேட்டிருப்பார். 'அவரும் மனுஷன் தானே' என்று இவர் பதில் சொல்ல வேண்டி இருந்திருக்கும்.

இரண்டு பேர் கணவன் மனைவி இவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். கார் வெளியே நின்றது; நிச்சயம் மண அழைப்பிதழ்தான். அவர்களுக்கு உபசரிப்புத் தரப் பட்டது. உட்கார வைத்துப் பேசி முடித்த பிறகு, "சேஷ மகாலில் வைத்திருக்கிறோம்; வந்து விடுங்கள்" என்றார் கள்.

"விசேஷமான செய்திதான். நிறையபேர் வருவார் கள். இன்று அதுதானே சடங்காகி விட்டது. மாலையில் கச்சேரி; காலையில் கல்யாணம். இது நம்ம கலாச்சாரம். வாழ்க்கையிலே ஒருமுறைதான் சந்தோஷமா இருக்க முடி கிறது. அது இதுதான்" என்று நியாயப்படுத்தினார்.

"இவருக்கு என்ன அவர் சேஷ மகாலில் வைக் கட்டும்; இல்லை ரஜினி வைத்திருக்கிற ராகவேந்திரா மண்டபமாவது இருக்கட்டும்; ஏ.வி.எம். வைத்திருக் கலாம். அது கூடிய விரைவில் எடுத்துவிடப் போகிறார்கள் என்று கேள்வி.

'வாசன்' படப்பிடிப்பு அது காம்ப்ளெக்ஸ் ஆகி விட்டது. நிறைய பணம் பண்ணி விட்டார்கள். இனிமேல் எல்லாம் காம்ப்ளெக்ஸ்தான்.

இதுமுதல் வரவேற்பு.

அடுத்தது அப்படியே வருவார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

"அடுத்தவள்; அவளே முடித்துக் கொண்டாள். டின்னர் மட்டும் வச்சிருக்கேன் "என்று நீட்டினார்.

"அவள் மீறிவிட்டாள். அவளாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டாள். பையன் டெல்லியில் வேலை பார்க்கிறான். இந்திக்காரன் அவனுக்குத் தமிழே தெரியாது. அதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது".

தமிழ் மகன் அவரால் இதைச் சீரணம் செய்து கொள்ள முடியவில்லை.

"உன் பேரன் பேர்த்திக்கு என்ன பெயர் வைக்கப் போறீங்க"

தமிழ்மகன் அவர் பெயரன் பாரத நாட்டுக் குடிமகன் ஆகப் போகிறான். எல்லை கடக்கும் நிலை ஏற்படுகிறது.

அவரால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை; அவர் சொந்தத்தில் பார்த்த இடம் எதுவும் சரிப்பட்டு வரவில்லை; அவள் சுய நிர்ணயம் வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்ததால் தனி மாகாணம் அமைத்துக் கொண்டாள்.

"மலைமகள் அவள் நிச்சயம் உறுதியாகத்தான் செயல்படுவாள். படிப்படியாக நாடு முன்னேற்றம் அடைகிறது என்று சொல்கிறார்கள். அது உண்மைதான்.

"அவள் என்ன சொல்கிறாள்?"

"விசா வாங்க விடியற்காலையிலேயே போய் எம்பசியில் கியூவில் நிற்கிறாள்."

"எதுக்கு?"

"அவள் அலைமகள் ஆகிறாள்; கடல் கடக்கிறாள்; கிளிண்டன் தேசத்து விசிட்டர் ஆகிறாள்.

"அந்த ஊரில் நம்ம சாதிக்காரன் எவனையாவது பார்த்தால்"

"இவளுக்குப் பச்சை அட்டை இல்லை. அது இருந்தான்தான் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்."

"வாங்கி விடுகிறாள். படிக்க விடுங்கள்; அவள் போகட்டும்"

"சரி அவள் முயற்சி; இளைஞர்களுக்கு நாம் வழி காட்ட முடியாது; அவர்களே தேடிக் கொள்கிறார்கள்."

"படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், தொழில் துறை வல்லுநர்கள், மருத்துவர்கள் இவர்கள் எல்லாம் நம்

நாட்டில் படிக்கிறார்கள. இவர்கள் இங்கே உருவாக்கப்படு கிறார்கள். ஆனால் இவர்கள் வெளிநாடுகளுக்குச் சேவை செய்கிறார்கள். இன்று இந்த மோகம் மிகுந்துவிட்டது'' என்று எடுத்து உரைத்தார்.

''இன்று இளைஞர்களுக்கு நாட்டுப் பற்று இல்லை; தம் வாழ்வு அதுதான் அவர்கள் நினைக்கிறார்கள். அந்த அலையோட்டத்தில் இவளும் ஒருத்தி'' என்று நியாயப் படுத்தினார்.

''இளைஞர்களைப் பயன்படுத்த நாடு தவறி விட்டது'' என்று உரைத்தார் இவர்.

''இல்லை; இவர்கள் அந்நியச் செலாவணி ஈட்டு கிறார்கள்; அதனால் இந்த நாடு நன்மை அடைகிறது'' என்று சாதித்தார்.

அவரைச் சந்தித்து மூன்று காலண்டர்கள் மாறி விட்டன.

''எப்படி உங்கள் கடைசிப் பெண்''

இந்தக் கேள்வி கேட்கப்பட்டது.

''அவள் அங்கேயே செட்டில் ஆகிவிட்டாள்''

''பையன் ?''

''அவன் அந்த நாட்டு மண்ணின் மைந்தன். அமெரிக்கக் குடிமகன்''

தமிழ்மகன் இங்கு இவர்; அங்கு அவர் மருமகன் அமெரிக்கக் குடிமகன். அவர் எப்படி ஏற்றுக் கொண்டார்? விளங்கவில்லை.

''நீங்கள் தடுத்து நிறுத்தி இருக்கலாமே''

''என் உபதேசம் சில பேருக்குத்தான் எடுபடும். மொழிப் பற்று, நாட்டுப்பற்று இவற்றை வற்புறுத்து

கிறோம். கற்பிக்கிறோம். இளைஞர்கள் அவர்கள் இன்று மாறி விட்டனர். 'உலகக் குடிமகன்' என்று தன்னை ஆக்கிக் கொள்கிறார்கள். எல்லை கடந்த நிலை இது'' என்று அந்த வியாட்நாம் வீட்டுச் சுந்தரம் தன் கருத்தை வெளியிடுகிறார். எங்கிருந்தாலும் அவர்கள் தமிழ்க் குடி மக்கள்தான் என்று சொல்லித் தன்னைத் தேற்றிக் கொண் டார். ''செடி ஒன்றுதான். மண் வேறு; அவ்வளவுதான்'' என்று நியாயப்படுத்தினார். எதற்கும் உவமை யாராலும் படைக்க முடிகிறது. அது அவருக்குச் சமாதானம் அளிக் கிறது.

# 5

# தவறு திருத்தப்பட்டது

வயதானவர்கள்; அதனால் அவர்கள் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஆயினர்.

உண்டதுபோக எஞ்சியது சேர்த்து வைக்க வேண் டிய அவசியம் ஏற்பட்டது. பணத்தைத் தூக்கி எறியவா முடியும்.

எப்படி அவர்களால் சேமித்து வைக்க முடிந்தது?. பிக்கல் பிடுங்கல் இல்லை. அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதியில் திருநீலகண்டர் ஆயினர்.

குழந்தைகள் பெற்றுக் கொள்வது இல்லை என்பது அவர்கள் எடுத்துக் கொண்ட முடிவு. காரணம் அவர்கள் மண வாழ்த்தில் தரப்பட்ட அறிவுரை அது.

"உறவாடுவதில் கவனம் செலுத்த வேண்டும்; குடும்பம் சந்தோஷமாய் இருக்க வேண்டுமானால் குழந் தைகளைப் பெறுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்று அறிவுறுத்தப்பட்டது".

திருமணமே இந்தக் குழந்தைகளைப் பெறுவதுதான் என்பது தவறான கருத்து. பாட்டனும் பாட்டியும் கேட்டுக் கொள்வது அவர்கள் எடுத்துப் பராமரிக்க ஒன்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்; என்பது அவர்கள் வேண்டுகோள் இது. இது தவறான கருத்து.

"நாட்டின் பொருளாதாரம் இந்தக் குழந்தைக் குறைப்பை எதிர்நோக்கி இருக்கிறது. முதியவர்கள் இன்று விரைவில் சாவை எதிர் நோக்குவது இல்லை. மருத்துவ மும், வசதிமிக்க வாழ்க்கையும் அவர்களை எண்பது, தொண்ணூறு என்று எண்களை எண்ண வைக்கிறது".

"பழங்காலத்தில் ஐம்பது அறுபது அதற்குள் அவர் கள் முடித்துக் கொண்டார்கள். குழந்தைகள் குறைப்பது தேவைப்படவில்லை. இன்று எண்ணிச் செயல்பட வேண்டி யுள்ளது".

"அரசியல்வாதிகள் விழிப்போடு இருக்கிறார்கள்; போரைத் தவிர்க்கிறார்கள். அதனால் அழிவுகள் மிகவும் குறைவு".

"இன்று வறுமை, வேலையின்மை, நாட்டைப் பிடித்த நோய்கள் இவை; மக்கள் எண்ணிக்கை லட்சம், கோடிகள் என்ற எண்ணைத் தொட்டுவிட்டது".

"வெளிநாட்டில் இருந்து குடியேறியவர்கள் அவர் கள் வேறு நெருக்கடி. வங்காள தேசம் அங்கிருந்து வந்தவர்கள், கடல் கடந்து குடியேறிவர்கள் இவர்களுக் கெல்லாம் புகலிடம் தரவேண்டியுள்ளது".

"திட்டமிட்ட வாழ்க்கை இன்று தேவைப்படுகிறது. மணமக்கள் உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். தாம்பத்திய

வாழ்வுக்குக் குழந்தைகள் தேவை என்பது பழைய கருத்து. உறுதியாக இருங்கள். பெறுவதைத் தவிர்க்க; ஒருவர் இருவராவது வழிகாட்டுங்கள்''. மைக் அலற அவர்கள் கூறிய கருத்துகள் ஆழப் பதிந்தன.

முதலில் இவர்கள் தவிர்த்தார்கள். பின் இவர்கள் முயன்றார்கள். குழந்தைகள் இவர்களைத் தவிர்த்தன. வறண்ட மண் அதில் பயிர் விளையவில்லை.

இந்தச் சொற்பொழிவு நடந்தது முப்பது ஆண்டு களுக்கு முன். அவர்கள் கட்டிய வீடு சுத்தமாக இருந்தது. தெய்வப் படங்களை நிரப்பி அந்த வீட்டை நிறைவு செய்தார்கள்.

பகுத்தறிவுச் சொற்பொழிவு அவர்கள் கேட்டது; அது அவர்களை அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஆக்கி யது. சேர்த்து வைத்த பணம் அந்தக் கட்டிடத்தில் மேலும் சில அறைகளை விரிவுபடுத்தின.

தமக்குத் துணை தேடினர். குறைந்த எண்ணிக்கை உடையவர்களை அவர்கள் குடியமர்த்தினர்.

அவர்கள் இவர்களுக்குத் துணை நின்றனர். மருத்துவமனையில் இவர்கள் நுழைவுச் சீட்டுப் பெற்ற பொழுதெல்லாம் கட்டுச் சோறு கொண்டு வந்து தந்தார்கள்.

''யார் இவர்கள்?''

''குடித்தனக்காரர்கள்''

இப்படி இவர்கள் அறிமுகம் செய்விக்கப்பட்டனர்.

அவர்கள் வீடு ஒரு ரயில் பெட்டி; வருவார்கள்; தங்குவார்கள்; பயணம் முடிந்ததும் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள்.

இந்த வீட்டுக்கு வந்தவர்கள் எல்லாம் சொந்த வீடு கட்டிக் கொண்டு போய் விட்டார்கள். அது அந்த ''வீட்டு ராசி'' என்று அவர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

இப்பொழுது அவர்கள் தேர்ந்து ஏற்றுக் கொண்டது ஒரு புருஷன் அவனுக்கு ஒரு மனைவி. அவர்கள் காதலித்து மணம் செய்து கொண்டவர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அதற்குத் தண்டனை தான் அவர்கள் அங்குத் தனிக் குடித்தனம் அமைத்தது.

நிலையான ஆட்சியைத்தான் இம் முதியவர்கள் விரும்பினார்கள். அவரவர் மாற்றலாகிச் சென்று கொண்டே இருந்தனர்.

இவர்கள் வந்தவர்கள் ஓரிரு மாதங்களிலேயே வாக்கு வாதங்கள் தொடங்கி இவர்கள் இடையீட்டை எதிர்பார்த்தனர்; இவர்கள் சமாதான முயற்சி அவர் களுக்குத் தேவைப்பட்டது.

சில சமயம் தட்டுகள் பறந்து வெளியே வந்து விழுந்தன. பறக்கும் தட்டுகளைப் பார்த்தனர். அவற் றிற்குச் சிறகுகள் இல்லை; தாமாகப் பறந்து வந்து விழ வில்லை.

மாறுபட்ட கட்சிக்காரர்கள் கூட்டு அரசியல் நடத்து வதுபோல அவர்கள் பேச்சு வார்த்தைகளில் கருத்து வேறுபாடுகள் நிலவின.

''மைக்கை எடுத்து வீசினர்; கைக்கு வந்தவற்றைக் கிழித்து எறிந்தனர்'' என்ற செய்திகள் வர அது பாராளு மன்றம் அல்ல.

தட்டு முட்டுகள்தாம் தாளம் போட்டன. முகங்களில் கோணல்கள் அவர்கள் முணுமுணுப்பைத் தெரிவித்தன.

ஐ.நா.சபை அவர்களுக்குத் தேவைப்பட்டது. இவர் கள் முறையிடாமலேயே இவர்களின் குறைகளைக் கேட்க அப் பெரியவர்கள் வந்தனர்.

''காதலித்துத் தானே திருமணம் செய்து கொண் டீர்கள்?''

"அவ்வளவு முட்டாள்கள் அல்ல; என் பெற்றோர் கள் முனையவில்லை; அவர்களால் இயலவில்லை; நானே அவரைத் தேர்ந்தெடுத்தேன்; அவ்வளவுதான்" என்றாள்.

தேர்ந்தெடுப்பது எல்லாம் காதல் திருமணம் அல்ல என்பது அவர்கள் சொல்லித்தான் அவர்களுக்குத் தெரிந்தது.

எதிர்கட்சியின் வாதம் அதைக் கேட்க விரும்பினர்.

"இன்று மண வாழ்க்கை வெறும் ஒப்பந்தம் தான். அரசியல் கூட்டு எப்படியோ அப்படித்தான்".

"நான் விரும்பியவள் அவள் என்னை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அப்படி அவளும் ஒப்புக் கொண்டிருந்தால் அது காதல் கலியாணம்தான்."

"வேறு வழி இல்லை. இவளோடு கூட்டுச் சேர்ந் தேன். அவசியம் அவளோடு என்னை இணைத்தது" என்று விளக்கம் தந்தான் அவன்.

"அரசியலில்தான் கொள்கை இல்லை; எதுவும் நிரந்தரம் இல்லை என்று வாய் கூசாமல் கூறுகிறார்கள்."

" எது எப்பொழுது முடிவு எடுப்பது? எது சரி? என்ற வாசகம் இங்கும் சேர்ந்துவிட்டது."

"காரண காரியங்கள் செத்து விட்டன. எது நல்லது என்பது சூழ்நிலைதான் முடிவு செய்கிறது. இதுதான் எங்கள் உறவும்" என்றான் அவன்.

அரசியல் அவனைப் பெரிதும் ஆட்கொண்டுள்ளது என்பது தெரிய வந்தது. எதையும் அரசியல் பரிபாஷை யிலேயே அவன் விளக்க முற்பட்டான்.

அவர்கள் கருத்து வேறுபாடு காவிரிப் பிரச்சினை அல்ல; வேலைக்காரி மாற்றம் செய்தது அல்ல. ஏதோ அடிப்படைக் கொள்கைப் பிரச்சினை என்பது தெரிந்தது.

அவசரப்பட்டு இவர்கள் எந்த முடிவும் சொல்ல முன்வரவில்லை.

''கருவைக் கலைக்க வேண்டும் என்பது என் கருத்து. அதை வற்புறுத்துகிறேன். அதற்கு அவர் ஒப்புக் கொள்ளவில்லை'' என்றாள் அவள்.

ஆட்சிக் கலைப்புப் பிரச்சினை போல் இது அவர்கள் எடுத்துக் கொண்டது.

''பெண் தாய்மை அடைவதுதான் அவள் வாழ்வின் நிறைவு; குடும்பப் பிணைப்புக்குக் குழந்தை தேவை. இது என் கருத்து'' என்றான்.

மறுபடியும் அவள் பேசினாள். ''தாய்மைப் பேறு இயற்கை தந்த வரம்; பெண்ணுக்கு அது அவள் உடற் கூறு; பேதமே இதில்தான் படைப்பில் அமைந்துள்ளது. ஒப்புக் கொள்கிறேன்''

''கரு ஏற்றுக் குழந்தை பெறுவதும் பெற்றுக் கொள்ளாததும் என் விருப்பம். இயற்கை கட்டுப்படுத்த வில்லை''என்றாள் அவள்.

இறைவனை அப் பெரியவர் வாதத்திற்கு அழைத் தார். ''பெண் தாய்மை அடைவது பரிணாம வளர்ச்சி; அது தேவையில்லை என்றால் திருமணமே தேவை இல்லை; இருவர் பிணைப்பு அர்த்தமற்றது. ஒவ்வொரு பெண்ணும் குழந்தைக்குத் தாய் ஆவது ஆண்டவன் கட்டளை'' என்றார்.

பத்துக் கட்டளைகளை அவர் படித்தாரோ இல்லை யோ இவராகக் கற்பித்துக் கூறியது இது என்பது மறக்க முடியாத ஒன்று.

''இன்று பெண்கள் ஆண்களைப் போல் தொழில் செய்கிறார்கள். நான் உத்தியோகம் செய்கிறேன். அதற்கே என் பொழுது முழுமையும் தேவைப்படுகிறது. இன்னும்

சமுதாயக் கடன்கள் நிறைய இருக்கின்றன. இந்தக் கூண்டுக்குள் அகப்பட்டு இதுதான் எல்லை என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை''.

''என்று பெண் தொழில் செய்ய நிர்பந்திக்கப் பட்டாளோ அன்றே இந்த இயற்கைக் கடமை அவளுக்கு இல்லை''.

''இந்தத் தேசம் புனர் வாழ்வு பெற வேண்டும். சீனா ஒரு குழந்தைக்கு மேல் அனுமதிப்பது இல்லை. ஷா பேரறிஞர் இது பாபம் என்று துணிந்து கூறியுள்ளார். என் கொள்கை உறுதியானது. இதுதான் எங்கள் கருத்து வேறு பாடு'' என்று தெளிவுபடுத்தினாள்.

அவரால் இந்த வாதத்தை மறுக்க முடியவில்லை. தீர்ப்பு வழங்குவது எளிதில் இயலாது என அறிகின்றார்.

நீதிபதிகள் விசாரித்த உடனயே தீர்ப்புகள் தருவது இல்லை; அதற்குக் காரணம் இருக்கிறது. ஆற அமரச் சிந்தித்து இரு தரப்பு வாதங்களையும் எழுதியபின் தீர்ப்புக் கூற வேண்டியுள்ளது. மற்றும் அவரசப்பட்டால் பாதிக்கப் பட்டவனுக்கு ஆவேசம் கிளம்பும். நீதிமன்றம் அதன் நிலை குலைந்து நிற்கும்.

இரண்டு பேர் கலந்து பேசிக் கருத்துக் கூறவேண்டிய தீர்ப்பு அது என்று பட்டது. நாற்காலி பெஞ்சாக மாற வேண்டி ஏற்பட்டது:

''அவள் சொல்வது இது; அந்தப் பெண் சொல்வதில் நியாயம் இருக்கிறது. அவள் வீட்டில் அடங்கி இருக்கும் குடும்பப் பெண்ணல்ல; தொழில் செய்கிற அவளுக்குக் குழந்தை தேவையில்லை. இது என் கருத்து'' என்றார். மூத்த நீதிபதி.

''நம் வாழ்க்கை அவர்களுக்கெல்லாம் பாடம். வாரிசு இல்லாத சொத்து. பெயர் சொல்லப் பிள்ளை இல்லாத

குறை. நமக்கு ஆதரவாய் ஒரு பெண்; உறுதுணையாய் ஒரு மகன்; இரண்டும் இல்லை. விழிகள் இருக்கின்றன நமக்கு; பார்வை இல்லை என்றார் அம் மூதாட்டி.

அவருக்கு அது அதிர்ச்சியைத் தந்தது. தம் வாழ் வில் ஒளி இல்லை என்பதை அவள் குறிப்பிட்டது அவருக்கு ஞானம் தந்தது.

''குழந்தைகளே வேண்டாம் என்பது மடமை; ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை தேவை. இதை வற்புறுத்து வதுதான் நல்லது''.

''பெரியவர்கள் இந்த உலகத்தைக் கெடுத்து விட் டார்கள். அவர்களால் இதை மாற்ற முடியாது; திருத்த முடியாது. புதிய சமுதாயம் பிறக்க வேண்டும். இளைய தலைமுறை தேவை; இந்த இருவரும் உலகத்தைச் சீர் செய்யக் குழந்தைகள் தேவை''என்ற முடிவுக்கு வந்தனர்.

''தைரியமாக ஒரு குழந்தையைத் தாங்கு. அதன் சுமையை எங்களுக்கு விட்டுவிடு. பெறுபவரே இறுதி வரை சுமக்க வேண்டும் என்ற நியதி தவறு; குழந்தை இந்தச் சமுதாயத்தின் சொத்து. அதை வளர்ப்பது எங்கள் கடமை. நாங்கள் வேலை வெட்டி இல்லாமல் இருக் கிறோம். எங்களுக்கு அது வாரிசு என்ற உணர்வு ததும்பத் தம் கருத்தினை வெளியிட்டனர். குழந்தைகள் அவற்றின் வளர்ச்சி, கல்வி இவை சமுதாயத்தில் பொறுப்பு என்ற புதிய கருத்து அவளை மாற்றியது.

அதன்பின் கூட்டு எந்தச் சிக்கல் இல்லாமல் தொடர்ந்தது.

# 6

# நூலிழை

'மயிர் இழையில் தப்பினான்' என்று சொல்வது எழுதுவது பத்திரிகை மரபு; இது அமங்கலமான சொல்; அதனால் 'நூல் இழை' என்ற ஒரு சொல் உள்ளது என்பது அறிய வேண்டிய சொல்வழக்கு.

சாவுக்கும் வாழ்வுக்கும் சில சமயம் இவ்வளவே நெருக்கம் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

''அந்தப் பெண் மரணத்தைத் தழுவினாள்; மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் ஆயினாள். காவல் நிலையம் சென்றாள்; வீடு வந்தாள்; சாவின் நிலையை அடைந்தாள். நடந்தது என்ன? அவள் மானம் தொடப்பட்டது; அவள் நிதானம் இழந்தாள்'' இது ஒரு பத்திரிகைச் செய்தி.

''கல்லூரி முன் கலகலப்பாகச் சென்றாள்; சலசலப்பு நடந்தது; தொட்டார்கள்; அவள் துவண்டாள்; தரையில் விழுந்து அவள் புரண்டாள்; பின் எழவே இல்லை'' பரபரப்பான செய்தி.

சாவு இவ்வளவு எளிதாக வரும் என்று யார் எதிர்பார்த்தார்கள்? கணத்தில் இந்த மாற்றம், சாவு அவர்கள் மடியைத் தொட்டது; அது எப்படி வரும்? யாரை எப்படித் தொடும் என்று கூற முடியாது.

அவன் ஒரு கவிஞன். கவிதை எழுதினான்; அவனால் சும்மா இருக்க முடியவில்லை; அதை அச்சிட்டு

அதன் எழுத்தழகில் மயங்குவான். தன் நெருங்கிய நண்பர்களுக்கு வலியக் கொண்டு போய்க் கொடுப்பான்,. அவர்கள் அதைப் படிக்க மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியாது; ஆர்வம் இத் தவறைச் செய்யத் தூண்டுகிறது.

அதை யாராவது படிக்க வேண்டும்; பாராட்ட வேண்டும் என்பது அவன் ஆசை; அதற்குக் காரணம் சினிமாக் கவிஞர்களைப் பற்றிப் பலரும் பாராட்டிப் பேசுவதால்தான்; 'கவி அரசு' அந்தப் பட்டம் இவனைக் கவர்கிறது. இவனைப் பற்றிப் பலரும் முரசு கொட்ட வேண்டும் என்பது இவன் வேட்கை; அதை அச்சிடுவது, வெளியிடுவது ஒரு திருமண வைபவம்தான்.

கலைஞரை அழைத்து வெளியிட வேண்டும் என்பது இவன் பெரு விருப்பு. அது நிறைவேறவில்லை. அந்த அளவு இவன் வளரவில்லை; வளரும் கலைஞர் என்ற வரிசையில் இவனுக்கு ஒரு இடம் கிடைத்தது. பாராட்டுரைகள் அவை அவன் வளர்ச்சிக்கு உரம் ஆயின.

யார் கண்ணில் படுகிறார்களோ அவர்கள் அவனுக்கு இலக்கு ஆயினர். தனக்குப் பழக்கமான மருத்துவர் அவரைக் கண்டதும் தன் சாதனையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசை; அவர் பெயரிட்டு அவர்பால் தான் வைத்திருக்கும் மதிப்பு மரியாதை அதை அளவிட்டு அதற்கு முன்னால் அதை எழுதி இட்டுக் கீழே தன் பேனாவைப் பதித்துவிட்டுத் தருகிறான்.

அவர் பார்வை வேறு; எந்த மனிதரையும் ஆரோக்கியம் உள்ளவர் என்று அவர் நினைப்பது இல்லை; இந்தக் கவிதை நூல் நீட்டியதும் இவன் ஒருவகை மன நோயாளி என்பது அவர் கணிப்பு. என்றாலும் காணிக்கை என்பதால் கை நீட்டி வாங்குகிறார். நூலுக்கு அச்சிட்ட அதைவிட அதன் முகப்புப் படத்துக்கு அவன் அதிகம் செலவு செய்திருப்பது அவருக்குத் தெரிகிறது.

'கவர்ச்சி; அதற்காக அவன் போட்ட ஜாக்கெட் அது'' என்று அவரால் உணர முடிகிறது.

''ஜாக்கெட்டு எப்படி இருக்கிறது?''

''அதை வைத்து எதையும் மதிப்பிட முடியாது; பிரித்துப் பார்க்க வேண்டும்'' என்று அவர் கூறியது அந்தக் கவிஞனுக்கு உள்ளுறைப் பொருளையும் தந்தது. அவர் அந்தப் பொருளில் உரைத்தவரல்லர். அவர் ரசனை அந்த நிலைக்குத் தாழ வேண்டிய நிலையில் இல்லை. கவிஞனுக்குச் சிலேடை, உள்ளுறை, உருவகம் இவை எல்லாம் அவன் தொழில் உத்திகள்.

''ஒளிபடைத்த முகம்'' அப்படித்தானே ஒரு கவிஞன் விளங்க வேண்டும்; அவன் முகத்தில் ''கிலி படைத்தது'' போல அவருக்குத் தென்பட்டது.

''பசி எடுக்கிறதா'' எனக் கேட்டார்.

'பசி பாரார்; கண் துஞ்சார்; கருமமே கண்ணாயினார்' அந்த வரிகள் அவனுக்கு நினைவுக்கு வருகின்றன.

''உழைப்பு'' என்றான்;

''களைப்பு; அது தென்படுகிறது'' என்கிறார்.

''பசி அதிகம் எடுப்பது இல்லை'' என்று கூறினான்.

''இளமைக்கு அழகு பசி எடுத்தல்'' என்று அவர் பதில் கூறினார்.

அதற்கும் அவன் மற்றொரு பொருள் காண்கிறான். அது அவன் பிறவிக் குணம், அவனை மாற்ற முடியாது.

இரட்டுற மொழிதல் மருத்துவர் தொழில் அல்ல; நேரே விஷயத்துக்கு வருகிறார்.

''உன் முகம் வெளிறி இருக்கிறது'' எனத் தெரிவித்தார்.

சாதனை படைத்தவன்; அவனுக்கு ஒரு சோதனை என்று அறிவிக்கப்படுகிறது.

''நான் குடிப்பதில்லை; புகைப்பது இல்லை; கெட்ட பழக்கம் எதுவுமே இல்லை'' என்று தனக்குத்தானே நற்சான்று தருகிறான்.

இதை அவர் கேட்கவே இல்லை.

''எப்படிக் கவிதை'' இது அவன் வினா.

''ஓட்டம் இல்லை'' என்பது சொல்ல வருகிறார்.

அவன் மனம் புண்படும் என்பது அவர் அறிந்தது.

''இரத்த ஓட்டத்தில் கோளாறு'' என்றார்.

''அழுத்தம்'' என நினைக்கிறான்.

''இல்லை; மற்றும் ஒரு தேர்வு உள்ளது; எதையும் திரையிட்டுத்தான் பார்க்க வேண்டும்'' என்கிறார்.

அவன் கற்பனை எங்கோ பறக்கிறது. அவன் ஒரு திரைக் கவிஞனாகிறான். திரை என்ற சொல் அவனைத் தட்டி எழுப்புகிறது.

''அறிகுறிகள் இருக்கின்றன''

முன்னுக்கு வருவான் என்பது அல்ல; முதலுக்கே மோசம் என்று அறிவிக்கப்படுகிறது.

அவன் கவிதைகள் திரையிடப்படவில்லை; அவன் திரை முன் நிறுத்தப்பட்டான்,

''ஸ்கிரீனிங்கில் கான்சர்'' என்கிறார்.

''புரையோடிப் போய் விட்டது. அதைத் திருத்த முடியாது'' என்று அவன் திரை உலக விமர்சனம் செய்கிறான்.

''திருத்த முடியும்; கவலைப்படாதே'' என்று ஆறுதல் கூறினார்.

அவனுக்கு விளங்கவில்லை. ''உனக்கு வயிற்றில் கான்சர்; அதற்கு அறுவை சிகிச்சை தேவை'' என்று தெளிவுபடுத்துகிறார்.

அவன் மனத்தில் பல அறிஞர்கள்; ஞானிகள் வந்து நிற்கின்றனர்.

"இது அறிஞர்களைத் தாக்கும் வியாதி. தன்னையும் இது அங்கீகரித்து விட்டது" என்று மதித்துக் கொள்கிறான்.

பரமஹம்சர், ரமண மகரிஷி, அறிஞர் அண்ணா இப்பெருமக்கள் அவனை அச்சுறுத்தினார்கள்.

அவன் பார்த்த டி.வி. படம் அவனுக்கு ஆறுதல் தருகிறது; 'மோனிகா' அந்தப் பெண் பாத்திரம் அவள் தரும் நம்பிக்கை கோபாலைக் குணப்படுத்தி விடுகிறது. காதல் கான்சரைக் குணப்படுத்தி விடுகிறது. அவளுக்கும் கான்சர். அவனுக்கும் அதே நோய். அதனால் ஒருவர்மீது மற்றவர் காட்டும் அன்பு காதலாக மாறுகிறது. கதை புதுமைதான்.

நம்பிக்கை, கான்சரைக் குணப்படுத்தி விடுகிறது. அந்த நம்பிக்கை இவனுக்கும் தேவைப்பட்டது. அதை அவன் தேடுகிறான். அவனுக்கு ஒரு 'மோனிகா' எங்கே கிடைக்கப் போகிறாள். அப்படிக் கிடைத்தால் அந்த நோயை அவன் விரும்பி ஏற்று இருப்பான்.

மருத்துவர் தான் அந்த நம்பிக்கையைத் தர வேண்டியிருந்தது.

"ஐயா நம்பிக்கை இந்த நோயைக் குணப் படுத்துமா?" என்று கேட்கிறான்.

"நம்பிக்கை எதற்கும் தேவை. பிழைப்போம் என்ற நம்பிக்கை; அது சிகிச்சையை ஏற்கத் துணை செய்யும்; உறுதியான நெஞ்சு இது எந்த நோயாளிக்கும் தேவை; அது அந்தக் கதாநாயகனுக்குக் கிடைத்தது; பொறுமை அவனுக்கு உதவியது" என்று விளக்கம் தந்தார்.

"மருத்துவம்தான் அவனைக் குணப்படுத்தியது; அதை அவர்கள் காட்டவில்லை" என்று தன் விமரி சனத்தை வெளியிட்டார்.

"பிள்ளையார் பிடிக்க அது குரங்காக மாறும்" என்பதை அவன் எதிர்பார்க்கவில்லை.

பாராட்டுப் பெற விரும்பினான். அது ஒரு தற்செயல் சந்திப்பாக மாறியது.

கவிதைக்கு அவன் உயிர் பிழைக்க வழிகாட்ட முடிந்தது. அன்று அவன் செல்லவில்லை என்றால் அவன் நோய் அவனுக்குத் தெரியாமல் போயிருக்கும்.

"இப்பொழுது எந்த நிலை" என்று கேட்கிறான்

"ஆரம்ப நிலை. நீ உன் கவிதை நூலை வாழ்த்த வேண்டும். இல்லாவிட்டால் நீ இங்கு வந்திருக்க மாட்டாய். முற்றும் துறந்த முனிவனாகி இருப்பாய். முற்றி விட்டால் யாரும் ஒன்றும் செய்ய முடியாது; தப்பித்துக் கொண்டாய்" என ஆறுதல் கூறினார்.

"வயிற்றை ஒரு பகுதி அது துளைத்து விட்டது; இன்னும் சிறிது பரவியிருந்தால் லிவர் மற்றும் உள் உறுப்புகளை எட்டியிருக்கும். யாரும் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார்.

"எல்லாம் ஒரு நூல் இழைதான்" என்று விளக்கினார்.

சாவுக்கும் வாழ்வுக்கும் ஒரு நூல் இழைதான் என்பதை அறிய முடிகிறது.

இவனுக்கு முத்திரை குத்தப்பட்டு விட்டது; "இந் நோய் வந்தால் பிழைக்க முடியாது; இதற்கு மருத்துவம் இங்குச் சரியாக இல்லை. அமெரிக்கா சென்றால் பிழைக்க வாய்ப்பு உண்டு" என்று அறிவிக்கப்பட்டது.

கவிஞர் கண்ணதாசன் அவன் நினைவுக்கு வருகிறார். அவர் செல்லும் போது கவிஞர்; திரும்பி வரும்போது கல்லறைப் பயணம்; சில நோய்கள் எங்குச் சென்றாலும் குணப்படுத்த முடிவது இல்லை.

இவனுக்கு மது அது இல்லை. அதனால் ஒரு நம்பிக்கை; நம்பிக்கை தந்தது.

நாட்டுப் பற்று அவனைத் தடுத்தது. அமெரிக்கா செல்ல முடியும். அதற்கு ஒரு நிதி உதவி பெற்றிருக்க முடியும். 'வளரும் கலைஞர்' இனத்தைச் சேர்ந்தவன். நிச்சயம் தமிழ் அரசு அவனை அனுப்பி இருக்கும். தமிழ்க் கவிஞனை அது சாக விடாது; தமிழ் அறிஞர்களை மதிக்கும் அரசு அது.

அவனுக்குத் தன் மருத்துவநண்பர் மீது நம்பிக்கை இருந்தது. அவர் நம்பிக்கை தருகிறார். ஆனால் உலகம் நம்பிக்கை தர வில்லை.

பெற்றோர்கள் அவர்கள் செயல் அறுகிறார்கள். உற்றவர்கள் வந்து விசாரிக்கிறார்கள். இறுதிப் பயணத் துக்கு அவர்கள் விடை தருவது போல் இருந்தது.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் கள்ளச் சிந்தையராக அவர்கள் செயல்பட்டனர்.

''ஒன்றும் ஆகாது; எத்தனையோ பேர் பிழைத்து இருக்கிறார்கள். நீ நல்லவன்; உனக்குக் கெடுதி வராது'' என்று சொன்னார்கள்.

''நல்லவர்களுக்குக் கெடுதி வராது'' என்ற நம்பிக்கை நிலவுவதைக் கண்டு இவன் மகிழ்ந்தான். நன்மை வாழும்; இந்த நம்பிக்கைதான் வாழ்க்கையின் அச்சாணி என்பதை அவனால் உணர முடிந்தது.

காலையில் அவன் ஒவ்வொரு நாளும் வள்ளுவர் வாக்கைக் கேட்டு வந்தான். சாலமன் பாப்பையா தவறாது உலகுக்கு வள்ளுவர் வார்த்தைகளை உபதேசம் செய் கிறார். அவர் 'இறப்பு' என்பதைப் பற்றிப் பேசியது நினைவுக்கு வருகிறது.

''சாவு என்பது வெறும் உறக்கம்தான்; இதைக் கண்டு நீ ஏன் கவலைப் படுகிறாய்'' என்று அவர் கூறியது நினைவுக்கு வருகிறது.

அவன் கவிஞன்; பேனா எடுக்கிறான். ''மரணத்தின் வாசலில்'' என்று ஒரு கவிதை எழுதுகிறான்.

தான் இறந்த பிறகு யாராவது வெளியிடட்டும் என்று எழுதி வைக்கிறான்.

தான் இருந்து எழுதும் பூங்காவைப் பார்க்கிறான்; பசுமையாய் இருக்கிறது. இங்கேதான் பல கவிதைகளை இருந்து எழுதினான். இப்பொழுது அந்தக் கவிஞன் மறைகிறான்.

அவன் ஒரு ஆபத்தில் புகுத்தப்படுகிறான். வெள்ளைக் கலை உடுத்தி வெள்ளை நிறம் பெற்று வேளா வேளைக்கு வந்து கவனித்து வரும் நர்சுகள் இவனை விசாரிக்கிறார்கள். இவன் ஒரு கவிஞன் என்று அறிமுகப் படுத்தப்படுகிறான். இவனை ஒரு பரிதாபகரமான பார்வை யில் நோக்கினார்கள். அவனை வியக்கிறார்களா விமர்சிக் கிறார்களா தெரியவில்லை; வருகிறவர்களுக்கு எல்லாம் அவன் கவிதை நூல் பிரதி ஒன்றனைக் கொடுத்து வந்தான்.

''கலைஞரைக் கொண்டு கவிதை நூல் வெளியீடு நடத்தப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருந் தான். அதனால் அவன் மதிப்பு உயர்ந்தது. அந்த நம்பிக்கை அவனை வாழ வைத்தது.

இறப்பு கவிஞனை அணுகாது; தான் மறைந்தாலும் தான் எழுதி வைத்த கவிதைகள் பேசிக் கொண்டே இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டிருந்தான்.

கவிஞனுக்கு என்றுமே மரணம் இல்லை. அவன் கவிதை வாழும். அவன் வாழ்வான் என்று பேசினான்; மரண அச்சம் அவனை விட்டு நீங்கியது.

எந்த நோயாளியும் தனக்கு அந்த நோய் வரும் என்பதை முதலில் ஒப்புக் கொள்வது இல்லை; அவன் ஒப்புக் கொள்ள வைக்கப்படுகிறான். அவன் நேசித்த முகங்களை ஒருபுறம் பார்க்கிறான்.

அறுவைக்கு அவன் இழுக்கப்படுகிறான். புதிய ஆடைகள் அவன் உடம்பை மூடுகின்றன. பின் அவர்கள் முடித் தருவதும் வெள்ளைநிற ஆடைதான். அதை அவன் எதிர்பார்த்துக் கொண்டுதான் போகிறான்.

தன் வசம் இழக்கிறான். விதி அதன் கையில் தன் கதியை ஒப்படைக்கிறான். நம்பிக்கையான மருத்துவர் தான்; யாரையும் இதுவரை அவர் கை வைத்துச் சாகடித் தது இல்லை; அவர்களே தம் நோய்க் கடுமையால்தான் செத்திருக்கிறார்கள்.

இவன் வெளி வருவதும் வராததும் அவர் கைத் திறனை மட்டும் சார்ந்தது இல்லை. இவன் நோய்த் திறனையும் ஒட்டியதாக இருந்தது.

வெறும் படத்திலேயே அதன் இடம் திடம் கண்டு பிடிக்க முடிவது இல்லை, அறுத்த பிறகுதான் எதையும் அறிய முடியும்.

பிழைப்பானா? இல்லையா? ஒரு கவிஞன் மறை வானா? வெளியில் காத்து இருந்தவர் நம்புகிறார்கள்; எனினும் சில கீறல்கள் தோன்றத்தான் செய்கின்றன.

'அமரன் அவன்' என்ற நிலையை அவன் அடைய வில்லை. 'குமரன் அவன்' என்ற நிலையில்தான் வருவான் என்று நம்பினர்.

கவிஞன் சாக மாட்டான். அவன் எழுத வேண்டியது காத்திருக்கிறது. பூங்கா வெறிச்சிட்டுக் கிடக்கிறது. கவி பீடமாக அது மாறத்தான் போகிறது.

'மரணத்தின் வாசலில்' என்று எழுதியது அவன் இறுதிக் கவிதை.

அவன் பிழைத்து வருவான்; வந்தபின் கவிதை எழுதுவான்; அதற்கு அவன் கொடுக்கும் தலைப்பு நிச்சயம் இதுவாகத்தான் இருக்கும். 'நூலிழை' என்பது தான் தலைப்பாக இருக்கும். சாவுக்கும் வாழ்வுக்கும் இடைவெளி இதுதான்; அது அவன் கண்டு எழுதியது; பொருத்தமான தலைப்பு.

# 7

# சுமை குறையாது

''சாராயம் குடித்தார்கள்; சாவினைச் சந்தித்தார்கள்''

''விஷம் அருந்தினார்கள்; பெண்கள் கூட இறந்துவிட்டார்கள்; ஒரு தாயின் பாலைக் குடித்த இரண்டு வருஷக் குழந்தை அதுவும் இறந்துவிட்டது''.

கொடுமையான சாவு; அதைப் படம் பிடித்துச் காட்டினார்கள்.

பெண்கள் கதறி அழுவது இவர்களுக்கு ஒரு காட்சி யாக அமைகிறது.

வாய்விட்டு அழுகிறார்கள். இறந்தவர்களுக்காக மட்டும் அல்ல; இனி வாழப் போகிறவர்களை நினைத்தும் கூட.

உழைக்கும் கரங்கள்; அவர்கள் தம் உழைப்பை நிறுத்தி விட்டார்கள். கை கால்களை நீட்டி விட்டார்கள்

அவர்கள் முகம் வெள்ளைத் துணிகளால் மூடப்பட்டு விட்டன. அவர்களைப் பார்க்கவும் தகுதி இல்லை என்பது போல் இச்செய்கை இருந்தது.

அவர்கள் இனி எழப்போவது இல்லை; குழி ஒன்று தேவைப்படுகிறது. குழிகள் பல தேவைப்படு கின்றன. அவற்றில் அவர்கள் குடித்த அந்தக் குடல் அழுகப் போகிறது.

இனி அவர்கள் விஷச் சாராயம் குடிக்கப் போவது இல்லை; மறுபடியும் இந்த அழுகை அவர்களுக்காக ஒலிக்கப் போவது இல்லை.

வீரமரணம் அடைந்தவர்களுக்கு வெள்ளை மாளி கைகள் கட்டுகிறார்கள்; அது நினைவுச் சின்னம்.

அவர்கள் மரணத்தை விரும்பித் தழுவுகிறார்கள். களத்தில் சென்றவர்கள் போராடுகிறார்கள். எதிரிகள் சுட்டார்கள். இவர்கள் இறந்து பட்டார்கள். இவர்களுக்காக வெள்ளை மாளிகை எழுப்பப்பட்டது.

இந்தச் சாராய வீரர்களுக்கு எந்த நினைவுச் சின்னம் எழுப்புவது? பெரிய 'கோப்பை' ஒன்று செய்து அதன் வெளிமுகட்டில் கண்ணதாசன் பாடலை வரியைத்தான் எழுத வேண்டும் ''இது என் குடியிருப்பு'' என்றுதான் எழுத வேண்டும். இதைப்பற்றி இவர் தன் நண்பருக்குத் தொலைபேசியில் பேசுகிறார். இந்த வருத்தம் நண்பரைத் தாக்கவில்லை.

அவருக்கு ஒரு அதிர்ச்சி; அதிலிருந்து அவரால் மீள இயலவில்லை. இவர் சொல்வதை அவர் கேட்கும் நிலையில் இல்லை. ''கொஞ்ச நாளைக்கு என்னிடம் பேசா திருங்கள்; என் மனநிலை சரி இல்லை'' என்றார். அப்படி இல்லை; ஏதோ அவர் நேசித்த ஒருவர் மறைந்து விட்டிருக்க வேண்டும்.

அவரது மனைவி உடல் நலம் சரியாக இல்லை என்று சொல்லி இருந்தார்.

அந்த அம்மையார் இந்த நண்பர் செல்லும்போது எல்லாம் 'புரூ' காபி போட்டுத் தருவார்கள். அவர் மறைந்தது உண்மையில் அதிர்ச்சிதான். யார் இனி 'புரூ' போட்டுத் தருவார்கள். அந்த வீட்டுக்குச் சென்றால் யார் வரவேற்பார்கள்.

நண்பருக்கு ஆறுதல் கூறுவது என்று தீர்மானிக்கிறார். இரங்கற்பா ஒன்று பாடுவது; அச்சிடுவது; அதன்கீழ் தன் பெயர் போட்டுக் கொடுப்பது என்று முடிவு செய்கிறார்.

ஆசிரியப்பாவால்தான் எழுத முடியும். அந்த அம்மையார் நற்குண நற்செயல்களை எல்லாம் சேகரித்துக் குறிப்பு எடுத்து வைக்கிறார். மிகுதியாக எழுத வாய்ப்பு இல்லாததால் நாட்டு வளம் நகர்வளம் சேர்த்துச் 'சீர்மிகு' என்று தொடங்குவது என்று தொடங்கினார்.

'வனிதாமணி' என்ற ஒரு சொல் அதுதான் பொருத்தமானது என்று முடிவு செய்கிறார். அவர்கள் பெயர் 'லலிதா' அதனால் எதுகை நயம் தோன்ற இந்தச் சொல்லை நுழைப்பது என்ற முடிவு ஆகிறது.

அந்த 'வனிதாமணி' என்ற சொல்லைப் புகுத்தி விட்டால் பல சொற்கள் 'மணி' என்று முடிந்தால் நன்றாக இருக்கும்; பல சொற்கள் தேடினார். 'பொன்மணி' என்ற சொல் முதலில் வந்து விழுந்தது; அது எப்படி வந்தது அவருக்கே தெரியவில்லை.

'வெண்மணி' என்பது அடுத்த சொல் அவருக்குக் கிடைத்தது. இது ஏதோ ஒரு கதையின் களம் என்பது நினைத்துப் பார்க்க முடிந்தது. 'கண்மணி' என்று சொன்னால் மிகவும் பொருத்தமாய் இருக்கும் என்று முடிவு

செய்தார். 'அம்மணி' என்பதை நினைத்துப் பார்க்கிறார். இது தமிழைக் கொச்சைப்படுத்துவது போல இருந்தது.

"எனக்குத் தெரியாது; யாரும் சொல்லவில்லை" என்பது இவர் தொலைபேசித் தொடர்பு.

"இந்தக் கார் இப்படிப் பள்ளத்தில் விழும் என்று எதிர் பார்க்கவில்லை. அப்படியே சுக்கு நூறாகச் சிதைந்தது." என்றார் நண்பர்

டிவி தொடர் கதைகளில் வந்து விழும் சஸ்பென்சாக அந்தச் செய்தி இருந்தது. அதை வைத்துத்தானே அவர்கள் கதையை ஓட்டுகிறார்கள்.

மேலே தொடர்ந்து இவரால் கேட்க முடியவில்லை; அதிர்ச்சிகள் அடக்க விலையில் அமைய இருக்க வேண்டுமே என்று அவர் வேண்டிக் கொண்டார்.

"உள்ளிருந்தவர்கள்?"

"டிரைவர் தவிர மற்றவர்கள் பிழைத்துக் கொண்டார் கள்" என்று சாவதானமாக விரித்து உரைத்தார்.

"கவலை இல்லை; இன்சூரன்சு நிதி வரும்" என்று அந்த அவலத்துக்கு ஒரு ஆறுதலும் தெரிவித்தார்.

"காருக்கு?"

"அது சுட்டு வைத்த அப்பளமாக நொறுங்கி விட்டது" என்றார்.

அவரால் உவமை இல்லாமல் கூற முடியாது என் பதைக் காட்டினார்.

"பிரதமர் நிதியிலிருந்து ஏதாவது உதவி கொடுத் திருக்கலாம்" என்று தோன்றியது.

தனிப்பட்டவர் சாவுக்கு அரசு பொறுப்பு ஏற்க முடியாது. பஸ் குறுக்கே மோதினால் மாநில அரசு

உதவும்; ரயில் மோதத் தவறு நேர்ந்தால் கேட்மனிதன் தூங்கினான் என்று தெரிந்தாலும், ரயில்வே என்ஜின் கோளாறு ஆக இருந்தாலும் ரயில்வே அமைச்சர் உதவித் தொகை தெரிவித்திருப்பார்.

''பள்ளத்தில் விழுகிறவர்களுக்கு எல்லாம் அரசு எப்படிக் கை கொடுத்து உதவ முடியும்? அது பாரதி அல்ல; *விழி தந்து பதவி தர*''

''இதற்காகவா இவ்வளவு வேதனை; வருத்தம்; விடுங்கள் கார் வேறு வாங்கிக் கொள்ளலாம்''.

''என் மனைவியைவிட அந்தக் காரைத்தான் நேசித்தேன்; அது வந்த போதுதான் தொலைபேசித் தொடர்பு கிடைத்தது. காத்துப் பதிவு செய்த காஸ் சிலிண்டர் கிடைத்தது'' என்று அடுக்கிக் கொண்டிருந்தார்.

அவர் சொன்ன உவமை தான் எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்ததார் என்பதைக் காட்டிக் கொடுத்தது. அவரே முழுமையாக நேசிக்காத அவர் மனைவிக்கு இரங்கற்பா தயாரித்தது எவ்வளவு தவறு என்பது பட்டது.

''அதை எடுக்கவே இல்லையா''

''அது தானே விரும்பிச் சேற்றில் விழுந்துவிட்ட பிறகு நாம் ஏன் எடுக்க வேண்டும். போகட்டும்; அது விதி அவ்வளவுதான்'' என்று அவரே ஆறுதல் அடைகிறார்.

''பஸ் மோதி இருந்தால் மாநில அரசு உதவித் தொகை தந்திருக்கும்; பத்திரிகைகளில் அச்சிட்டு இருப்பார் கள்; ரயில் மோதி இருந்தால் மத்திய அரசு கூடுதல் தொகை கொடுத்து இருக்கும். எருமைதான் மோதியது; எங்கள் துரதிருஷ்டம்'' என்றார்.

''அது சேற்றில் விழுந்துவிட்டது; அதை எடுப்பது சரி இல்லை'' என்கிறார். ''என்ன இருந்தாலும் அது சேற்றில் விழுந்து இருக்கக் கூடாது. பார்க்கவே பிடிக்காது;

கழுவ வேண்டும். எல்லாம் தொல்லைதான்'' என்று மேலும் ஆறுதல் கூறி வலிய சில கருத்துக்களைக் கூற நேர்ந்தது.

''பிரேக் அதை நம்பி இருக்கும் அந்தக் கார் அதை நிறுத்தத் தவறிவிட்டது; சரி விடுங்க சார்; இதற்கு எல்லாம் கமிஷன் வைக்கவா முடியும்? அவர்கள் ஏதாவது ரிப்போர்ட் தர அது குழப்பத்தை உண்டாக்க அப்புறம் பெரிசா போயிடும்''

''அரசுகலையும் என்று சொல்லப் போகிறீர்; அவ்வளவு தானே! உங்களோடு பேசியது கொஞ்சம் ஆறுதல்தான்'' என்று நண்பர் தெரிவித்தார்.

''சரி! விடுங்க; கிளப்புக்கு வாங்க; ரெண்டு 'பெக்' அடித்தால் சரியாப் போகுது'' என்று கூறிப் போனை வைத்தார்.

''சுமைகள் குறைய மேல்மட்டம் 'பெக்' அடிக் கிறது. இந்தத் தரைமட்டங்கள் நச்சு மதுவை நாடுகின்றன. அவர்கள் சுமைகள் குறையப் போவது இல்லை; இந்தச் சாவுகள் நிற்கப் போவதும் இல்லை.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவர்களுக்கு நல்ல சாராயம் கிடைக்க வசதிகள் செய்து தரவேண்டும்''.

# 8

# விழிப்பு

சில சந்திப்புகள் நாம் விரும்பி ஏற்படுத்திக் கொள் கிறோம்; சில நாம் விரும்பாமலும் ஏற்படுகின்றன. இந்த மனிதர் இவருக்கு உதவி செய்தார்; அதனால் இந்தச் சந்திப்பு ஏற்பட்டது.

பொட்டல் காடாக இருந்த இடம்; அதைத் திட்ட மிட்டுத் தொழிற் பேட்டை ஆக்கினார்கள். அதை ஒதுக்கித் தந்தார்கள். அப்பொழுது கவர்னர் ஆட்சி; அதனால் ஓரளவு எல்லாம் ஒழுங்காக நடந்தன. மேல் மட்டத்தில் யாருக்கும் எதுவும் கொடுக்கத் தேவை இல்லை.

சட்டப்படி எல்லாம் ஒழுங்காக நடைபெற்றது. அச்சுக் கூடம் ஒன்று இவர் நடத்தி வந்தார். அதைக் காட்டி அந்த இடத்தில் தனக்கு ஒரு 'பிளாட்' ஒதுக்கித் தர விண்ணப்பம் இட்டு வைத்தார்.

இந்த 'வழுக்கைத் தலை' அப்பொழுது பரிச்சயம் ஏற்பட்டது. அவர் முகம் இவருக்கு அறிமுகம் ஆயிற்று; எப்படி விண்ணப்பம் பூர்த்தி செய்வது என்பது அவர் காண்பித்துத் தந்தார். அவர்கள் கேட்கின்ற வரைவுகள் திட்ட விளக்கங்கள், சட்ட திட்டங்கள் அவற்றை அறிந்து விண்ணப்பம் செய்வது ஒரு பெரிய சாதனை, "முட்டாள் தனமாக இவர் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். அச்சுத் தொழில் அதை எடுத்து நடத்தித் தனக்குத் தெரிந்தவரை

இந்தத் தொழிலில் அந்த நாட்களில் யாரும் முன்னுக்கு வந்தது இல்லை. இந்த அப்பாவி மனிதர் தப்பான தொழி லில் கால் வைத்திருப்பதால் உதவி செய்ய வேண்டும்'' என்று அவருக்கு ஏற்பட்ட உந்துதல் இருவரையும் பிணைத்தது.

காசு கொடுத்தால் எதனையும் சாதிக்க முடியும் என்று சொன்னார்கள். அப்படிக் காசு கேட்காமல் ஓர் உதவி செய்தார் என்றால் அந்த அபூர்வ மனிதரை இவரால் எப்படி மறக்க முடியும்?.

இன்று இவர் அச்சுத் தொழிலை அழகாக நடத்து கிறார் என்றால் அந்த நட்பு இவரை நச்சிக் கிடைத்ததால் தான்; மச்சு வீடு ஒன்று கட்டவும் முடிந்தது.

அந்த 'வழுக்கைத்தலை' அவ்வளவு சீக்கிரம் சாயும் என்று யார் எதிர்பார்த்தார்கள்? அது சாய்ந்துவிட்டது; அதற்கு ஒரு முண்டாசு கட்டி அதை மறைத்து எடுத்துச் சென்றார்கள். செத்த பிறகு அவர் செல்லும் சிவலோக யாத்திரைக்கு உடன் துணைபோக முடியாது; இடு காட்டுக்கு அன்று இவர் பாதயாத்திரை செய்து அவருக்கு நெருப்பிட்டு எரியவிடும் தொடக்கம் வரை நின்று இறுதி மரியாதை செய்தார். அதுதான் அவருக்கு இவர் செய்யக் கூடியது.

அந்தக் குடும்பம் துரதிருஷ்டமான குடும்பம். இவர் ஒரு ரயில் பஸ் மோதல் விபத்தில் செத்து இருந்தால் ஐம்பதினாயிரம் கிடைத்திருக்கும். மாபெரும் தலைவர் மந்திரியாகவில்லை என்று சொல்லி எரியிட்டுக் கொளுத் திக் கொண்டிருந்தால் பத்து லட்சம் கிடைத்திருக்கும். 'தியாகம்' என்ற முத்திரை குத்திக் கொண்டிருந்தால் அந்தக் குடும்பத்துக்கு அவர் செய்த யாகமாக இருந்திருக்கும். நோய் வாய்ப்பட்டு மரணம் அடைந்தார். அவ்வாறு மரணம் அடைந்து இருக்ககக் கூடாது என்பது பலர் கருத்து.

இன்று விவசாயிகள் தற்கொலை செய்து கொள் கிறார்கள். உழவு செய்பவன் பட்டினியால் சாகிறான். பச்சைச் செடிகள் பசுமழை இல்லை என்றால் அவை வாடிவிடுகின்றன. மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள் இவர் கள்; வானம் பொய்த்துவிட்டது. இவர்கள் வாக்குச் சாவடிகள்; காவடி எடுத்தால் யார் தரிசனம் தருகிறார்கள். இப்படியும் நாடகம் நடத்தப்பட்டது. சாகட்டும்! பிறந்தவர் கள் ஒரு நாளைக்கு இறக்கத்தானே ஆகவேண்டும் அவர் கள் சவ மாதிக்கு எம் மலர்மாலைகள்! வாழ்க விவசாயிகள்.

இது பத்திரிகைச் செய்தி; இவர்களுக்கு நாம் ஆறுதல் கூற முடியாது; அதற்கு என்று ஆளும் வர்க்கத்தினர் இருக்கிறார்கள். அவர்கள் அறிக்கைகள் தருவார்கள்; என்ன தரப்படும்? இரக்கம் காட்டப்படும்; வருந்துகிறார்கள் என்று அறிவிப்பார்கள்; அறிவிக்கட்டும்; வாயில்லாப் பூச்சிகள் அவர்கள் கொடி பிடித்துக் கோட்டைகள் நோக்கி ஊர் வலம் செல்லவில்லை வாழ்க்கையைக் கோட்டை விட்ட வர்கள்; நிச்சயம் ஒரு புரட்சி; கிளம்பத்தான் போகிறது; அவர்கள் சாகமாட்டார்கள். சரி நம்ம விஷயத்துக்கு வருவோம். இவர் நன்றி மறக்கவில்லை; அன்று விண்ணப் பம் பூர்த்தி செய்ய உதவியவர் அதை மறக்க முடியாது.

ஆறுதல் கூற அந்த இல்லாம் செல்ல நேர்கிறது; அந்த வீட்டு முன் அறையில் ஊதுவர்த்தி புகையை மறைந்த மாணிக்கம் நுகர்ந்து கொண்டு தலைப்பாகை யோடு கம்பீரமாகக் காட்சி அளித்தார். வழுக்கைத் தலை அவருக்கு இல்லை; அதனால் எழுந்த இழுக்கு அதைப் பற்றி யாரும் நினைத்ததும் இல்லை; அவரும் இனித் தலையைத் தொட்டுப் பார்க்க இயலாது.

எப்படி ஆறுதல் கூறுவது? அவர்கள் யவ்வனம் அவர்களை விட்டு அகலவில்லை; அவர் மட்டும் அவர் களை விட்டு அகன்றுவிட்டார்.

ஏன் இவர்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற வினா எழுந்தது.

இந்தப் படத்தை வைத்து எத்தனை நாளைக்குப் பூஜை செய்ய முடியும்? ஊதுவர்த்தி எரிந்து கொண்டுதான் இருக்க வேண்டுமா? அவர் நெற்றியில் குங்குமப் பொட்டு கண்ணாடிக்கு வெளியே இடப்பட்டிருந்தது. அது அழிய வில்லை; இந்த அம்மையார் இவர்கள் மட்டும் அழித்துக் கொண்டார்கள். வளையல்கள் நீங்கிவிட்டன. முழங்கை மட்டும் வெளியே பளிச்சிட்டிருந்தது; முகத்தில் அமைதி; கலகலப்பு இல்லை; என்றாலும் இளமை தனித்துவத்தைத் தந்து கொண்டிருந்தது.

பிஞ்சுச் செடி ஒன்று பக்கத்தில் துளிர்விட்டுக் கொண்டிருந்தது. அது அவன் செய்த வினை; அவளுக்கு ஒரு லட்சியத்தை விட்டுச் சென்றிருக்கிறான். இந்தப் பசும் பயிர்தான்; அதற்காக அவள் கண்ணீர் விடவேண்டி யிருந்தது. அதனைக் கண்ணீர் விட்டுக் கொண்டே வளர்க்க நேர்ந்தது.

இவர் வீடு கட்டக் கல் கேட்டு இருந்தார்; அந்த மனுஷன் மனைவி திடீர் என்று காலை நீட்டி விட்டாள்; விறைத்துக் கொண்டாள். முன்பணம் கேட்காமல் கல் சப்ளை செய்தவர். யார் நம்பி இப்படித் தருகிறார்கள். இப்பொழுது 'கல்' டிமாண்டு இல்லை. பணச் சந்தை இறக்கம் என்று சொல்கிறார்; வீடு கட்டுவது நின்று விட்டது. என்று பேசுகிறார்கள் 'போக்ரான் வெடி' எத் தனையே நெடிகளைத் தோற்றுவித்தது என்று பேசுகிறார் கள். இன்று தொழில்கள் நசிந்து விடுகின்றன என்று பேசு கிறார். அவர் மனைவி சாவுக்குச் செல்லவில்லை. மறைவு அதனால் ஏற்பட்ட துக்கத்தை மாற்றுவது ஒரு சமூகக் கடமை; ஏதாவது ஆறுதல் கூற வேண்டி இருக்கிறது.

என்ன கூறுவது? என்ன செய்வது? "கொடுத்து வைத்தது அவ்வளவுதான்; இருக்கிறதை வைத்து வாழ

வேண்டியதுதான். வயசு வந்த பெண் அவளைக் கட்டிக் கொடுத்துக் கடமையைச் செய்யுங்க; பிஞ்சு அவள் விடும் குஞ்சுகள் அவர்கள் உன் பேரன் பேர்த்திகள் அவர்கள் தாம் ஆதரவு. அவர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.''

''அவர்களைப் படிக்க வைத்து மாமேதைகளாக ஆக்குங்கள். அதுபோதும்'' இப்படிச் சில கனவுகளை எடுத்து உரைப்பது என்று இவர் கணக்கிட்டு மெனக்கிட்டு அவர் இல்லம் தேடிச் செல்கிறார்.

அவர் மனைவி சாகவில்லை. அழைப்பு மணி அடித்ததும் வந்து கதவைத் திறந்தாள்.

'இருங்கள்' என்றாள்.

சோபாவில் இவர் சொகுசாக அமர்கிறார்.

''என்ன வேணும்? ஹார்லிக்ஸா கூல்டிரிங்ஸா'' ஒரு வேலையாள் இந்த வினாவை எழுப்புகிறான். ஹாட் டிரிங்க்ஸ் குடிக்க வேண்டும் போல் தோன்றியது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடியில் பிறந்தவர் அவர். இப்பொழுது 'கல்' வியாபாரம் தொடர்ந்து செய்கிறார்; கல்தோன்றியதால் தான் நாங்கள் இந்தத் தொழிலைச் செய்கிறோம். எங்கள் குடி உயர்கிறது என்று பேசிக் கொண்டே வந்தார்.

''எப்படி உங்கள் தொழில்?''

''அதே கல்தான்; ஏறும்; இறங்கும்; நடக்குது'' என்று பதில் சொல்கிறார்.

''மனைவி தவறிவிட்டது'' என்று வாய் எடுக்க முனையவில்லை.

நகைகள் நிறைய அணிந்து வகையாக இருந்த புதிய வனிதை ஒருத்தி நடமாடும் போது எப்படிக் கேட்க முடியும்?

அவரே தொடர்ந்தார். "மூத்தவள் தவறிவிட்டாள்; என்ன செய்வது? அழுதால் அவர்கள் எழவா போகிறார் கள்? மகள் அவள் படிக்கிறாள். அவளுக்கு விரைவில் மணம் முடிக்க வேண்டியதுதான். இருந்து வீட்டை நடத்தச் சேலை கட்டிய மாது ஒன்று தேவைப்பட்டது. இவர்கள் என் இரண்டாம் தாரம்" என்று அறிமுகம் செய்கிறார்.

துக்கம் விசாரிக்கத் தேவை இல்லை; அதன் அடை யாளம் புல் பூண்டு எதுவும் இல்லை; ஏதாவது பேச வேண்டுமே எதைப் பற்றிப் பேசுவது? வழுக்கைத் தலை இவர் நினைவுக்கு வந்தது.

"அந்தப் பரசுராமன் மிக நல்ல மனிதர்; பாவம் அந்தவீடு எதுவுமே இல்லை பொலிவு இழந்துவிட்டது."

"நீங்கள் படம் ஒன்றும் மாட்டி வைக்க வில்லையா?" என்று கேட்கிறார்.

"படத்தை வைத்து வழிபாடு நடத்த விரும்ப வில்லை. எதுதேவையோ அதை முடிவு செய்துதான் என் வாழ்க்கையை நடத்துகிறேன். மறைந்த மாநகர்களைக் கட்டிக் கொண்டு மர்மக் கதைகளை எழுதவிரும்பில்லை. இன்று எனக்கு ஒருத்தி தேவை; அவள்தான் இவள்; பழங்கனவில் நான் வாழ விரும்பவில்லை; எந்த வயதிலும் யாரும் துணையில்லாமல் வாழ முடியாது" இது அவர் தத்துவம்; கொள்கை; கோட்பாடு.அதை அவரிடம் பேசித் தெரிந்து கொள்ள முடிந்தது.

"நீங்கள் படம் எதுவும் மாட்டி வைக்கவில்லையா" என்று மறுபடியும் கேட்கிறார்.

"எதுக்குக் கேட்கிறீங்க?"

"இல்லை என் நண்பர் ஊதுவர்த்தி வியாபாரம் செய்கிறார். அவருக்காக விசாரித்தேன்" சமாளித்துப் பேசினார்.

"தேவை இல்லை; அது எல்லாம் நீடிக்காது. அவள் படத்தை மாட்டி வைக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருத்தரும் அவளைத் தங்கம் என்பார்கள். இந்த வெள்ளி இங்கே முளைத்து இருக்கிறது. இது மனசு புண்படும். அந்த இடத்தைத் தான் பிடித்து விட்டது போன்ற குற்ற உணர்வு இருக்கும். ஏன் இந்தத் தொல்லை? நமக்கு இந்தத் தலைவர்கள் படம் அது எல்லாம் பிடிக்காது" என்று ஒரு அடி அடித்தார்.

அவர் நினைவில் அந்த அம்மையார்; பரசுவின் துணைவியார் அவள் பூஜித்து வரும் படம்; அந்த ஊதுவர்த்தி நினைவுக்கு வந்தது.

"இதோ பாருங்க! இப்பத்தான் பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு இடம் கேட்கிறார்கள். ஒரு நாளைக்கு அவர்கள் பாதிக்கு மேல் வந்து விடுவார்கள். எல்லாம் தலைகீழாக மாறும்" என்று கல் வியாபாரி கூறினார்.

அவர் எதை நினைத்துக் கூறினார் என்று தெரியவில்லை.

அர்த்தமுள்ளவை என்று மனதில் இவருக்குப் படிகிறது.

நாட்டில் விழிப்பு உணர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர முடிந்தது.

# 9

# வெட்கக் கேடு

"மார்க்கு 120 வாங்கி இருக்கிறேன்"

"160 வாங்கவில்லை என்றால் இடமில்லை"

"சாதிக்கு என ஒரு காலத்தில் இங்கு இடம் கிடைத்தது; இன்று மதிப்பெண்களைச் சொல்லித் தான் இடம் கேட்க முடிந்தது. இருநூறுக்கு நூற்று இருபது; அவ்வளவுதான். அவனால் ஈட்ட முடிந்தது.

"பதிவு செய்திருக்கிறேன். நீங்கள் உதவி செய்ய வேண்டும்" என்று கூறுகிறான்.

ஒரு காலத்தில் அவர் பேராசிரியர் என மதிக்கப் பட்டவர். அந்தக் கல்லூரியில் அவருக்கு உள்ள தொடர்பு மாலை மரியாதையுடன் நீங்கி விட்டது; என்றாலும் அவருக்கு ஒரு முத்திரை; அந்தக் கல்லூரி அவர் கையில் இருப்பதாக இந்த 'நூற்றிருபது' நினைக்கிறான்.

"நீங்கள் மனசு வச்சால் முடியும்; பிரின்சிபால் நீங்கள் சொன்னால் கேட்பாரு; நீங்கள் நினைத்தால் நிச்சயம் வாங்கிவிட முடியும்"

அவனுக்கு எப்படிப் பேச வேண்டும்? எப்படிப் பிறரை வளைக்க முடியும்? இந்தக் கலை அவனுக்குக் கை கொடுக்கிறது. ஜாங்கிரி வளைப்பது போல் பிடிப்பவரைப்

பிடித்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது அவன் அசையாத நம்பிக்கை.

இந்த மாஜி அமைச்சர் அதாவது மாஜி பேராசிரியர் இவரை மதித்து ஒரு மாணவன் அணுகுகிறான் என்றால் அவர் உச்சி குளிர்கிறது. பனிக்கட்டி தலையில் வைத்தது போல் என்று உவமை கூறுவார்கள். அதற்குப் பொருள் அவன் செய்கையால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

''சரி! நான் ஒரு கடிதம் தருகிறேன்; என்னுடன் அதே தொழில் செய்தவர் இன்னும் அங்கு அதே தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார். அவரைப் போய்ப் பாரு'' என்று கூறுகிறார்.

''சிபாரிசுக் கடிதம்'' என்று அவன் நினைக்கிறான்.

இந்தக் காலத்தில் யார் யாருக்கு சிபாரிசு செய்ய முடிகிறது? எல்லாம் காசுதான். அந்த வார்த்தையை அதற்குச் சேர்ப்பது பொருத்தம் இல்லை என்று அவர் கூறுகிறார்.

அமைச்சர்கள் தரும் சிபாரிசுக் கடிதங்கள் அவையே வெறும் கண்துடைப்பு; வருகிறவர்கள் நெருக்குகிறார்கள்; சரி 'அணுக்கர்' எழுதுகிறார். இவர் கையெழுத்து இடுகிறார். அமைச்சரிடமே கடிதம் வாங்கிக் கொண்டோம்; கவலை விட்டது என்று அனாவசியமாகப் போகிறார்கள். நடப்பது என்ன ?

''பார்க்கலாம் கடிதம் வச்சிருக்கேன்'' இப்படித்தான் பதில்கள் வருகின்றன.

அந்த அதிகாரிக்குத் தெரியும். அது 'வெறுந்தாள்' என்பது.

இந்த மாஜி ஆசிரியருக்கு சிபாரிசு தரும் தகுதி இல்லை என்பது அவருக்கும் தெரியும்.

என்ன செய்வது?' அவன் தெய்வ நம்பிக்கை அதை ஏன் கெடுப்பது; எழுதித் தருகிறார்.

“ஓ” பேராசிரியர் எழுதிக் கொடுத்தாரா? அவர் நல்லவர். எங்களுக்கு நண்பர். என்னால் மறுக்க முடியாது தம்பி! ஒரு வாரம் பொறுத்து வா! பார்த்துச் சொல்கிறேன், இவர் உடன் தொழில் செய்தவர் வயது தளராத காரணத் தால் அங்கு அப்பணி செய்பவர்.

பாவம் அவர் என்ன செய்ய முடியும். நிர்வாகம் பேராசிரியருக்கு எங்கே மதிப்புத் தருகிறது. முதல்வரையே அவர் சென்று பார்க்க முடியாது; அது அறுவடைக் காலம்; இவரால் எப்படி உள் நுழைய முடியும்?

அமைச்சர்களின் கடிதங்கள் அவற்றையே அவர் சேர்த்து வைத்திருக்கிறார். மிரட்டல் அறிவிப்பு வருகிறது. பணிகிறார். சில மாணவர்கள் மதிப்பெண்கள் இல்லாம லேயே மதிப்புப் பெறுகின்றனர்.

இந்தப் பேராசிரியர் இதைக் கவனிக்கும் அலுவலர் அவரை அணுகுகிறார்.

“நூற்று அறுபதுக்குக் குறைவாக யாரையும் எடுப்ப தில்லை. நீங்கள் மறந்து விடுங்கள். அந்தப் பையனை வேறு இடத்தில் முயற்சி செய்யச் சொல்லுங்கள்” இது அலுவலர் அறிவுரை.

“பேராசிரியர் தம்மால் இயலாது என்று சொல்லி விட்டார்” இது மாணவன் மறுமுறையீடு.

“என்னதான் சொல்கிறார்?”

“அவரை மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறார். மதிப்பெண் போதாது” என்று கூறுகிறார்.

“ஏன் இந்த மதிப்பெண்கள்?” இதற்குப் பல்கலைக் கழகம் அனுமதி தராதா?

“இல்லை சார்! மதிப்பெண் அடிப்படையில்தான் இடம் தருகிறார்கள். ரொம்பவும் கடுமையாக இருக்கிறார் கள். அப்படி அவர் சொல்கிறார்.”

அவனே தொடர்ந்து பேசுகிறான். ''கந்தசாமி; அவன் நூறு தானே வாங்கினான்; அவனுக்கு எப்படி இடம் கிடைத்தது? எல்லாம் சும்மா சொல்கிறார்கள் சார். காசு வாங்கிக் கிட்டு இடம் தருகிறார்கள்''.

''இல்லேப்பா? முதல்வர் அப்படிப்பட்டவர் அல்ல; காசு அவர் கையில் தொட மாட்டார்; எனக்குத் தெரியும்''

''அதுக்கு ஏன் அந்தப் பதவிக்கு வர வேண்டும்?'' என்று அனுபவம்மிக்க மொழியில் பேசுகிறான்.

''முதல்வர்கள் தவறு செய்வது இல்லை. நிர்வாகிகள் தான் தவறு செய்கிறார்கள். அவர்கள் இவர் தவறு செய் யாமல் கண்காணிக்கிறார்கள். அந்த இடத்தை அவர்கள் இழக்கத் தயாராக இல்லை. இதுதான் உண்மை.''

''பிறகு வழி?''

இவர் 'மாஜி' அவ்வளவுதான். செல்வாக்கு இல்லாத ஒரு தொழில் இருக்கிறது என்றால் இதுதான்; ஆசிரியத் தொழில்தான் என்பதை அவரால் உணர்ந்து அடங்கி இருக்க நேர்கிறது.

''சார் நன்றி! இடம் கிடைத்து விட்டது''

''பெருமகிழ்ச்சி; என் வாழ்த்துக்கள். நான் சொல்ல லே என் நண்பர் அவருக்குச் செல்வாக்கு இருக்கிறது; அவர் சொன்னால் முதல்வர் கேட்பார். என் பேரைச் சொல்லி இருப்பார். அதனால் கட்டாயம் தருவார். தந்திருக்கிறார்'' என்று இவர் தன் பெருமிதத்தை வெளிப் படுத்துகிறார்.

''இல்லை சார்! தனியார் நிறுவனம்; அதில் ஐம்பதாயிரம் நன்கொடை தந்தேன்; கிடைத்து விட்டது. சுலபம்; கவலையே இல்லை'' என்று அவன் தன் சாதனையைத் தெரிவிக்கிறான்.

அவர் வெட்கப்பட்டார்; எதற்கு? இந்நாட்டின் சீர்கேட்டை நினைத்து. அதில் வேதனையும் கலந்திருந்தது.

# 10

# வைர மோதிரம்

அவர் எதிர்பார்க்கவில்லை; காலமெல்லாம் தமக்குத் துணை என்று நினைத்த 'கால்கட்டு' இறுதியில் 'கால் கட்டோடு' தன்னை விட்டு நீங்கும் என்று எதிர்பார்க்க வில்லை. மறைந்த அந்த மாணிக்கத்தின் கனவு எல்லாம் பூவும் பொட்டோடும் பயணம் செய்ய வேண்டும் என்பது. மற்றவர்கள் கூறினார்கள். "அவள் கொடுத்து வைத்தவள் முன்னால் போய்விட்டாள்" என்று பேசினார் கள்.

எதற்காக இப்படிப் பேசுகிறார்கள் என்பது அவருக்கு விளங்கவில்லை. பின்னால் இருந்து சிறுமை படுவதைவிட இது பெருமை என்று நினைக்கிறார்களா? சுயநலமா? பாரத கலாச்சாரம் இப்படி அவர்களைப் பேச வைக்கிறது என்று முடிவு செய்கிறார்.

அடுத்தது 'சம்சாரம் ஒரு மின்சாரம்'; எங்கே சென் றாலும் அதிர்ச்சிதான்.

பெண் அதாவது தன் மகள்; அவள்தான் ஆறுதல் என்று நினைக்கிறார். மருமகள் அந்நியம் என்று கால மெல்லாம் பேசப்பட்டு வருகிறது. அதை அவர் நம்புகிறார்.

நிழல் தேவைப்படுகிறது. எந்த மரத்தில் சாய்வது? ஏன் முதியோர் இல்லத்தில் வதிதல் செய்யக் கூடாது என்று

நினைக்கிறார். வசதி இருக்கிறது. உண்பது உறங்குவது அல்லால் வேறு என்ன இருக்கிறது. அந்த நிலைதானே தன் நிலை? எண்ணிப் பார்க்கிறார்.

எந்த இல்லம் சுகவாசம் என்று எண்ணிப் பார்க்கிறார். அங்குள்ள சகவாசம் அதையும் அளவிட்டுப் பார்க்கிறார்.

'பழங்கதைகள் பேசுவதில் ஓர் மகிமை இல்லை' என்ற வரிகள் எதிர் ஒலிக்கின்றன.

அங்கே 'அவலம்' அதுதான் நிழலாடும். வேறு என்ன பார்க்க முடியும். சிரித்த முகம்; அதுதானே வாழ்க்கையின் உற்சாகம். யாராவது சிரிப்பார்களா?

நோயைத் தவிர வேறு என்ன அங்குக் காண முடியும்? அவலம், கவலை, கையாறு, அழுங்கல் இவை தாமே அங்கு எதிர் ஒலிக்கும்,

''அந்த அம்மா போய்விட்டது எங்களால் நம்பவே முடியவில்லை'' என்று ஆறுதல் சொல்ல வந்தவர் சிலர்.

ஏன் இவர்களுக்கு இந்த அவநம்பிக்கை? அவர்கள் தாம் போய்விட்டார்கள் அச்சடித்த அறிவிப்பு அதில் மூலையில் சிறிது கருப்பு உத்தரகிரியை என்று தலைப்பு; வேறு என்ன சான்று கேட்கிறது?

இவராலேயே நம்பமுடியவில்லை. ஆம் தன்னோடு வாழ்வது போன்ற உணர்வுதான் ஏற்படுகிறது.

சந்தியில் விட்டுச் சென்றுவிட்டாள். எந்தப் பக்கம் போவது?

மகள்தான் தன் வயிற்றில் பிறந்தவள்; மாப்பிள்ளை; அவன் கடந்த காலச் சுரண்டல்கள் நினைவுக்கு வருகின்றன. வைர மோதிரம் வாங்கித் தந்தால்தான் வயிறு நிரப்புவேன் என்று அடம் பிடித்தவன்.

அன்று இவரால் வாங்கித் தரமுடியவில்லை. எந்த முகம் கொண்டு அங்குப் போவது?

நிச்சயம் மருமகள் அவள் முகம் காட்டுவாள். ''இந்தக் கிழம் எனக்கு ஒரு கயிற்று முழம்'' என்று பேச வாய்ப்பு உள்ளது.

''இந்தக் கிழம் கட்டைகளை நான் ஏன் சுமக்க வேண்டும்'' என்று பேசினால் என்ன செய்வது?

யாருக்கும் சுமையாக இருக்கக் கூடாது; மனைவி தான் விட்டுச் சென்றாள். தான் கட்டி வைத்துக் குடியிருக்கும் வீடு இருக்கிறது.

அவர் கண்கள் அந்தச் சமையல் அறையை நோக்குகிறது. தண்ணீர் தவறாது வரும் குளியல் அறை தெரிகிறது. வட்ட மேசை மாநாடு நடத்த அவர் வாங்கிப் போட்ட மேசை நாற்காலிகள் இருக்கின்றன. பரிமாறத் தட்டு கரண்டிகள் பட்டவர்த்தனமாகக் கிடக்கின்றன.

கட்டில் போட்ட அறை; வட்ட வடிவான காற்று விசிறி; திட்டமிட்ட அறை; தான் படித்து ஓய்ந்து ஒதுக்கி வைத்த பழைய புத்தகங்கள்.

வேண்டுவது ஒன்று; பணி செய்ய ஒரு மனித நேயம்; அது ஆணா, பெண்ணா அவர் எதிர்பார்க்கிறார்.

'தாத்தா' என்ற குரல் வெளியே அழைக்கிறது.

மனிதநேயம் அந்தக் குரலில் ஒலிக்கிறது.

''வா தாத்தா நம்ம வீட்டுக்கு'' அவன் அழைப்பு; அவன் பின் மருமகள் மகன் இவர்கள் அணிவகுப்பு.

பாசம் அவரைத் தழுவுகிற நேரம்; அவரைக் கரம் நீட்டி அழைக்கின்றது.

பேரன் அவன் சிரித்த முகம்; அவரைச் சீராக்குகிறது.

தன் கைவிரல்களுக்கு அவன் வைர மோதிரம் அணிவதைப் போல இருந்தது.

'என்னடா இது' என்று கேட்கிறார். அவர் கை விரல்களை அவன் சுண்டு விரல்கள் வளைத்து இழுக் கின்றன.

உண்மையில் அதுதான் அவருக்கு வைர மோதிரம்; வாழ்க்கைப் பரிசு; அவரால் முடிவு செய்ய முடிகிறது.

# 11

# எப்படி முடிப்பது?

''என்னங்க சார்! எப்படி இருக்கீங்க?''

''இருக்கேன் உங்க தயவாலே''

''நம்ம கையிலே என்ன இருக்குது?''

''எல்லாம் அவன் கையிலே தான்''

அவன் என்பது ஆண்டவன் என்பது தெரிந்து வைத் திருக்க வேண்டும். இது சம்பிரதாயமான பேச்சு; அது முடிகிறது.

இவன் சும்மா இருப்பது இல்லை; ஏதாவது எழுதிக் கொண்டிருப்பான்.

கேட்டா ''இன்று திரைப்படங்களில் கதை பஞ் சம்'' என்பான்.

''யாராவது உன்னைத் தஞ்சம் அடைந்திருக்கிறார் களா?''

''இல்லை; அதிலே புகுந்து முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆசை'' என்பான்.

Wanted என்று யாரும் விளம்பரம் செய்யவில்லை. கதைகள் தேவை என்று யாரும் இவனை அழைக்க வில்லை.

அவனுக்கு ஒரு ஆசை; கதை எழுதுவது என்பது;. யார் அவனைத் தடுக்க முடியும்?

தாள்கள்; ஒருபேனா; இவை அவன் மூலதனம்.

அவன் எழுதுகோல் ஏந்தினாலே மற்றவர்கள் அஞ்ச வேண்டியதுதான். கதைகள் அவன் மையில் கசிந்து வெளி வந்து கொண்டிருந்தன.

''இதோ பாருங்க. நான் கதை சொல்றேன். அந்த டைரக்டர் எங்கே கவனிக்கிறான்? 'லொகேஷன்', 'சிச்சுவேஷன்', 'டிஸ்கஷன்' இப்படி ஏதோ அவன் அகராதியே தனி; காது கொடுத்துக் கதையைக் கேட்டால் தானே சொல்ல முடியும்'' என்று தன் புலம்பலை வெளியிடுகிறான்.

இவன் வாயசைத்துச் சொல்லி இருக்கிறான்; கை யசைத்து நடித்தும் காட்டி இருக்கிறான். அது அரு வருப்பாக இருந்தது. இவனை அவர் கவனிக்கவே இல்லை.

எழுதிய கதை வீணாகப் போகக் கூடாது? அது அவன் கவலை. யாராவது ஒருவர் கேட்டால் அது போதும். அது அவன் எதிர்பார்ப்பு.

அவன் படிக்கிற காலத்தில் பஸ் டிக்கட் வாங்கித் தந்து இருக்கிறான். இவரிடம் அன்று சில்லறை இல்லை; அந்த நன்றி; கதையைக் கேட்பது என்ற அவசியம் ஏற் பட்டது.

'பாலியல் தொழிலாளி' என்று கதையைத் தொடங்கினான்.

அவர்கள் டெல்லியில் கோட்டையை நோக்கிக் கொடி பிடித்தது நினைவுக்கு வருகிறது.

"Sex Workers" என்று அவர்கள் கொடி பிடித்தார்கள். அதன் தாக்கம் இவன் இந்தச் சொல்லைப் படைத்திருக்கிறான் என்பதை அறிய முடிந்தது.

''இவர்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்?''

''வக்கிரங்கள் இவற்றை இன்று வார இதழ்களில் விரிவாக எழுதுகிறார்கள்; படிக்கிறேன்; அவற்றை வைத்துக் குறிப்பு எடுத்து வைத்திருக்கிறேன். விரிவாக எழுத முடியும்'' என்று பதில் கூறுகிறான்.

'சென்னையில்' என்று ஒரு வாரம் வருகிறது; அடுத்த வாரம் 'திருச்சியில்' என்று விளம்பரம், இனி மதுரை, விருத்தாசலம் அரட்டை அரங்கு போல் ஒவ்வொரு ஊருக்கும் சென்று செய்திகள் சேகரித்து எழுதுவார்கள் என்று தெரிகிறது.

''இதை வைத்தா கதை எழுதப் போகிறாய்?''

''அவர்கள் சர்குலேஷன் இதற்குப் பிறகு இரட்டிப்பாகி இருக்கிறது. இது நல்ல subject'' என்று விளக்கம் தந்தான்.

''இதற்கு predicate வேண்டும். பார்த்து கவனமாக எழுது; தப்பு இல்லாமல் எழுது; அனுபவமில்லாமல் எழுதினால் பிழைகள் வரும்'' என்கிறார் இவர்.

''வாசகர்களுக்கும் அனுபவம் இருக்காது, அவர்களால் தவறுகளைக் காண முடியாது'' என்று நம்பிக்கை தெரிவித்தான்.

அவன் பேச்சு எங்கெங்கோ தாவுகிறது.

"நீ வக்கிரங்களை எழுதுவதில் இப்பத்திரிகை ரிப்போர்ட்டர்களை விஞ்ச முடியாது. ஏதாவது நல்ல கதை எழுது" என்று அறிவுரை கூறுகிறார்.

'ஒரு கிராமத்துப் பெண்' என்று ஆரம்பிக்கிறான்.

"அவள் நகரில் கல்லூரியில் சேருகிறாள். மகளிர் விடுதியில் அவளுக்கு இடம் கிடைக்கிறது. அடுத்து இப் படித்தானே எழுதப் போகிறாய்?" மேலும் தொடர்கிறார். "இப்படித்தானே எழுத்துத் தொடங்குகிறது. இது பார்முலா; சரி! அப்புறம் என்ன செய்யப் போகிறாய்?"

"அவள் கெட்ட சகவாசம் அதில் அகப்பட்டுக் கொள்கிறாள். போதை மருந்துக்கு அடிமையாகிறாள்".

"இது சினிமாகப் பாணி; அப்புறம் அவள் மீட்கப்படுகிறாள். அல்லது திருந்துகிறாள். பிறகு அவள் அமைச்சர் மகன் மீது வழக்குத் தொடுக்கிறாள். அவனை உள்ளே தள்ளும் வரை அவள் உறங்கவே இல்லை?"

"இது எப்படி உங்களுக்குத் தெரியு?"

"டி.வி. படம் பார்க்கிறது இல்லையா?"

"பார்த்தால் என் ஒரிஜினாலிட்டி கெட்டுவிடும்; அதனால் பார்ப்பது இல்லை"

"நல்லதுதான் பார்த்தால் இன்னும் உன் மூளை சுறுசுறுப்பாக இயங்கும்".

"அவர்கள் அவளைப் போதை மருந்துவரை கொண்டு சென்றிருக்கிறார்கள். நீ அவளை மற்றவர்கள் கெடுத்து விட்டார்கள் என்றே எழுதலாம். பார்க்காமல் இருந்ததே நல்லது" என்று பதில் தருகிறார்.

"நமக்குக் கதைகள், டி.வி, சினிமா, பத்திரிகை ரிப் போர்ட் இவைதானே 'இன்ஸ்பிரேஷன்" என்று ஆங்கிலத் தில் வெளிப்படுத்தினான்.

"அடப்பாவி அவர்கள் கெடுப்பது போதாது, நீயும் அவர்களோடு சேர்ந்து".

"பின் எப்படித்தான் முடிப்பது?"

"இன்று பெண்கள் நீங்கள் எழுதும் கதைகள் அல்ல; அவர்கள் பொறுப்பு அறிந்தவர்கள். டாக்டர்கள், இன்ஜினியர்கள், நாளை பாராளுமன்றத்தில் அங்கத்தினர்கள், ஆட்சித் தலைமைப் பீடம். இது அவர்கள் நிலை. இதை எழுத முடியுமானால் எழுது; பழைய பஞ்சாங்கம்; ஆரம்ப எழுத்தாளர்கள் எடுத்தாண்ட வக்கிரங்கள் அவை இன்று எடுபடாது. அவள் ஒழுங்காகப் படித்துத் தேர்வு பெற்று ஒரு டாக்டர் ஆனாள்; மேல்நிலை அடைந்தாள் என்று எழுது; அதுதான் உன் எழுத்துக்கு மதிப்பு உண்டாகும்" என்று சொல்ல நேர்ந்தது.

# 12

# நன்கொடை

அவர் எதிர்பார்க்கவில்லை. தொடர்ந்து நன்கொடை வசூல்காரர்கள் வருவார்கள் என்று.

இளம் பெண் அவள் கையை நீட்டுகிறாள்.கழுத்தில் அவளுக்குத் தளை இல்லை. அந்த நிலைக்கு அவள் தள்ளப்படவில்லை.

தாலி கட்டிக் கொள்ள ஆசைப்படுகிறாள். அதற்காக அவள் தாய் உடன் கட்சி சேர்ந்து வாக்கு கேட்கிறாள்.

"என்னம்மா உங்களுக்கு?"

"என் பெண்ணுக்குக் கலியாணம் ஆகணும்"

"எனக்கு என் மனைவி இருக்கிறாள். தேவை இல்லை" என்று பதில் சொல்கிறார்.

"உங்களுக்குத் தேவை இல்லை; அவளுக்குத் தேவை இருக்கிறது"என்று அடுக்குகிறாள்.

"மணமகன் தேவை" என்று விளம்பரம் இட்டால் ஒரு மடமகன் கட்டாயம் வருவான்" என்று அறிவுரை தருகிறார்.

"பொருள் உதவி" என்கிறாள்.

"தமிழ் அரசு எல்லா அரசும் அது என்றும் இதில் அக்கரை காட்டுகிறது. அவர்கள் உதவி தருவார்கள்".

"கட்டியவர்கள் மணமானவர்கள் பிள்ளைகளை மறைத்து வைத்து விட்டுத் தாலி ஏற்கிறார்கள்!. இதுதான் நடக்கிறது" என்கிறாள்.

அவளுக்கும் ரசனை இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. "நான் மணத்தை ஆதரிப்பதில்லை" என்று சொல்லி அவர்களை அனுப்பி வைக்கிறார்.

"இவன் பிரம்மசாரியாக இருந்தவன். இப்பொழுது சம்சாரியானவன். அனுபவத்தின் அடிப்படையில் அந்த உபதேசம் சொல்கிறான்" என்பதைக் கூறி அவர்கள் தங்களுக்குள் விமரிசித்து விலகுகிறர்கள்.

காவி வேட்டி; சந்தன பொட்டு; அது ரேஷன் அளவை மீறுகிறது. பொட்டு அல்ல; அது நெற்றியில் ஒரு திட்டு ஆகிறது. அந்த அளவுக்கு இதற்காகவே அவர் திருநீர் ஸ்நானம் செய்திருக்கிறர் என்று தெரிகிறது. ஞானஸ்நானம் பெற்றவர் போல் காட்சி தருகிறார். சாம்பலில் புரண்டு எழுந்தவர் போல் காட்சி தருகிறார்.

"முருகன் கோவில் கட்ட வேண்டும்"

"அதுதானே இன்றைய பிரச்சினை; கட்டக் கூடாது என்று எதிர்கட்சிகள் பேசுகின்றன. நீ கட்ட வேண்டும் என்கிறாய்."

"அது அயோத்திப் பிரச்சினை. இராமர் பிறந்த இடம். அது வேறு; இது வேறு" என்று விளக்குகிறான்.

"தயவு செய்து மன்னிக்கவும். தெய்வத்தின் பேருக்குக் களங்கம் விளைவிக்க விரும்பவில்லை. நீ போகலாம்". என்கிறார்.

அவன் தெய்வத்தைக் காட்டி அரசியல் செய்கிறான் என்பதை உணர முடிந்தது.

இரண்டு இளைஞர்கள்; படிக்கிறவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். கையில் கிழிந்த நோட்டு அதனை நீட்டுகிறார்கள்; கிழியாத நோட்டுக் கேட்பது போல இருக்கிறது.

இவர் பொறுமை எல்லை கடக்கிறது. "இந்த 'நன் கொடை' நாட்டின் உள்ளுருக்கி நோய்" என்று முணு முணுக்கிறார்.

"என்னப்பா வேண்டும்?"

"நாங்கள் பட்ட வகுப்புப் படிக்கிறோம்;. பொருள் உதவி தேவை" என்கிறார்கள்.

அவர்கள் தமிழ்ப் பற்று இதில் தெரிகிறது.

இவர் பதில் சொல்லவில்லை.

பச்சைத் தமிழில் சொன்னால் புரியவில்லை என்று நினைக்கிறார்கள். 'டொனேஷன்' என்று பழகு தமிழில் விளக்குகிறார்கள். அந்தச் சொல்லுக்கு உயர் பொருள் உள்ளது என்பதை அவர்கள் வற்புறுத்துவது போல இருந்தது.

"உனக்கு எவ்வளவு வேண்டும்?" அதில் பரிவு கலக்கிறது.

"விருப்பம் போல் தரலாம்"

அவர்களுக்கு நம்பிக்கை மிகுகிறது. உயரப் பறக்கிறார்கள். அழகப்பா வள்ளலிடம் அளவளாவுவது போல் இருந்தது.

"நான் இல்லை என்று கூறினால்; மறுத்தால்?"

"உங்கள் விருப்பம்"

"அவர்கள் மனநிலை சான்றோர் நிலையை ஒத்திருந்தது. உயர்விலும் தாழ்விலும் சமநிலை காண்பவர் அறிஞர்கள். அவர்களைச் சான்றோர்கள் என்று கூறுவது மரபு.

இந்தச் சான்றோர்கள் அவர்கள் சால்பு இவரைக் கவர்கிறது.

"நோட்டு ஒன்று நீட்டுகிறார். அதிகம் இல்லை; அளவானதுதான். விரல்கள் எண்ணிக்கைதான்; பத்துமா?" என்கிறார்.

அவர்கள் பற்றிச் சொல்கின்றனர்.

வாழ்க்கைப் பங்காளி வீட்டில் உள் இருந்து வருகிறாள். "உங்களுக்கு என்ன பைத்தியமா? வருகிறவர்களுக்கு எல்லாம் கொடுத்தால் நாம் பிச்சை எடுக்க வேண்டியதுதான்; படித்த இளைஞன் படி ஏறி நிற்கிறான்; பிச்சை கேட்கிறான்" என்று கடிந்து உரைக்கிறாள்.

நண்பர் இவர் ஒத்தவயது; இவரைத் தேடி வருகிறார்.

"இவரும் ஏதாவது கடன்?"

"யார் அந்த பசங்க?"

"பட்டப் படிப்புப் படிக்கிறார்கள். அந்தத் திட்டத்துக்குப் பொருள் உதவி கேட்டார்கள்".

"அட பயித்தியக்காரன் நீ; இவர்கள் பட்டம் பெற்றவர்கள்; படித்து முடித்தவர்கள்" என்கிறார்.

"வீதியில் நிற்கிறார்கள்" என்று இவர் பதில் சொல் கிறார்.

"பட்டம் பெறுவதற்கு அவர்கள் டொனேஷன் தந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் இன்று சேம முற வேண்டித் தெருவுக்கு வந்திருக்கிறார்கள் என்று மேலும் இவர் விளக்கம் தந்தார்".

"இவர் இப்படித்தான்; சொல்றதை நம்பி விடு வாருங்க" இது பின்னணிப் பாட்டு.

அவர்கள் இளைஞர்கள்; வேலை கேட்டு இருக் கிறார்கள்; இல்லை. அது அவர்கள் நிலை; வெடிகுண்டு வைக்கத் திட்டம் போடவில்லை; கட்சிகளில் சேர்ந்து கொடி பிடிக்கவில்லை. நாகரிகமாகக் கேட்டுப் பெறுகிறார் கள். அந்தக் கண்ணியம் அவருக்கு மனநிறைவைத் தரு கிறது.

மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்? ஏதாவது நினைக்கட்டும். இந்த நாட்டு நிலவரம் இது.

# 13

# கடைசி வரை

'வீடு வரை உறவு;
வீதி வரை மனைவி;
காடு வரை பிள்ளை;
கடைசி வரை யாரோ?'

இது கண்ணதாசன் வினா.

தாம்பத்தியம் என்பது எதுவரை? இதற்கு இவன் விடை காண முயற்சிக்கிறான்.

எதுவரை இந்தத் தாம்பத்தியம்? அது என்ன பயித்தியம்? இவனுக்கு விளங்கவில்லை; பயித்தியமா, பத்தியமா எதுவரை சாத்தியம்? இவர்கள் பாசம் நேசம் எதுவரை தாக்குப் பிடிக்கிறது. இந்த வினா இந்த இளை ஞனுக்கு எழுகிறது.

இவனுக்கு ஏன் இந்த ஆராய்ச்சி? 'புதிரா, புனிதமா' என்ற நிகழ்ச்சியை இவன் இரவு பத்து மணியளவில் மற்றவர்கள் உறங்கிய பிறகு மெதுவாக ஒலிக்க விட்டு ஓரிருமுறை கேட்டதன் விளைவு இது.

இந்த டாக்டர் ஏன் சினிமாப் பாட்டுகளை உடன் ஒப்புவிக்கிறார். தெரியவில்லை. மற்றவர்களை மகிழ்விக்க நினைக்கிறார். தான் ஒரு சினிமா ரசிகர் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்புகிறார். பரிதாபகரமான காட்சி.

கேட்டதற்கு இவர் பதில் சொல்லி விட்டுப் போவது தானே; சில மேடைப் பேச்சாளர்கள் கைத்தட்டல்கள் வாங்குகின்றனர். அந்தக் கவர்ச்சி இவரையும் பிடித்தது என்பது அவன் மதிப்பீடு.

இவனுக்குப் புதிரா புனிதமா என்ற வினா எழ வில்லை. அது புதிரும் அல்ல; புனிதமும் அல்ல; ஆண் பெண் உறவு; அது சீறி எழுந்து ஆறி அடங்குவது என்பது இவனுக்குத் தெரியும்.

அன்பும் பாசமும் எதுவரை என்ற வினாதான் இவனுக்கு எழுந்தது. 'ஈருடல் ஒருயிர்' என்று சொல் வதெல்லாம் கவிதை; இவ்வாறு அளப்பதைக் கேட்டிருக் கிறான். இவன் சந்தித்த இவர்கள் இரண்டு உயிர்கள்; இரண்டு உடல்கள். இதுதான் சரி என்பது அவனுக்குத் தெரிந்தது.

இவர்கள் வாழ்க்கையில் பிணைப்புப் பெறுகிறார் கள்; வாழ்கிறார்கள். 'இணைப் பறவைகள்' என இணைந்த வராகின்றனர். இப்பொழுது துணை ஒருவருக்கு ஒருவர் என்ற நிலையை அடைகின்றனர். இதுவரை அவன் அறிந்தது இது; அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பது எதுவரை; சுமைகளைத் தாங்குவது எதுவரை என்ற வினா இவனை அரிக்கிறது.

எப்படியோ அந்தப் பெரியவர் இவனுக்குப் பழக்கம் ஆகியிருக்கிறார். காரணம் அவர் தமிழ் பேசினார். அது பிழையில்லாமல் இருந்தது. அது இவனைக் கவர் கிறது. 'சுத்தத் தமிழ்' என்பது அவரிடம் எப்படியோ குடிகொண்டு விட்டது.

அவர் பேசுவது புத்தகம் படிப்பதுபோல் இருந்தது. ஒற்றுப் பிழையும் நேராமல் பேசுவது இவனை வியப்பில் ஆழ்த்தியது.

'தமிழ் ஐயா' என்று அழைக்கலாம் போலத் தோன்று கிறது. அவர் என்ன சாதி? என்ன மொழி இதைப் பற்றி நினைப்பது நாகரிகம் அல்ல; தமிழ் பேசுவது சிறப்பாக இருந்தது; அவ்வளவுதான்.

வள்ளுவர் முதல் வள்ளலார் வரை அவர் பாடல் களை ஒப்புவிப்பார். இது வெறுமையின் வெளிப்பாடு என்பதை இவனால் அறிந்து கொள்ள முடிந்தது; ஏதாவது மனத்துக்கு வேண்டும். அதுதான் இவர்களை இப்படி மனப்பாடம் பண்ண வைக்கிறது. மற்றவர்களிடமும் ஒப்புவிக்கிறார்கள், வியக்கவும் வைக்கிறார்கள். ஒவ் வொரு கருத்துக்கும் ஒரு பழம் பாடல் அவருக்கு சாட்சியாக வந்து நின்றது.

அவருக்கு மணி விழா என்று அறிவிக்கப்பட்டது; இது கொச்சைப்படுத்தி, 'அறுபதாம் கலியாணம்' என்று சொல்லியது இவனுக்குக் கேட்கப் பிடிக்காமல் இருந்தது.

அயோத்தி மன்னன் பண்ணிக் கொண்டது அறு பதினாயிரம் கலியாணம்; பாவம் பரிதாபத்துக்குரியவன்.

இந்த இளைஞனும் அழைப்பிதழ் தரப்பட்டதால் அம் மணி விழாவில் பங்கு ஏற்றான். ஏதோ அவருக்குத் தரவேண்டும் என்று நினைத்தான்.

'திருவாசகம்' அவர் அடிக்கடி ஒப்புவித்தார். அது நெஞ்சை உருக்கும் நூலாக இருந்தது. தன்னைப் பற்றியே ஆராய்ந்து கொண்டு உலகத்தைப் பார்க்க மறுத்த நூல். இந்த வயதானவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு. அது அவர் விரும்பிய நூல்; அதனை அவருக்கு மரியாதைக் காகத் தந்து அவர் பொன்னடியில் விழுந்து வணங்கி பாரத கலாச்சாரம் இது என்பதைக் காட்டினான். அவனுக்கு அது அரசியல் கலாச்சாரமாக மாறும் என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை.

இந்த இணைப்பு நீடித்து இருப்பதை அவனால் கவனிக்க முடிந்தது. ஆண்டுகள் ஐந்து கடந்தன; அவர் மட்டும் தனியே செல்வது நூலகம்; தமிழ்ப் பற்று உடையவர்; அதனாலேயே கூடும் சில கூட்டங்கள்; இவருக்குத் தமிழ் பேசுவது கேட்பது ஒரு பொழுது போக்கு. இங்கே இவர் போவது தனிமையில்தான். ஜோடிப் புறாக்களைக் கண்டது இல்லை. இணைப்பில் ஒரு விரிசில் அவனால் காண முடிகிறது.

வள்ளுவரும் வள்ளலாரும் அவரை விட்டு அகன்று விட்டனர். 'திருவாசகம்' அவர் கையில் எப்பொழுதும் பிரிக்கப்பட்டு அவர் கைரேகைகள் படிந்தன.

"நான் யார்? என் உள்ளம் யார்?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அது அந் நூலில் வரும் வரிகள் என்பது தெரிந்தன.

ஊன், உயிர், உள்ளம் இந்த மாதிரி பேசத் தொடங் கினார். அது அந்நூலின் தாக்கம் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

அந்த அம்மையாரை அவர் இல்லாத நேரத்தில் அவர்களைச் சந்திக்க நேர்கிறது.

"பெரியவர் அவர்?"

"அவருக்கு என்ன வேலை. சதா திண்ணையில் தூங்குவார்; இல்லை என்றல் சொற்பொழிவுகள்." என்று சலிப்பாகத் தெரிவித்தார்.

தமிழ் அழகாகப் பேசுகிறார்; அவரைத் தாழ்வாகப் பேசுவதை இந்த இளைஞனால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

'பூவும் பொட்டும்' என்ற பேச்சு வந்தது.

பூவும் பொட்டும் அதைக் காட்டி அவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறான்.

வெடித்தது பூகம்பம்; அந்தத் 'திருவாசகம்' அங்கு இல்லை; அதனால் பத்திரிகைத் தலையங்கம் அந்த அம்மையாரால் எழுத முடிந்தது.

"நீங்கள் மதிக்கிறீர்கள்; என்னால் அவரை மதிக்க முடியாது"

"இந்த வாசகங்களைப் படிக்கிறார்; குடும்பப் பற்றே காட்டுவது இல்லை".

"இவர் ஒரு மனிதார? பாசம், பந்தம் இவை இவரை விட்டு நீங்கி விட்டன".

"அரவிந்தர், தபோவனம், சாமியார் இந்தப் பைத்தியம் இவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது".

"அவர் என்ன செய்கிறார்? கையில் இருக்கும் ஏடுகளை வைத்துக் கொண்டு பாடுகிறார்".

"யாராவது வந்தால் அவர்களிடம் தத்துவம் பேசுவது; பாட்டு அதில் உள்ள தெய்வீகம் இதைப் பங்கிட்டுக் கொள்வது; நினைத்தால் தல யாத்திரை; இப்படி இவர் நடந்து கொள்கிறார். அவரைத் திருத்தவே முடியவில்லை".

"இவர் இந்த வீட்டுக்கும் சுமை; ஏன் நாட்டுக்கும் சுமை" என்று துணிந்து தலையங்கம் எழுதினார். அந்த அம்மையார்.

இருவர் உறவு இதற்கு இடையே உள்ள பிளவு இவனால் அறிந்து கொள்ள முடிகிறது. சலிப்பு என்பது எந்த நீட்டிப்பிலும் உள்ளது என்பதை அவனால் சிந்திக்க முடிகிறது.

அவர்பால் பரிவும் பாசமும் கொண்டு அவர் தொழில் செய்த காலங்களில் ஒதுங்கி இருந்து தொந்தரவு செய்யாத நோய்கள் முற்றிய அவர் வயதில் அவரை வந்து முற்றுகை இடுகின்றன. நாளடைவில் பழகிய தோஷத்தால் அவனை விட்டுப் பிரியாத தோழனாக உறவு கொண்டன.

சில நோய்கள் இதயத்தையும் தொட்டன; அவருடைய பணி, தொழில் ஈடுபாடு எல்லாம் ஆன்மீகம்தான். அதைப் பற்றிப் பிறரிடம் உளறிக் கொண்டிருப்பார். அவற்றைப் பற்றிய விவாத வாய்ப்புகள் அவரை விட்டு நீங்குகின்றன.

அவர் படித்து வந்த வாசகங்கள் அவர் மனச் சுமைக்கு மாத்திரைகளாக இருந்தன. "கடைசி வரை யாரோ" என்ற கதறல் அவரைத் தன்னை ஒரு வேதாந்தி யாகக் காட்டியது. ஏன் அந்தக் கதறல்? மக்களை மடமை யாக்குகிறது. இதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

நோய் முத்திரை சில சமயம் மருத்துவமனையில் அவரை நித்திரை கொள்ளவும் செய்தன.

வெறுத்து விமர்சித்த அந்தப் பத்திரிகை விமரிசகர் அவரை அறுத்துக் கொண்டு அகலவில்லை; அவர்கள் அந்த மருத்துவ அறையில் தங்கி இருக்க அனுமதி பெற்று உடன் இருப்பு என இருந்தார்.

அங்கே இருந்த நாட்களில் அவர் (அந்த அம்மையார்) பாதி மருத்துவர் என்று சொல்லப்பட்டது. நோய் நாடி அவற்றின் குணம் நாடி அங்கு இருக்கும் கருவிகள் இவற்றின் பெயர்கள் அறிந்து வைத்துச் சர்க்கரை, கொழுப்பு, புளிப்பு இந்தச் சுவைகள் கேட்டவுடன் சொல்லும் புலமை பெற்றிருந்தார். 'பி.பி' இதுதான்; அவ்வப் போது தெரிந்து வைத்து வந்தவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

இதயம் இடதுபுறம் உள்ளது; அவர் தன் இதயத்தைப் பறிகொடுக்காமல் இருக்கச் சகல மருத்துவமும் செய்யப்பட்டன. நாளங்களை மாற்றுவதாகக் கேள்வி.

தனியார் மருத்துமனை; அதனால் காத்திருந்துதான் உள்ளே நுழைய முடிந்தது. 'டிப்ஸ்' கொடுத்தால் அதை அவன் வாங்கிக் கொண்டான். ஆனால் அவன் உள்ளே விட்டது நான்கு மணி ஆன பிறகுதான்.

அந்தத் தாம்பத்தியம்; இருவர்தம் உறவு எதுவரை அதை அறிய அவனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது.

அந்தப் படுக்கை அறையை அவர் இவ்வளவு அசிங்கப்படுத்துவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அவசரம்தான்; அதனால் நர்சுகள் விழுந்து அடித்துக் கொண்டா வரமுடியும். நேரத்தின் முள் அதன் இயக்கத்தில்தான் அசையும். அது தன் கடமையைச் செய்கிறது. இவர்கள் அதை அறிந்து வருவதற்குள் ஒரு ஜீவன் அங்கு இயங்கி அவரைத் தாங்கி அவரை மனிதராக மாற்றி வைக்கிறது.

அந்த நர்சுகள் பிரமையோடு அந்தப் பிரமன் படைப்பைப் பார்க்கிறார்கள். எப்படி ஒரு நோயாளியைக் கவனிக்க வேண்டும் என்பதை அவர்கள் முழுவதும் அறிய முடிகிறது; இது தொழில் அல்ல; சேவை என்பதை அறிகிறார்கள்; அறிய வைக்கப்படுகிறார்கள்.

அங்கு ஒரு இயந்திரத்தை அவர்கள் காணவில்லை. ஒரு ஜீவன்; அதன் இயக்கத்தைக் காண முடிந்தது. உடல் அல்ல அது; உயிரின் இயக்கம் என்பதை அறிகிறார்கள்.

உயிர் ஒன்று மற்றொரு உயிரைத் தேடிச் சென்று அதனோடு இணைந்து ஒன்றாக இயங்குவது போல இவனுக்கு (இந்த ஆய்வாளனுக்குத்) தெரிகிறது.

ஈருடல் ஓர் உயிர் என்பது கவிதை அல்ல; உண்மை என்பதை அவனால் நேரில் காண முடிகிறது.

கண் விழித்துப் பார்க்கும் நேரத்தை இவன் கண் விழித்துப் பார்த்துக் கொண்டு காத்து இருக்கிறான்; வாய் அசைகிறது; சொற்கள் ஒலி பெற்று வெளி வருகின்றன. இந்த அன்பன் அவனுக்குச் சாத்திரங்கள் பேசிய வாய்; வள்ளுவர் குறளை ஒப்புவித்த ஓசை; வள்ளலார் பாடல் சிறப்பாகப் பாடிய நாதம்; திருவாசகம்; சில கருத்துக்களை வெளியிட்டன.

''நான் இந்த மண்ணுக்குச் சுமை; பூமிக்கும் பாரம்; நோய்கள் என்னை வாழ விடாது; மறுபடியும் உங்களிடம் எந்தத் தத்துவங்களையும் பேச மாட்டேன்; பேச வாய்ப்பு இருக்காது; இனி இது நான் சொல்வது :

''கடைசி வரை யாரோ' என்ற கதறல் அர்த்தமற்றது; நேசிக்கும் நண்பன் நீ; சுவாசிக்கும் இறுதி மூச்சு; கரம் பிடித்த காரிகை இவள். இந்த உண்மையைச் சொல்லு கிறேன்; எழுதி வைத்துக் கொள்'' என்றார்.

அவர் மூடிய கண்களை அவரால் திறக்க முடியாமல் போயின; அவர் தேடிய தத்துவம் மட்டும் இவன் தாங்கிக் கொள்கிறான்.

# 14

# அடி சறுக்கியது

இந்த வண்டி இப்படி மொன்டித்தனம் செய்யும் என்று அது முன் கூட்டிச் சொல்லவில்லை. இந்தச் சாதியே இப்படித்தான்.

அறுவதுபேர் கொள்ளும் பஸ் ஐம்பது அடி ரோட்டில் தனித்து விடப்படுகிறது; அது நகர்வது இல்லை. மற்றவர்கள் இறங்கிப் போய்க் கொண்டே இருக்கிறார்கள். பஸ் டிக்கட் அதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவது இல்லை.

அவர்கள் அவரவர் போய்ச் சேரும் இடத்தை அடுத்து பஸ், ஆட்டோ ஏதோ பிடிக்கிறார்கள், போகிறார் கள். ஒரே ஒரு சொல் 'break down' அவ்வளவுதான்; அதற்குப் பிறகு செயலிழந்து சொல்லிழந்து தன் விதியை நொந்து அநாதையாக அங்கேயே தவம் இருக்கிறது அந்த பஸ்.

'Break down' என்ற சொல் அதற்குப் பொருள் தெரியாமல் இருந்த நிலை.

இவர் ஏறிச் சென்ற "கார்" இரும ஆரம்பத்தது "டர்டர்" என்று இழுத்துப் பார்த்தான்; அது தன் கர்வத்தை விட்டுச் கொடுக்காமல் "மக்கார்" செய்தது; இது டிரைவர் கூறியது. அவன் பரிபாஷை அது.

''என்னப்பா வண்டி போய்ச் சேருமா?''

''பார்த்து ஓட்டுகிறேன். எப்படியும் ஷெட் வரை போய்ச் சேர்ந்து விடலாம்''. இது டிரைவர் தந்த உறுதி மொழி; அவன் அதைக் காப்பாற்றி விடுகிறான்; பத்திர மாகச் சேர்க்கிறான்.

குறைந்த தகடுகள்; திறந்தவெளி; சிமெண்ட் போடாத தரை; அதற்கே உரிய அமைப்பு; மெக்கானிக் ஷெட்.

இனிக் கவலை இல்லை; வண்டி பழுது பார்த்து அனுப்பி விடுவார். அவர் வரும் வரையும் ஒரு காலட்சேபம் தேவைப்பட்டது; சும்மா எப்படி அங்கே உட்காருவது? நேற்றைய பத்திரிகை கசங்கிக் கிடந்தது; அதைப் படித்தாகி விட்டது.

மெக்கானிக் ஷெட் காவலாளர் அவர் ஒரு காலத்தில் ஓடியாடி உழைத்தவர். அவர் எங்களைப் பேச்சுக் கொடுத்து நிறுத்தி வைக்கும் பொறுப்பு ஏற்கிறார்.

அங்கே கசங்கிக் கிடந்த பத்திரிகைச் செய்தி அவர் வாசித்ததன் விளைவு.

''பாருங்க இந்த சுசிலா, காவல் அதிகாரி மற்றொரு பெண் அவளும் காவல் அதிகாரி இரண்டு பேரும்'' என்று விவரிக்கத் தொடங்கினார்.

அதிகாரிகள் இப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பது; அவர் தன் கருத்தை அறிவிக்கிறார்.

எங்கோ மூலையில் நடப்பது; அது அம்பலத்துக்கு வருகிறது. இதை இவர் எடுத்துப் பேசுகிறார்.

சில அபூர்வ நிகழ்ச்சிகள் விமரிசனத்துக்கு உள்ளா யின. கேட்பதற்கு சுவராசியமாக இருப்பதால் அதைச் சுற்றி அவர் பேச்சு அமைகிறது.

ஏற்கெனவே படித்துவிட்ட செய்தி; அதனால் அது இவர்களைக் கவரவில்லை.

அதோடு அவர் விடுவதாக இல்லை. "ஏழு பேர் ஒரு பெண்ணைக் கடத்தி" என்று ஆரம்பிக்கிறார்.

அவர் எதற்கு முக்கியத்துவம் தந்தார் என்பது விளங்கவில்லை. ஏழுபேர் என்பதற்காகவா, கடத்தல் என்பதற்காகவா விளங்கவில்லை.

அதைப் பற்றி இவர் ஏன் கவலைப்படுகிறார் தெரியவில்லை. இதுவும் ஒரு சுவராசியமான செய்தி.

இந்தச் செய்திகள் பேச அவருக்குத் தேவைப் பட்டன. கஸ்டமர்களை இழுத்துப் பிடிக்க இது அவருக்குக் கிடைத்த பிளே ரிகார்டுகள். அவற்றை முடுக்கி விடுகிறார். கதைகள் அனுபவங்கள் ஒன்றன்பின் ஒன்று தொடர்கின்றன.

அவர் கை புதிய சானலைத் திருப்புகிறது. புதிய செய்தி பளிச்சிடுகிறது.

"இந்த வீடு இருக்கிறதே! இதில் இரவில் மந்திரி பேய் வந்து உலாவுகிறது" என்கிறார்.

மாஜி அமைச்சர் ஒருவர் அந்த வீட்டில் வாழ்ந்து இருக்கிறார். ஊழல் மன்னன் என்ற பட்டம் பெற்றவர். அவர் பெயர் பிரபலமாக இருந்தது. அவர் மீது வழக்குகள் நிறையப் பதிவு ஆகி இருந்தன.

அவர் வாழ்ந்து முடிந்த கதை; அதைப் பலர் சொல்லி இருக்கிறார்கள்.

அவர் இப்போது இல்லை. அவர் விட்டுச் சென்ற வீடு மற்றும் சொத்துகள் அவை மறையவில்லை.

அவற்றைச் சுற்றிச்சுற்றி அவர் பேயாக உலாவுகிறார் என்று அவன் சொல்லுகிறான்.

அவன் பார்த்தான் என்று சொல்லுகிறான்.

"அவர் தானா! நன்கு பார்த்தாயா?"

"ஏன் தெரியாது? அவர் படம் தினம் பத்திரிகையில் வந்ததே" என்று அடையாளத்தோடு கூறுகிறான்.

"செத்தாலும் இவர்கள் பேயாக உலாவுகிறார்கள். அவர்கள் ஆசை அவர்களை விடவில்லை" என்பது அவன் தெரிவித்த செய்தி.

'மர்ம தேசம்' இந்தப் படத்துக்கு இவன் 'கரு' தருவான் போல் இருந்தது இவன் தந்த விவரம்.

இனிமேல் பொறுக்க முடியாது; மூன்று கதைகளைக் கேட்டு ஆகிவிட்டது.

"மெக்கானிக் எப்போது வருவார்?"

"இதோ வந்துவிடுவார்; நான் இன்னும் ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அதையும் சொல்லி விடுகிறேன்" என்று அனுமதி கேட்டான்.

ஒரு சின்ன பையன் பக்கத்துக் கடையில் இருந்து டீ வாசனை உடைய ஒரு பருகலைக் கொண்டு வந்து தந் தான்; டிரைவருக்கும் கிடைத்தது.

டீ சாப்பிட்டுக் கொண்டே "இருங்கள் மெக்கானிக் வந்து விடுவார்" என்றான்.

அவன் சொல்கிற கதை; அது செவிச் செல்வம்; இது வாய்ச் செல்வம்; அதாவது வாய் வழியே பருகுவதால் இது வாய்ச் செல்வம்.

வாய்ச் செல்வமா செவிச் செல்வமா எது பெரிது?

'செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது வயிற் றுக்கும் ஈயப்படும்' என்ற வரிகளைப் படித்த நினைவு. இங்கு வயிற்றுக்கு ஈயப்பட்டது.

அந்த டீ குடித்ததற்காகாவது அவன் அடுத்த 'எபிசோட்' கேட்டுத்தான் ஆகவேண்டும். இப்பொழுது டி.வியில் இருநூற்று ஐம்பதுக்கு மேல் போகிறது; கதையை நீட்டிக் கொண்டே போகிறார்கள். புதிய நடிகர்கள் வர வாய்ப்புத் தடுக்கப்படுகிறது.

இந்த நடிகர்கள் இந்த சீரியலிலேயே நடித்து ஓய்வு ஊதியமும் பெற்று விடுவார்கள்.

கதைப் பாத்திரம் முக்கியமானவள்; அவள் தாய்மை அடைகிறாள்; அது காட்டியது இரண்டு வருடங்களுக்கு முன்பு; இது நூறாவது எபிசோட் கடந்து விட்டது. இரண்டு வருடம் கடந்து விட்டது. இன்னும் அவள் குழந்தை பெறவே இல்லை. காரணம் கதை வாரத்தில் அரைமணி நேரம்தான் காட்டப்படுகிறது. பிறகு மூன்று வருடம் படம் ஓடுகிறது. அதற்குப் பிறகுதான் அவள் பிரசவ வேதனை அடைகிறாள். என்ன செய்வது? டி.வி சீரியல் அது.

இவன் சொல்லுகிற அடுத்த கதை கேட்டுத்தான் ஆக வேண்டும். மெக்கானிக்கோ வந்தபாடில்லை; அங்கே கத்தும் குரல் ஓசை எதுவும் காதில் படுவதாக இல்லை. அவனுக்கு அடிபணிய வேண்டியதுதான்.

அவன் தன் சுயசரிதத்திற்கு வந்து சேர்ந்தான். ஒரு புதிர் எழுப்பினான். அது அவனைத் தேர்வு செய்த போலீசு அதிகாரி கேட்ட கேள்வி என்று அறிவித்தான்.

"நீ வேகமாகக் காரை ஓட்டிச் செல்கிறாய்; ஒரு கிழவி குறுக்கே மெதுவாக நடந்து வருகிறாள்; அப்பொழுது நீ என்ன செய்வாய்?"

அதற்கு இவன் சொன்ன பதில்

"பேசாமல் அவள் மீது ஏற்றி அவளைக் கொன்று விடுவேன்" என்று பதில் உரைத்தான்.

"ஏன் பிரேக் போட்டால்?"

"அப்பொழுதும் அவள் சாவது உறுதி.."

"திருப்பிச் சாய்த்து ஓட்டினால்"

"வண்டி பள்ளத்தில் விழும்; என் வண்டியில் உள்ள எட்டுபேர் என் திறமையை நம்பி ஏறியவர்கள். தினம் பேட்டா கூடுதலாகக் கொடுத்து என்னை போஷிக்கிறவர் கள். என் எஜமானர் அவர். குடும்பம் அவ்வளவு பேரையும் இந்த டி.விக்காரர்கள் வந்து மொய்த்துக் கொள்வார்கள்; இதுதான் நடந்திருக்கும்" என்று விளக் கினான்.

அந்த அதிகாரி அவனைப் பாராட்டியதாகப் பெரு மையோடு கூறினான்.

இன்னும் மெக்கானிக் வந்தபாடில்லை; சோதனை மேல் சோதனை என்பதுபோல் அவன் கதைகள் தொடர்ந் தன.

மெக்கானிக் எப்பொழுது வருவார் என்று கண் வைக்க வேண்டி இருந்தது.

"கொஞ்சம் பொறுங்கள். அவர் வந்தால் ஒரு ஓட்டு ஓட்டிப் பார்த்து உடனே சரி செய்வார்" என்றான்.

அந்த வண்டி 'breakdown' என்பது அவனுக்கு அறி விக்கப் பட்டது.

பிரேக் வேலை செய்யவில்லை. அது பழுது பார்க்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

"எல்லாம் சரிசெய்து விடுவார். ஒரு ரவுண்டு எடுத்துப் போனால் போதும். அவர் உடனே கை வைத்துச் சரி செய்து விடுவார்" என்று பதில் கூறினான்.

அவன் மூளை Fail ஆகிவிட்டது என்று எடுத்துக் காட்டினார் இவர்.

"என்ன சார் அந்த போலீசு அதிகாரியே என் புத்திசாலித் தனத்தைப் பாராட்டினார்".

''நான் சொல்வதில் எந்தத் தப்பும் இருக்காது'' என்று அடித்துக் கூறினான்.

''இந்த வண்டி, உங்க மெக்கானிக் இருவரும் breakdown ஆகிவிடுவார்கள்; பிரேக் பிடிக்கவில்லை என்று தானே இங்கே வந்திருக்கிறோம்''.

''ஆமாம் சார், அதைக் கவனிக்கவில்லை'' என்று அவன் ஒப்புக் கொண்டான்.

'அடி சறுக்கும்' என்று அழகு தமிழில் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. எதுக்குமே ஒரு 'பிரேக் டவுன்' ஏற்படுவது இயல்பு. இதைத்தான் 'அடி சறுக்கும்' என்று அறிவித்தார்கள் நம் பெரியவர்கள் என்றார் இவர்.

# 15

# தகுதிகள்

நீங்கள் கார் வைத்திருக்கிறீர்களா? பேசாமல் தள்ளி விடுங்கள்; நிம்மதியாக இருக்கலாம்.

நான் ஒன்று சொல்லுகிறேன். உங்களுக்கு யாராவது ஆகாதவர் இருந்தால் அவருக்கு அதை இனாமாகத் தந்து விடுங்கள். அவர் அதை வைத்துக் கொண்டு அவதிப்படட்டும்; விட்டது தொல்லை.

இனமாகக் கொடுத்தால் சந்தேகப்படும் காலம் இது. காரில் 'பாம்' வைப்பது இன்று செய்திகள் ஆகிவிட்டன. யாரும் வாங்க மாட்டார்கள்.

இது தெரியுமா ஒரு ஆள் தன் கைப் பெட்டியை பஸ் நிலையத்தில் மறந்து பஸ் ஏறிவிட்டார். ஊர் போய்ச் சேர்ந்ததும் நினைவு வந்தது. அடுத்த பஸ் பிடித்துப் பழைய இடத்துக்கே வந்து சேர்ந்தார்.

வைத்த இடத்திலேயே அது அசங்காமல் இருந்தது; வியப்புதான்.

வேறு ஒன்றும் இல்லை; அதில் 'பாம்' இருக்கும் என்ற பயம்தான். அந்தப் பீதி பலரை யோக்கியர்களாக வைத்திருக்கிறது.

விமான நிலையம் முன்பு எல்லாம் உள் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டால் விசாலமான இடம்; ஏ.சி.; பக்கத்தில் காஃபி, டிபன் எதுவும் சாப்பிடலாம். அங் கிருந்து 'டாட்டா' சொல்லலாம். சவுகரியமாக இருந்தது.

இன்று வெளியில் நிற்க வைத்து விடுகிறார்கள். வேதனைதான்; கையசைத்து அனுப்பிவிட்டு நினைவு களில் மட்டும் நின்று வேதனைப் பட வேண்டியதுதான்; அவர்கள் திருமுகத்தைப் பார்க்க வாய்ப்பு மறுக்கப் படு கிறது. கேட்டால் ''பாம்'' பீதி என்கிறார்கள்.

ரயில் பயணம் அதுவும் அப்படித்தான். பெட்டி படுக்கை எல்லாம் தொட்டுப் பார்க்கிறார்கள்; சோதனை கூடத்துக்குப் போனால் அங்கேயும் சந்தேகம்தான்.

நீ வண்டியை இனாமாகக் கொடுத்தால் அவன் வாங்க மாட்டான் பாதி விலைக்குத் தள்ளிவிடு; அவன் வாங்கிக் கொள்ளுவான். அது விற்பனை உத்தி; பிறகு அவன் அதைத் தள்ளிக் கொண்டு இருப்பான். உன் விவகாரத்துக்கு வரவே மாட்டான் நேரம் இருக்காது. பணமும் கரைந்துவிடும்.

காரைவிட்டுத் தொலைத்துவிடு நிம்மதியாக இருக்க லாம். சரிவிடமுடியவில்லை. செலவைப்பற்றிக் கவலை இல்லை; அது சில சமயம் அவசியம் ஆகிறது.

“நீ ஒட்டக் கற்றுக் கொள்ள முடியாது; கார் ஒட்டி தேவைதான். என்ன செய்யலாம்? ”

வீட்டுக்கு சமையல் காரி தேவைப்பட்ட்து. அவன் என்ன செய்தான்?

நாள் ஏட்டில் விளம்பரம் தரப்பட்டது ‘விதவை ஒருத்தி வீட்டோடு இருக்கத்தேவை’ என்று கொடுத்து வைத்தான்.

விசாரணைக்கு இவன் வீட்டை நோக்கி வந்து சென்றவர்கள் பலர்; உண்மை விதவைகள் நற்சான்றோடு வந்து சேர்ந்தார்கள்.

‘இவள் உண்மையில் விதவை’ என்ற நற்சான்றோடு வந்தவர்கள் சிலர்.

தாலியோடு ஒருத்தி வந்து சேர்ந்தாள்; இதை இவன் எதிர்பார்க்கவில்லை.

அவளோடு பேச்சுத் தரவேண்டியிருந்தது.

வீட்டில் அவன் துணைவியார் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வரும்வரை துணை சபா நாயகர் பதவியில் அமர வேண்டி நேர்ந்தது.

“நாங்கள் விதவைக்குத்தானே விளம்பரம் தந்தோம்?”

“அப்படி ஆக முடியவில்லை; சூழ்நிலை அப்படி” என்று தத்துவம் பேசுகிறாள்.

“நீ என்ன சொல்றே”

“நான் விதவை மாதிரிதான். என் புருஷன் அவர் ஒன்றுக்கும் உதவாதவர். ஒருத்திக்கு அவர் தேவைப் பட்டார். இழுத்து வைத்துக் கொண்டாள். அதனால் அவர் என்னோடு இல்லை”

அவள் சொல்வது சுவாரசியமாக இருந்தது.

"மற்று யாரும்?"

"ஒரு பெண்; அவளும் எனக்குத் தொந்தரவு தரவே இல்லை. ஒருத்தன் கிடைச்சான். அவன் கூப்பிட்டான். கூடவே போயிட்டாள்"

எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் சுபாவம் வியப்பைத் தந்தது.

"உன் கை சுத்தமாக இருக்குமா?"

"உள்ளே வரும்போது சுத்தமாகத்தான் இருக்கும். போகும்போது சொல்ல முடியாது. சில்லறை ஏதாவது நீங்கள் மறந்து வைத்துவிட்டால் எடுக்காமல் இருக்க முடியாது. அது என் பழக்கம்" என்று நாப் பழக்கத்தில் கூறுகிறாள்.

இவளை வேலைக்கு வைத்துக் கொள்வதா இல்லையா. இவனால் முடிவு செய்ய இயலவில்லை. இடைக் காலத் தீர்ப்பாக அவளை ஏற்பது இல்லை என்று முடிவு எடுக்கிறான். இறுதித் தீர்ப்பு உச்ச நீதி மன்றத்துக்கு என அவன் விட்டு வைத்தான்.

அடுத்தது 'கார் ஒட்டி' என்று ஒரு புது வேட்டி காத்திருக்கிறது.

"உனக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?"

"அந்த ஆசை இப்பொழுது இல்லை"

"அப்படி என்றால்?"

"இந்த உத்தியோகம் அதை நம்பிநான் கலியாணம் செய்து கொள்ள முடியாது."

"இது தற்காலிகமானதா?"

"அப்படித்தான்; யாரும் எந்த டிரைவரையும் நிரந்தரமாக வைத்துக் கொள்ள மாட்டார்கள்; மாற்றிக்

கொண்டே இருப்பார்கள். அடிக்கடி 'டைவர்ஸ்' அதுதான் இந்தத் தொழிலின் அடிப்படை'' என்று கூறுகிறான்.

அவன் தெரிந்து வைத்திருப்பது வியப்பாகவே இருந்தது.

''எப்படிச் சொல்லுகிறாய்?''

''நீங்கள் கொடுக்கிற சம்பளம் போதாது; இதைவிட அதிகம் கிடைத்தால் விட்டு விடுவோம். இதுதான் எங்கள் பழக்கம். சம்பளம் குறைவாக ஆள் கிடைத்தால் எங் களுக்கு 'டாட்டா' சொல்வீர்கள்'' அவன் உண்மையைக் கூறுகிறான் என்பது தெரிந்தது.

''உனக்கு எவ்வளவு தேவை?''

''அதிகம் கேட்டால் வேறு ஆள் தேடப் போகிறீர் கள்; நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள். இப்போதைக்கு அது போதும்''.

''என்னங்க அவன் சொல்றான்?''

உள்ளிருந்து எழும்பிய குரல் அது.

''கொடுத்தது வாங்கி கொள்கிறேன்'' என்கிறான்.

''அதுமாதிரி ஆள்தான் நமக்குத் தேவை'' என்று உள் மனசு பேசியது.

தனியார் தொழில் சட்டங்கள் கொடுமையானவை. வேறு தொழில் கிடைக்கவில்லை; அதனால்தான் இவர்கள் தனியாரிடம் அடைக்கலம் புகவேண்டி இருக்கின்றது.

''கார் ஓட்டி இருக்கிறாயா?'' அடுத்த கேள்வி.

''லைசென்சு தந்து இருக்கிறார்கள்''

''பழக்கம்?''

''அதற்கு வாய்ப்பு இல்லை. இதுவரை பலரும் கேட்ட கேள்விதான். இதற்கு முன் எங்கும் வேலை செய்த

முன் அனுபவம் இல்லை; அதனால்தான் பழக வாய்ப்பு இல்லை''

''உன்னை நம்பி எப்படி வண்டியைத் தருவது?''

''என்னை நம்பி லைசென்சு தந்திருக்கிறார்கள். நான் சரியாக விடுகிறேன் என்பதால் அல்ல; விடுவேன் என்ற நம்பிக்கைதான்''

அவன் விடை விசித்திரமாக இருந்தது.

''எப்படி உன் சமையல்காரி?''

''அப்படித்தான்; நன்றாக வேலை செய்கிறாள்''

''கை சுத்தமாக இருக்காதே!''

''ஏதாவது சுருட்டிக் கொண்டு இருப்பாளே'' தெரிந்து வைத்துப் பக்கத்துவீட்டு நண்பி வினவுகிறாள்.

''பெரிசு எதுவும் எடுக்க மாட்டாள்; சில்லறை காசுகள் மறைந்துவிடும்; பரவாயில்லை. மோசம் இல்லை.''

''திருடுகிறாள்; எப்படி அவளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' வியப்பு வினா.

''நாங்கள் குறைவாகச் சம்பளம் தருகிறோம். மனம் வந்து கொடுப்பது இல்லை. அவள் நிறைவு செய்து கொள்கிறாள். அவ்வளவுதான்''

''எப்படி உங்கள் கார் டிரைவர்?'' நகைப்பு வினா.

''ஆரம்பத்தில் இரண்டு மோதல்கள்; கொஞ்சம் செலவு ஆகியது. டிங்கரிங்க் செய்தேன். சில சமயம் தவறுகள் நடந்து விடுகின்றன. இப்பொழுது பரவாயில்லை.''

''எப்படி அவனை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''அப்படித்தான்; ஆரம்பம்; பிறகு சரியாகப் போய் விடும்'' என்று அமைதியாகப் பதில் தருகிறார்.

# 16

# ஈடு ஆகாது

மழை; அது பெய்ததன் வடு; வீட்டு முன் நீர்மடு; அதன் கீழ் சாணத்தின் குழம்பு; வாழைப்பழம் போல் அது வழுக்கி விடும் என்று எதிர்பார்க்கவில்லை.

அதற்கு முன் அவனுக்கு ஒரு அழைப்புக் கிடைத் தது; கார் ஓசி லிஃப்டு; அதை அவன் ஏற்க மறுத்தான். அதற்குக் காரணம் அவன் பணக்காரனை வெறுத்தான்.

ஏன் அந்தக் கார் லிஃப்டு கிடைத்தது; அதனை கிஃப்டு ஆகக் கருதி இருக்கலாம்; தவறிவிட்டான்.

''சுக வாழ்வினருடன் சகவாசம் கூடாது; அவர்களை மதிப்பது ஆகிவிடும்'' என்ற கருத்து; அதனால் ஏதோ அதை ஏற்கத் தயங்கினான்.

இந்தப் புத்தி அவனுக்கு எப்படி உண்டாகியது? அவன் காந்தீயவாதி. அதோடு கூடுதலாகப் பொதுவுடமை வாதம்.

அன்று அவன் அந்தக் காரில் ஏறி இருந்தால் இந்த வழுக்கல் நேர்ந்திருக்காது.

'வழுக்கினால் என்ன? கால் ஏன் முறியவேண்டும்?' அவனால் நம்பவே முடியவில்லை. அது முறிவு அல்ல என்ற திமிர் அதுவும் உடன் சேர்ந்தது.

கால் எலும்பில் அமைந்தது; அதற்கு வலிமை நரம்பும் சதையும் தான். அது மரக்கட்டை. அவை எலும்பைக் காக்கத் தவறிவிட்டன.

அன்று கூவி அழைக்கும் ஆற்றல் இழந்தான்; 'கால் முடமாகியது' என்று தெரிவித்தார்கள்.

இந்த உலகம் அவனுக்கு இருட்டு ஆகியது.

நல்லதோர் வீணை அது நலங்கெடப் புழுதியில் எறியப் பட்டது.

என்ன செய்வது? அன்று அவன் பேனா பிடித்தான். அது அவனுக்கு ஊன்றுகோல் ஆகியது. இன்னும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறான். கால் அறுவை சிகிச்சை செய்தவன் அவன் செய்த தவறு. கோணல் அவனால் நடக்க முடியவில்லை.

நடிகை ஒருத்தி பாவம் அப்படித்தான் தவறான சிகிச்சை. அதனால் லாப நஷ்ட கணக்குப் போட்டாள்.

தன் கால் அசைந்தால் அவற்றை ஈட்டி இருப்பாள்; கற்ற கலை காற்றோடு கலந்து விட்டது. அவள் எதிர்காலம் மூடுபனி ஆகிவிட்டது. வழக்குத் தொடுத்தாள். "மருத்து வர் செய்த சிகிச்சை மகத்துவம் அற்றது. பிழைபடச் செய்ததால் இழைக்கப்பட்டது கொடுமை" என்று அவள் வழக்குத் தொடுத்தாள்.

அவள் நிழற்படத்தைத் தொலைக்காட்சியில் காட்டி னார்கள். மருத்துவம் தோற்று விடுகிறது; அவர்கள் கைத் திறன் சில சமயம் எழுத்தாளன் எழுதும் சில கதைகள் போல் தோல்வி அடைகின்றன.

இவன் காலும் இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டது. நடை கற்காத குழந்தை தட்டுத் தடுமாறி நடக்கிறது. பெரியோர் வாய் மொழிகள் போல் தண்டு அவனுக்கு ஊன்று கோல் ஆகியது. நீளமான உலகத்தை விட்டு அவன் சுருக்கமாக

அடைந்த தாள்கள் அவனைப் பிரித்து விட்டன. உலகம் அவனுக்கு அப்பாற்பட்டது ஆகிறது. அவனும் அந்த நடிகையின் அந்தஸ்தைப் பெறுகிறான்.

பேருந்துகள் ஏறி அமர அவன் மற்றவர்கள் கைத்தாங்கல்களை எதிர்பார்த்தான். ‘பெரியவரே பார்த்து’ என்று சிறுவர்கள் அக்கரை காட்டினார்கள். அவன் வாழக்கை முடமாகவில்லை; கால் மட்டும் தான் முடமாகியது.

அன்று அந்த ஓசி காரில் ஏறி இருக்கலாம். ‘ஏசி’யும் பொறுத்தப்பட்டிருந்தது. அவன் சுக வாழ்க்கை எதிர்ப்பு அவனைத் தண்டித்து விட்டது.

இப்பொழுது எண்ணிப் பார்க்கிறான். “வசதிக்காரன் இந்தச் சமுதாயத்தின் படைப்பு; இதில் அவன் கை கொடுத்து உன்னைத் தூக்கி விடுகிறான். நீ ஏன் மறுக் கிறாய்? நீ அவனை அவன் தரும் வசதியை ஏற்க மறுத்தாய்; அதன் விளைவு இது; தண்டனை” என்று எண்ணத் தொடங்கினான்.

ஊனம் உண்டாக்கிய அதே மருத்துவர் இவனைச் சந்திக்கிறார். ஏழு ஆண்டுகள் இடைவெளி. அன்று இவன் எதிர்க்கவில்லை; அவர் செய்த தவறை வாய்விட்டுக் கூட எடுத்துக் கூறவில்லை. மருத்துவன் பால் மீளாத மதிப்பு அவனை விட்டு அகலவில்லை.

தீராத பாசம் அவர்பால் காட்டினான். அவர் கெடுக்க வேண்டும் என்று தெரிந்து ஒடுக்கவில்லை. பிழை அதைப் பொறுப்பது பெரியவர்கள் கடமை என்ற உணர்வு தலைத்து ஓங்கியது.

“நடிகை வழக்குத் தொடுத்தார்களே என்ன ஆயிற்று?”

அவரைச் சந்திக்கும்போது தொடுத்த வினா அது.

அவர் சிரித்துக் கொண்டே கூறுகிறார்.

"எதிலும் பணம் எதிர்பார்க்கும் உலகம் இது; வழக்கினால் அவர்கள் வாழ்வு வளம்படுத்திக் கொள்ள முடியும் வாய்ப்பு அது; அதனால் தவறில்லை?"

"முடிவு"

"அதை நீங்கள் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள்" என்றார்.

"நீர் ஏன் வழக்குத் தொடுக்கவில்லை" என்று மருத்துவர் நெகிழ்வோடு கூறினார்.

அவரிடம் என்ன பதில் கூறுவது?

"தொடுத்தால் நீங்கள் எனக்கு இழப்பு ஈடு செய்வீர்களா?"

"அதற்குத்தான் உங்களைச் சந்திக்கிறேன். உங்களுக்கு நான் தவறு செய்துவிட்டேன். அதனால் இழப்புக்கு ஈடு கடமைப்பட்டிருக்கிறேன். வழக்குத் தொடுத்தவர்க்கு ஈடு செய்தேன். தொடுக்காத உமக்கும் உரிய தொகை தருகிறேன். அது என் கடமை" என்கிறார். அவர் கையெழுத்திட்டுத் தொகை எண் எழுதிக் காசோலையை நீட்டினார்.

"தவறு செய்தது நான்; அதற்கு உரிய தண்டனை இது; தவறுதல் இயல்பு. இதற்கு யாரும் பொறுப்பு இல்லை; பிழை நம்மை மீறி நடப்பது; இதற்கு உங்களைப் பொறுப்பாக்க விரும்பவில்லை; மன்னிக்கவும்" என்று பதில் தருகிறான்.

அந்தக் காசோலை மருத்துவர் தர முற்பட்டார்.

அதனை இவன் வாங்க மறுத்துவிட்டான்.

இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள். தம் தொழிலுக்கு மதிப்பு உள்ளது என்ற மனநிறைவோடு அகல்கிறார்.

அவர் ஏன் அந்தக் காசோலையை அங்கு விட்டுச் சென்றார்? அது காலாவதி ஆகி இவன் நிழற்படத் தொகுப்பில் குளிர் பெற்று நிற்கிறது. அது அவனுக்கு ஒரு நினைவுப் பரிசாக அமைகிறது. மாறாத மதிப்பு உயர்கிறது; அவரைத் தொடர்ந்து மதிக்கிறான். அதற்கு அது ஒரு அன்பளிப்பு என்று கோத்து வைக்கிறான்.

இழப்புக்கு இது ஈடாகாது; அவன் இன்றும் முட மாகத் தான் நடக்கிறான்.

# 17

# மாற்றம்

அவனுக்கு ஒரு ஆசை; அவளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போக வேண்டும் என்று.

இளங்காதலர்கள் அங்காங்கே இணைவதற்கு வழி யில்லாமல் பிணைந்து பேசிக் கொண்டிருப்பதைப் பார்த் திருக்கிறான்.

அவர்கள் என்னதான் பேசுவார்கள் பேசுகிறார்கள்; பேசுவதற்கு என்ன இருக்கிறது?

யாரையாவது அவர்கள் யோக்கியர்கள் என்று கூற இடம் தரவில்லை. ஒருசிலர் புதுசுகள்; கிசுகிசுக்கள்; வீட்டை விட்டு வெளியே சென்றால்தான் சுகம். ஸ்பரிச உணர்வு; அவரவர்கள் வேட்கையை விபரீதமாகச் சொல்ல முடியாத சொற்கள் கரை புரண்டு அலை மோது கின்றன. செயல் மறந்து; இவர்தன் இளமைக் காலத்தை எண்ணிப் பார்க்கிறார்.

காதல் செய்யவே வாய்ப்பு இல்லை. முதல் சந்திப்புக் கூட ஒரு சடங்குதான் இன்பம் காண அவன் தள்ளப்படுகிறான். அதற்கப்புறம் வேகம் தலை கொள் கிறது. தாகம் தீர்கிறது.

இனிதாகப் பேசி மெல்லச் சுவைக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது என்று கூற முடியாது.

பசும்புல்லை மேய்கிறது கிழட்டுப் பசு; பசும் புல்லை வாயில் தடவிக் கடிக்கிறது. இதுதான் காமம் என்று எங்கோ படித்த நினைவு.

சோறு உண்பது அதில் சுகம் இருக்கிறது. வாயில் ஒன்றும் பாதியுமாகப் போட்டுத் தின்றுவிட்டு நீரை மொட மொட என்று குடிக்கிறான். அவன் தாகம் அடங்குகிறது. பசி நீங்குகிறது. ஆனால் சுவை காண்பதில்லை. மெல் வதில்தான் சுவையே உள்ளது; அதை நினைத்துப் பார்க்கிறான்.

வட்டமான மேஜை; திட்டமான கையிழந்த நாற் காலிகள். விரித்த வேட்டிகள்; பிரித்த தட்டுகள்; சிரித்த முகங்கள்; கலகலப்பு; கைகளில் எடுப்பது இல்லை; கரண்டி மெல்ல எடுத்துச் சுவைக்கிறார்கள். பேசிக் கொண்டே உண்கிறார்கள். இதில் சுகம் இருக்கிறது; சுவை கூடுகிறது.

அந்தச் சுகத்தை அவன் புதிதாக நாடுகிறான்.

"வா! புறப்படு கடற்கரைக்கு" என்கிறான்.

அவளுக்கு விளங்கவில்லை.

"நம்மைத் தவறாக நினைப்பார்கள்; காதலிக்க வந்தோம்" என்று கருதுவார்கள்.

"அதற்குத்தான் போகிறோம். உன் ஒத்துழைப்புத் தேவை" என்கிறான்.

"காதலிக்கக் கடற்கரைக்குத்தான் போகணுமா?"

“அங்குதான் போகிறார்கள்; காற்று வாங்கிக் கொண்டு கதைகள் பேசலாம். வீட்டுச் சண்டைகளை விவாதித்து ஆற்றிக் கொள்ளலாம்.”

“வேர்க்கடலை விற்பார்கள் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்” என்று அடுக்கிக் கூறுகிறான்.

“இதற்காகவா அங்குப் போகணும்?”

“நான் வறுத்துத் தருகிறேன்”

“ஐஸ்கிரீம்”

“அங்கு மட்டமானதாகத்தான் இருக்கும். இங்கேயே வரவழைக்கலாம்”

“அப்படியே பீச்சுக்குப் போயிட்டு, டிரைவ் இன்; பிறகு ஒரு படம்”

“இந்த மூணும் எப்படி ஒரே நாளில் முடியும்?”

“அப்படித்தான் போகணும். அதிலே ஒரு ‘திரில்’ இருக்கு; புறப்படு”

“பிள்ளைகள்?”

“இருவர்; அவனுக்கு அவள்; அவளுக்கு அவன்; இரண்டு பேரும் நிம்மதியாகச் சண்டை போட்டுக் கொண்டு இருப்பார்கள்; கவலைப்படாமல் இரு”

“காதல் பண்ணணும்னு ஆசை; அதற்கு இடமே தரமாட்டியா சே! நீ”

“ஆமாம்; நான் வரலை; இந்த வயசிலே உங்களுக்குக் காதல் கேட்குதா? ”

அவள் கொடுத்த சூடு அவனுக்கு ஆறவே இல்லை.

ஏன் காதல் செய்யக் கூடாது? என்ற வினா அவனை அரித்துக் கொண்டே இருந்தது. அவனால் வேறு எதையும் செய்ய முடியவில்லை.

“ஏன்டா எங்கேயும் வெளியே போகலையா?”

“போகணும்தான் நினைக்கிறேன்; எங்கே போற துணுதான் தெரியலை”

“அப்படியே! கடற்கரைக்கு சினிமாவுக்கு” என்று வந்தவன் கூறுகிறான்.

அவன் பால்ய நண்பன்; அவன் கலியாணம் பண்ணிக் கொள்ளவே இல்லை.

அந்தச் சுகத்தை இப்படிப் பேசிப் பேசியே காண்பவன் போல நடந்து கொண்டான். அதைத் தவிர இவன் வேறு அதிகம் பேசுவது இல்லை; அது சிலர் பழக்கம்.

“ஜாலியா வீட்டிலே அவர்களை அழைச்சிட்டு எங்காவது போய் வரலாமே?” என்று மீண்டும் கூறு கிறான்.

“எனக்குப் பழக்கம் இல்லை; இது எல்லாம் ஆரம் பத்திலேயே இருக்கணும்; “இப்ப முடியவில்லை”

“அவர் என்ன சொல்றாரு?”

“பீச்சுக்குப் போ உன்னை அழைச்சிட்டுப் போ’ என்கிறான்.

“நீங்க என்ன சொன்னீங்க?”

“எனக்குப் பழக்கமில்லை” என்று சொல்லி விட்டேன்

“விடுங்க” நாம் போறோம்; போகத்தான் போகி றோம்.”

“குழந்தைகளையும் அழைச்சிட்டுப் போறோம்; முறுக்கு சீடை இவற்றோடு” என்று முளைத்தாள்; உடன் தண்ணீரும் பாட்டில்களில் எடுத்து வைத்தாள்.

# 18

# நிம்மதி அவள் 'சாய்ஸ்'

''ஹலோ எப்படி இருக்கீங்க?''

''தெரியாது; கண்ணாடி பார்த்துத்தான் சொல்ல முடியும்''

''அதெல்லாம் இல்லை. உடம்பு தொழில் பசங்க?''

''அதுவா; உடம்பு இருக்கிறது; தொழில் நடக்கிறது; பசங்க பறக்கிறாங்க'' என்று பதில் சொல்கிறார்.

வந்த நண்பர் தன் வரலாற்று விவரங்களை இந்தப் பீடிகையில் தொடங்கித் தொடர்கிறார்.

''கேக்கறாங்க; யோசிச்சிகிட்டு இருக்கேன்; என்ன பதில் சொல்றதுணு தெரியலை.''

''பெண்ணைப் பற்றித்தானே; அது அது விதிப்படி தான் நடக்கும். நம்ம கையிலே எதுவும் இல்லை'' என்று இவர் பதில் சொல்கிறார்.

இவர் கையில் ஒரு பேனா இருந்தது. அவர் பொய் சொல்லி இருக்கிறார். அந்தப் பேனாதான் பதில் சொல்ல வேண்டும். என்ன சொல்லுவது?

''பையன் படிக்கலை; சுமாரப் படிச்சிருக்கான். வீடு கட்டித் தர்ரான். கோடிக் கணக்கில் புரள்றான். ஆனால்!''

"ஆனால் என்ன ஆனால்; போனால் போவுது சொல்லுங்க"

"இரண்டாந்தாரம்"

"அதனால் என்ன அனுபவப்பட்டவன். நல்லா வச்சிருப்பான்"

"முதல் தாரம் அவள் போனாள் சோரம்; அதனால் பிறந்தது வீரம். விவாகரத்து; அவள் இவனை வீட்டுப் போயிட்டாள்"

"லட்சாதிபதி என்கிறே! அவளுக்கு வேறு லட்சியம் இருந்திருக்கும்; காதல் லட்சியம்; பழக்க தோஷம்; பழகியவனையே தேடிக் கொண்டாள். இவனோடு ஒட்ட முடியவில்லை. அதனால் வெட்டித் தள்ளி விட்டானா?"

"கோர்ட்டிலே விவகாரம் நடந்தது; 'போடா போ' என்று அவள் போயிட்டாள்"

"சரி விட்டது சனியன்".

"அவளுக்கு ஒரு பெண் குழந்தை"

"அடையாளச் சின்னம்"

"அதுக்கும் சேர்த்து செட்டில்மென்டு செய்து அனுப்பி விட்டான். வில்லங்கம் எதுவும் இல்லாத சொத்து; அவன் பரவாயில்லை"

"இன்னொருவன்; படிச்சிருக்கான்; பணிமனையில் நிரந்தமான தொழில்; பையனும் சுமாரா இருக்கான்.

"பின் என்ன?"

"முப்பது சவரன் கேக்கிறான்; முப்பதாயிரம் எண்ணிக் கொடுக்கச் சொல்றான்; சத்திரத்திலே கலியாணம்; சாஸ்திர முறைப்படி எல்லாம் நடக்கணும்; சொத்து எதிர் பார்க்கிறான்"

"சரி இதுவும் நல்லாத்தான் இருக்கு; கறைபடியாத சரக்கு; சுத்தமான நெய் மணக்கும்; எந்தக் குறையும் சொல்றதுக்கு இல்லை"

"அது சரி இரண்டிலே எது நல்லது. அதுதான் யோசிக்கிறேன்"

"உன் பெண் என்ன சொல்றா?"

"நீ என்னம்மா சொல்றே?"

"உங்க இஷ்டம் எந்தக் கிணற்றிலே தள்ளினாலும் விழத் தயார்"

"என்னம்மா அப்படிச் சொல்றே"

"நீந்தத் தெரியும்; கரை ஏறுவேன்; யாரா இருந்தாலும் எல்லாம் ஒண்ணுதான்; எனக்கு வித்தியாசம் தெரியலை"

அவளுக்குக் கலியாணத்தில் ஆர்வம் இருந்தது. அதனால் அவள் பதில் இப்படி அமைந்தது.

"பெண்ணுக்கு எந்த அபிப்பிராயம் இல்லே; எது எப்படி நடக்குமோ அது அப்படித்தான் நடக்கும்; நம்ம கையிலே ஒண்ணுமில்லை" என்று சொல்லுகிறாள்.

இந்த பதிலை எங்கோ வெளிப்படுத்தியது போல் இருந்தது; தானே இதற்கு முன் கூறியது நினைவுக்கு வந்தது.

இவர் போன் இதைப் பதிவு செய்கிறது. தீர்ப்புக் கூறும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கிறார்.

தொலைக்காட்சி நாடகம் நினைவுதான் வருகிறது.

துருதுருப்பான பெண்; அவளை அவன் மணக்க விரும்புகிறான். வசதிகள அழைக்கின்றன. அதை மறுக்கிறாள்.

மாமன் மகன் அவனையே நேசிக்கிறாள். அவன் வசதி அற்றவன். சூழ்ச்சிகள் இவர்களைப் பிரிக்கிறது. நேசித்த உறவினன் அவளை மணக்க முடியவில்லை. இருவரும் இணைய முடியவில்லை.

மறுபடியும் அந்த முதலாளி இவளை இழுக்க முயல்கிறான். பழக்க அவனைப் பேசிவிட்டு ராஜினாமா செய்கிறாள். அடுத்து எப்படி முடியும்? தெரியவில்லை. பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்.

"என் பெண் முடிவு செய்து விட்டாள்" என்று சந்தோஷமாக நண்பர் வந்து சந்திக்கிறார்.

"லட்சியப் பெண்; முதல் தாரமாகத்தான் இருக்க விரும்புவாள். நிச்சயம் மற்றவனை நிராகரித்திருப்பாள்" என்று இவர் கூறுகிறார்.

"இல்லை! அவள் செல்வ மகன் கோடீஸ்வரனை யே தேர்வு செய்து விட்டாள்."

"காரணம்?"

'இளைஞன் என்னை விரும்பவில்லை. என்னிடம் சொத்து, வரதட்சணை இதைத்தான் விரும்புகிறான்; இவர் செல்வந்தர் என்னை விரும்புகிறார்" இது அவள் சொன்ன பதில்.

இரண்டுமே ஓரளவு தன்னை விற்றுக் கொள்வது தான். யார் அதிக விலை தருகிறார்கள்? வசதிமிக்கவனுக்கு வாழ்க்கைப்படுவதே புத்திசாலித்தனம் என்று அவள் தெரிவிக்கிறாள்.

எழுத்தாளர் இவருக்கு அதிர்ச்சி தருகிறது. எங்கோ படித்தது நினைவுக்கு வருகிறது.

மண வாழ்க்கை என்பது 'அது' என்று யாரோ அறிஞர் கூறியது நினைவுக்கு வருகிறது.

அதை வாய்விட்டுக் கூற அவர் நா இடம் தர வில்லை. அதை இவள் நாகரிகமாகக் கூறியிருக்கிறாள் என்பதை உணர முடிந்தது.

“நிம்மதி அவள் சாய்ஸ்” அதற்கு அவள் தேடிக் கொண்டது பெருநிதி என அறிய முடிந்தது.

# 19

# சாப்பாடு என்ன செய்தது

இலையில் வைத்தது அது அப்படியே இருக் கிறது; அவன் உண்ணாவிரதம் மேற்கொள்கிறான்.

“உன் கைச் சோறு இனித் தேவை இல்லை”

“கரண்டியில்தான் போட்டிருக்கிறேன்; சாப்பிடுங்க.”

“உன் கையால் சமைத்தது தேவை இல்லை.”

“சமையல்காரிதான் சமைத்து விட்டுச் சென்றிருக் கிறாள்”

“வேண்டாம் என்றால் வேண்டாம்; அவ்வளவு தான்.”

அன்று டப்பாவில் அடைபடும் எலுமிச்சம் சோறு தப்பித்துக் கொண்டது; சோற்றுக்கு விடுதலை கிடைத்தது.

அவன் அவளிடம் எதுக்கு இந்த வம்பை வளர்த்தான்?

அவனுக்கே அதுக்கு விளக்கம் பெறவில்லை.

இதுபோல் நாடகம் முதல்முறை அல்ல; அவ்வப் போது மறு ஒலிபரப்பாகத்தான் இருந்து வருகிறது.

அவன் சம்பாதிப்பதை அவன் எண்ணிப் பார்த்தது இல்லை; அவனுக்கு எண்ணத் தெரியாது என்பது அல்ல; எப்படியும் அவள் எண்ணித்தான் எடுப்பாள்; இரட்டிப்பு ஏன்? அதனால்தான் அவன் எண்ணுவது இல்லை.

''ஏன்பா எண்ணிப்பாரு அதுதான் நல்லது'' என்பார் பணம் பட்டுவாடா செய்யும் காசாளர்.

''தேவை இல்லை. அவள் எண்ணிக் கொள்வாள்'' என்பான்.

''உனக்கு என்று எதுவும் எடுத்துக் கொள்ள மாட்டாயா?''

அன்று எப்படியோ ஒரு நோட்டுக் குறைந்து விட்டது. அதற்குக் காரணம் கேட்கப்பட்டது. விசாரணைக் கூண்டில் நிறுத்தப்பட்டான்.

''யாருக்குத் தந்தீர்?''

''அதைச் சொல்ல விருப்பம் இல்லை''

''எனக்குத் தெரியாமல் எப்படி நீர் தரலாம்?''

''அது எப்படித் தரலாம்? யோசித்துத்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது''.

அவளுக்காக அவன் ஒரு பொய்யைச் சொல்ல வேண்டி இருந்தது.

எந்த மாதிரி பொய் சொல்லலாம். பாவம்! ''என்கூட வேலை செய்யற ஆள் அடுத்த மாசம் தர்ரேன்னு கேட்டார்; கொடுக்க வேண்டி வந்தது'' சொல்லிப் பார்த்தான். அடுத்த மாதம் என்ன பதில் சொல்வது? அந்தக் கற்பனை அவனை விட்டு அகல்கிறது.

பொய் சொல்லிப் பழகவில்லை; கதைகள் படித்து இருந்தால் அவனால் பொய் சொல்லி இருக்க முடியும். தொடர்கதை தொடர்ந்து பார்த்திருந்தால் அவனால் ஒன்றனைக் கற்பிக்க முடியும்.

மூன்று பிள்ளைகள் பெற்றவர். திடீர் என்று அவள் கணவன் கட்டிட வேலை செய்யுமிடத்திலிருந்து தவறிவிடு கிறார். குடை சாய்கிறது. என்ன செய்கிறாள்? அந்த மூன்று பிள்ளைகளும் யாரோ தத்து எடுக்கிறார்கள். மூன்று பேரும் மகா உன்னதநிலை அடைகிறார்கள். ஒருவன் பிரபல நடிகன்; மற்றொருத்தி பாடகி; இன்னொருத்தி புகழ்மிக்க மருத்துவர்; ஆகா! எவ்வளவு பெரிய சாதனை. அவன் அகால மரணம்; அதன் விளைவு. பல உச்சிநிலைகள். இதை நம்பித்தான் ஆகவேண்டும். அவர்கள் அழகாகப் பொய் சொல்கிறார்கள். பிரமாதமாக அந்தக் கதை ஆர் வத்தைத் தூண்டுகிறது. பல ரீல்கள் ஓடுகின்றன. ரீல்கள் விடுவதில் அவர்கள் நிபுணர்கள். அந்தக் கதையை இவன் பார்த்திருந்தால் அழகான பொய் சொல்லி இருக்கலாம்.

''எனக்குப் பொய் சொல்வது பிடிக்காது'' என்று பலமுறை சொல்லி இருக்கிறாள். அது அவன் நினைவுக்கு வருகிறது.

உண்மையை எப்படிச் சொல்வது. சத்திய சோதனை படித்திருக்கிறான். உண்மை அதுதான் கடவுள். இப்படிப் பேசிய மகான் எழுதிய சுயசரிதை அது.

''ஒரு கிழவி அவள் கட்டியிருந்த சேலை பழுது அடைந்து இருந்தது; அவளுக்கு மாற்றுப் புடவை தேவை என்று பட்டது. அதை வாங்கிக் கொள்ளக் கொடுத்தேன்'' என்றான்.

அவனை அவள் சந்தேகித்ததே இல்லை. ஒரே ஒரு குணம் அவன் பொய் சொல்ல மாட்டான் என்பது தெரியும்.

"உலகத்தில் எத்தனையோ கிழவிகள் இருக்கிறார்கள். இந்தக் கிழவிக்கு மட்டும் ஏன் கொடுக்க வேண்டும்? தருமம் செய்யத் தொடங்கினால் அதற்கு எல்லை ஏது?"

"தருமம் செய்வதாக இருந்தால் இந்த நாட்டில் தடுக்கி விழுந்தால் ஒரு ஆள் கிடைப்பார்கள். இந்தக் கிழவிக்கு மட்டும் ஏன் கொடுத்தாய்?" இதுதான் அவள் கேட்ட கேள்வி.

பேச்சு வளர்கிறது. துருவித் துருவிக் கேட்கிறாள்.

"அவள் கொஞ்சம் பழக்கமானவள்" என்கிறான்.

"அவள் எனக்கு வேண்டியவள்" என்கிறான்

"அவளுக்குத் தருவது என் கடமை" என்கிறான்.

"யார் அவள்?" அவள் ஆணித்தரமான கேள்வி.

"இதுவரை நான் எதுவும் எடுக்காமல் தந்திருக்கிறேன். இது மிகவும் அவசியம். நீ எண்ணிப் பார்த்தால் அதைப் பொருட்படுத்த மாட்டாய். ஒன்று குறைவதால் எதுவும் முழுகிப் போகாது. இதைப் பொருட்படுத்த மாட்டாய் என்றுதான் தந்தேன்."

அவள் அந்தக் கட்டைத் தூக்கி எறிகிறாள். "இதை அப்படியே அந்தக் கிழவிக்குத்தா! வேண்டாம் என்று சொல்லவில்லை. முதலில் கொடுத்து விட்டு மறுவேலை பாருங்கள்" என்று கச்சிதமாகக் கூறுகிறாள்.

"உண்மையாகவா?"

"ஆமாம்"

"உறுதியாகவா"

"ஆமாம்"

"நிச்சயமாகவா"

"ஆமாம்"

''பிறகு வருத்தப்படமாட்டாயே''

''தராவிட்டால்தான் வருத்தப்படுவேன்''

''அவள் என் தாய்; என்னைப் பெற்றவள்; அவளுக்குத்தான் தந்தேன்; இனி தொடர்ந்து தருவேன்'' என்று முடித்தான்.

# 20

# அறிமுகம்

அண்ணாசாலை; அவர்கள் அலமாரியில் அடுக்கடுக்காக நூல்கள் வரிசைப்படுத்தித் தலைப்புகேற்ப வைத்திருந்தார்கள். எல்லாம் ஆங்கிலப் புத்தகங்கள். அகில உலக மாநாடு இந்தப் புத்தகங்களை வைத்து நடத்தினார்கள். அகில இந்திய ஆசிரியர்களுக்கும் இடம் தந்திருக்கிறார்கள். அவர்கள் பரந்த மனப்பான்மை அது. உலக மொழி ஆங்கிலம். அதில் பாரதக் கதைகளை எழுதுகிறார்கள். தமிழில் எழுதினால் அவை விற்பனை ஆவது இல்லை; அதனால் இவர்கள் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். கான்வெண்ட் படித்த 'பாரதியார்களுக்கு' எனப் படைக்கப்பட்டவை இவை.

'திரௌபதி துகில்' அதற்கு ஒரு படம். 'கீதை உபதேசம்' கிருஷ்ணன் பழைய காலத்துத் தேரில் குதிரையை ஓட்டச் சவுக்கு ஒரு கையில்; சக்கரம் ஒரு கையில்; படம். 'சிலம்பின் கதை' அதற்குக் கண்ணகி சிலை. இவை எல்லாம் ஆங்கிலத்தில் அழகாக நல்ல தாளில் பெரிய

எழுத்தில் அச்சிடப்பட்டு வெளியிட்டிருக்கிறார்கள். விலை கூடுதல்தான்; என்றாலும் நூலகத்தையே நம்பி வெளி யிடும் ஒரு சில தமிழ் நூல்களைப் போல் அல்லாமல் தரமாக இருந்தன.

''விலை கூடுதல்; அதனால்தான் நூலுக்கு மதிப்பு'' என்று அந்த நிறுவனர் தெரிவித்தார்.

அந்தப் பேரறையில் மருந்து அலமாரிபோல் சில தமிழ் நூல்களும் கொலுவில் வைத்திருந்தார்கள். சிலர் வாங்கு வதாகத் தெரிவித்தார்.

''பாட புத்தகங்களை ஒட்டித்தான் தமிழ் வளர் கின்றது. ஆங்கிலம் போல் தமிழில் கதைகள் புதிய படைப்புகள் மிகுதி இல்லை'' என்பது அவர் கண்டு உரைத்தது.

அந்த ஆங்கில நூல்களில் ஒரு பக்கம் இந்திய எழுத்தாளர்கள் எழுதியவை; அடுக்கி வைக்கப்பட்டிருந் தன. அவர்களும் இந்தப் புராண இதிகாசங்களை நம்பித் தான் பேனா எடுக்கிறார்கள் என்பது தெரிந்தது; வாரியார் வாரிசுகள் இவர்கள்.

அந்தப் புத்தக நிறுவன அதிபருக்கு ஒரு புதிய ஆசை; தமிழிலும் இந்த ஆங்கில நூல்களைப் போல அச்சிட வேண்டும். மக்கள் விரும்புகிறார்கள். தரமான எழுத்து வரவேண்டும். எழுத முடியுமா? புதிய முயற்சி.

இந்த ஆசிரியர் அதாவது எழுதும் தொழிலை அவர் அறியாமலே ஏற்றுக் கொண்டவர். அவர் அங்கு அழைக் கப்படுகிறார்.

இவர் சில நூல்களைத் தம் சொந்த முதலீட்டில் வெளி யிட்டிருக்கிறார். அதற்குமேல் செலவிட அவர் வீட்டு வரவு செலவு அனுமதிக்கவில்லை; அதனால் அந்த நிறுவனத்தை அணுகுகிறார்.

இவர் எழுத்தாளர் என்பதைக் காட்டிக் கொள்ள எழுதி விற்பனை ஆகாத நூல்களுள் ஒன்றனைப் பிரதி எடுத்துச் சென்று இருக்கிறார். இவர் சட்டைப் பையில் இரண்டு பேனாக்கள்; போலீசு அதிகாரி, கண்டக்டர், மருத்துவர் சிலர் தம் சட்டையில் குத்திக்கொள்ளும் பெயர்களைப் போல அடையாளச் சின்னங்கள்.

மை படிந்திருந்த அந்தச் சட்டையில் சில சமயம் கருத்துகளுக்குப் போராடியபோது பேனாவை உதறியதால் ஏற்பட்ட சிதறல்கள்; அதனால் ஏற்பட்ட விபரீதம் அவை. இவர் நிச்சயம் எழுத்தாளர்தான் என்ற முத்திரை அது.

''நீங்கள் விரும்பும் நூல் எழுதலாம் புராணங்கள், பழைய கதைகளைத் தவிர. ஏனென்றால் அவை ஆங்கிலத்தில் பல வெளிவந்துவிட்டன'' என்று தகவலுடன் தன் கருத்தை வெளியிட்டார் அதிபர்.

''எழுதிக் கொண்டிருக்கிறேன்; புதிய சில சிறுகதைகள்; கிளிஞ்சல்களைப் போல்'' என்று தன் உருவக ஆற்றலை வெளிப்படுத்தித் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார்.

''இது பயன் உள்ள எழுத்து; இன்றைய் பிரச்சனைகள்; நாட்டு நடைமுறை இவற்றைச் சித்திரித்து எழுதுகிறேன். வெற்றிப் படைப்பு'' என்று தற்புகழ்ச்சி கலந்த குரலில் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து கொள்கிறார்.

பழைய பாட்டு ஒன்று இவருக்கு நினைவுக்கு வருகிறது. 'மன்னனை அணுகிச் சென்றாலும் தன்னை அறியாதவர் இடத்தும் தன்னைத் தானே புகழ்ந்து உரைப்பது தகுதி ஆகும் ' இந்தப் பாடல் வரிகள் அவருக்குத் தற்காப்புத் தருகின்றன.

''கவலைப்படாதீர்கள்; அணிந்துரை வாங்கி வந்து விடுங்கள்; அச்சிடலாம்'' என்று அவர் அறிவுரை தருகிறார்.

அது அறிவுரை அல்ல; விதிமுறை; அணிந்துரை இல்லையென்றால் அதனை யாரும் விரும்பமாட்டார்கள். விற்க முடியாது என்பது அவர் தொழில் அனுபவம்.

இந்த 'தமிழுக்கு' இது ஒரு புதிய சோதனையாக அமைகிறது.

அவர் தன் எழுத்தை நம்புகிறார். அந்த நம்பிக்கை யில் எழுதுகிறார். அணிந்துரை அதுவும் கொண்டு வந்து தந்தால்தான் அவர் வெளியிடுவார்; அது அவர் தன் மானத்தைத் தொட்டது.

அவர் எழுத்துக்கு அவர்தான் சான்று. வழக்குத் தொடுத்தால் சாட்சியில்லாமல் எடுபடுவது இல்ல. நூல் எழுதி வெளியிட்டால் அணிந்துரை உடன் அச்சிடா விட்டால் யாரும் நம்ப மாட்டார்கள் என்பது அந்த அதிபர் தந்த கருத்து.

யாரிடம் அணிந்துரை பெறுவது? அதற்கு என்று சில அறிஞர்கள் அணுகப்படுகிறார்கள். அவர்களை அணுகு வது; புத்தகத்தை நீட்டுவது; 'படித்துப் பாருங்கள்' என்று சொல்வது; தாங்கள் இதற்கு ஒரு அணிந்துரை தர வேண்டும் என்று வேண்டுவது பழங்காலத்து அரசர் களைப் புலவர்கள் பரிசுக்கு நாடியதாகக் கூறப்படுகிறது. அந்தக் கதைகள் நினைவுக்கு வருகின்றன.

சிலரிடம் சென்றால் அவர்கள் தராளமனப்பான்மை "நீயே எழுதி எடுத்துக் கொண்டு வந்து கொடு; பார்த்து என் பெயர் இட்டுத் தருகிறேன்" என்று சொன்னவர்களும் உண்டு. அதற்கு இவர் மனச்சான்று இடம் தரவில்லை. மற்றும் நூல் எழுதிவிட முடியும்; அதற்கு முன்னுரை, அணிந்துரை எழுதுவது மிகவும் சிரமம் என்பது இவர் அறிந்து ஒன்று.

"யாராவது 'அவார்டு' வாங்கியவர்களை அவர் களிடம் கேட்டு எழுதிக் கொண்டு வாருங்கள்" என்று

அவர் அன்புக் கட்டளையிடுகிறார். வசிட்டர் வாயால் பிரம்மரிஷி என்ற பட்டம் வாங்குவதற்கு விசுவாமித்திரர் என்ன பாடுப்பட்டார்; அது இவருக்குத் தெரிந்தது; நிறுவனருக்கு எங்கே தெரியப் போகிறது?

இவ்வளவு தூரம் தன்னைத் தாழ்வுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை; அங்கிருந்த சில தமிழ் நூல்களை நிறுவனர் மாதிரிக்கு எடுத்துக் காட்டினார்.

ஒருசில புத்தகங்களைப் புரட்டுகிறார். நூறு இருநூறு பக்கங்கள் என்றால் அணிந்துரை பத்து பக்கம், காணிக்கை ஒரு பக்கம்; அதில் பழைய முதியவர்கள் படம்; அவர் கள்பால் ஆசிரியர் வைத்திருந்த மதிப்பு; நன்றிக் கடன்; இவற்றின் விவரங்கள் அடங்கிய பட்டியல்; ஆசிரியர் பிறநூல்கள் இப்படித் தேர்தல் போஸ்டர்கள் போல் இடம் பெற்றிருந்தன.

திருக்குறள் ஒன்று; அது இன்று பல தமிழாசிரியர்கள் உரைநூல்கள் தெளிவுரைள் எழுதிக் கொண்டிருக்கிறார் கள். எவ்வளவு எழுதியும் அவற்றை அவர்களால் விளக்க முடியவில்லை என்பது ஒரு சான்று; அடிமுடி காணாத கதை பாகவதர்கள் சொல்வது நினைவுக்கு வந்தது.

எளிய உரை என்று ஒன்று எழுதி வெளியிடப்பட்டு இருந்தது; திருக்குறளே எளிது என்பதை நிறுவ அது பயன்பட்டது. பிரித்து எழுதாமல் அவர் பண்டைய தமிழ் நடையை அப்படியே நிழற்படம் எடுத்து எழுதியிருந்தார்; எளிய நடை என்று அச்சிட்டு இருந்தது. அது வியப்பாக இருந்தது.

மறுபடியும் அந்த நிறுவனத்தாருக்குச் சரியான பதில் தருவது என்று முடிவு செய்கிறார்.

''ஐயா! இப்படி ஒரு தீர்மானம், அணிந்துரை ஐந்நூறு பக்கம்; நூல் ஐம்பது பக்கம்; இது நூலுக்கு விளம்பரம்; பலரிடம் வாங்கித் தருகிறேன்'' என்கிறார்.

''அப்படியும் நூல்கள் வருகின்றன. ஒரு கவிதை நூல் எழுதுவார்கள்; அதற்கு மதிப்புரைகள் என்று அதைவிட மிகுதியாகச் சேர்க்கிறார்கள். அமைச்சர்கள் தொடங்கிப் பல்கலைப் பேராசிரியர்கள், கவிஞர்கள் இந்த வரிசையில் படங்களைப் போட்டு வெளியிடுகிறார்கள்'' என்று அவர் அனுபவத்தையும் அமைதியாகக் கூறுகிறார்.

வேறு வழியில்லை. தான் எழுதும் சிறுகதைத் தொகுப்புக்கு எப்படியும் ஒரு பிரபலமானவரைத் தேடு வது என்று முயல்கிறார்.

பிரபலமானவர்கள் என்று ஒரு நூல் வெளியிடப் பட்டிருந்தது. அதைப் புரட்டிப் பார்த்து ஒரு பத்திரிகை ஆசிரியரின் பெயரைத் தேர்ந்தெடுத்து வைக்கிறார்.

இவர் எழுதிய எழுத்து கம்ப்யூட்டர் பொறியில் பிரதி எடுக்கப்பட்டு விட்டது. இரண்டு பிரதிகள் கேட்டுப் பெற்றால் அதற்குக் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டி இருந்தது.

கம்ப்யூட்டர் பொறியில் விரைவில் நூல வடிவு பெறுகிறது. கூடுதல் செலவுதான்; ஆனால் உடைந்த எழுத்துகள்; அச்சுப் பிழைகள்; பிழையும் திருத்தமும் இந்த மாதிரி குறைபாடுகள் இருப்பது இல்லை. வாசகர் களும் இந்தப் புதிய அச்சில் நூல்களைப் படிக்க விரும்பு கிறார்கள்.

ஒருமுறை பிரதி எடுத்துக் கொண்டால் அதை 'பிலிம்' எடுத்துக் கொண்டால் அதனைக் கொண்டு வேண்டும்போது எல்லாம் விரைவில் நூல் கொண்டு வர முடிகிறது. அச்சில் இது ஒரு பெரிய முன்னேற்றம். அணிந் துரை நூல் அச்சிட்ட பிறகுதான் வாங்க வேண்டும் என்பது இல்லை.

நூலைக் கண்ணால் காணும்போது இவர் மகிழ்ச்சி அடைகிறார். மண இதழ் அச்சிடும் முன் நிச்சயதார்த்தம்

நிகழ்ச்சியைச் சந்திப்பது போன்ற மகிழ்ச்சி இது; புத்தகம் நிச்சயம் வந்து விடும். அதன் நகல் தன் கையில் இருக்கிறது.

பத்திரிகை அலுவலகத்துக்கு நடந்து நடந்து அலுத்து விட்டது; சினிமா டிக்கெட் வாங்குவதற்கு கியூவில் நிற்பது போல ஒரு வேதனை. என்ன செய்வது! படம் பார்த்துத் தானே ஆக வேண்டும். அவரைப் பார்த்தாகி விட்டது.

பத்திரிகை தர்மம் அதை அவர் சுட்டிக் காட்டுகிறார். தான் எந்தக் கருத்தையும் தரக்கூடாது; மதிப்புரை தான் வெளியிடுவது நல்லது என்றார்.

''இருந்தாலும் தாங்கள் தனிப்பட்ட முறையில் ஒரு எழுத்தாளர்; நீங்கள் மற்றொரு சக தொழிலாளியை மதிக்கிறீர்கள். இது உங்கள் உரிமை'' என்று எடுத்து வைக்க வேண்டி இருந்தது.

சரி அவர் கெடுவு வைத்தார். தையல் கடையில் துணி கொடுத்தால் நடக்கும் நடைதான். 'பொறுங்கள் எழுதி விடுகிறேன்' என்று அவர் வைத்த கெடுவுகள் எரிச்சலை உண்டு பண்ணுகின்றன.

''இந்தக் கதைகள் எம் பத்திரிகையில் வெளியிடச் சிபாரிசு செய்கிறேன்'' என்று ஒரு நூதன கருத்தைத் தெரிவித்தார். இவரைத் திருப்திப்படுத்தப் பேசிய முகமன் உரை அது.

''வெளியிட மாட்டீர்கள். ஒரு பக்கக் கதையில் இருந்து அரைப்பக்கத்துக்கு வந்திருக்கிறீர்கள். அதனையும் குறைத்து ஒரு வரியில் வெளியிடத் திட்டமிடும் காலம் இது; நீங்கள் என் முழுப் பக்கம் மூணுக்கு மேல் போகும் கதைகளை வெளியிட மாட்டீர். உங்கள் பத்திரிகை பாதிப்பு அடையும்'' என்று கூறி அவரை விரைவில் எழுதித் தரத் துரிதப்படுத்த வேண்டி நேர்கிறது.

இவர் வீட்டுக்கும் பத்திரிகை அலுவலகத்துக்கும் மிகுந்த தூரம் இல்லை. ஒரு கதை எழுதும் நேரம்தான். அதனால் இவரால் சலிப்பு இல்லாமல் போக முடிந்தது. ஆட்டோவில் போய் இருப்பார். கூடுதல் கட்டணம் கேட்பதால் அதில் ஏறுவதை அவர் கூடியவரை தவிர்த்தார்.

தேர்தல்கள் அனுபவம் உடையவர்கள் விடாது நெருக்குவது போல இவரும் விடாமல் தொடர்கிறார்.

இறுதியில் பத்துப் பக்கத்தில் ஒரு கட்டுரை எழுதி யிருந்தார். அவர்கள் பத்திரிகைகளில் வெளிவரும் கற் பனையாக இவருக்குப் பட்டது. எதையும் மிகைப்படுத்தி எழுதுவது அவர் தொழில். ''இந்த நாட்டிற்கு உடனடி தேவை சிறுகதைகள்; அவை எழுதாவிட்டால் இந்த நாடு முன்னேறாது; அரசாங்கம் இதை முதலில் கவனிக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தார். குழாய் ரோடு தேவை என்று எழுதிப் பழக்கம்; அதன் பிரதிபலிப்பு இது. இரண்டு பக்கம் எழுதித் தந்தார். சிறுகதை என்றால் என்ன என்று அதற்கு ஒரு திறனாய்வுக் கட்டுரை எட்டுப் பக்கம்; எல்லாம் பத்துப் பக்கம் எட்டியது; இறுதியில், ''இந்தப் புத்தகம் அழகாக அச்சிடப்பட்டுள்ளது,'' என்று எழுதி யிருந்தார்.

அதைப் படித்துப் பார்க்கிறார். சிறுகதை இலக்கியத் தின் இன்றைய தேவை அதற்குரிய காரணங்கள் இவற் றைச் சுற்றி வளைத்து இது உஜாலா விளம்பரத்தைப் போல உப்பு சப்பு இல்லாமல் இருந்தது. மற்றும் இது 'உன் மனைவி கெட்டிக்காரி இதை இன்னும் ஒரு முறை சொல்லுங்கள்' என்பதைப் போலவும் சலிப்புத் தந்தது.

இவ்வளவு தாழ்வாகச் செல்ல முடியவில்லை. அணிந்துரை வாங்குவது நூலின் உள்ளடக்கத்தை மதிக் காது என்று அவருக்குப் படுகிறது.

மறுபடியும் அண்ணாசாலை அந்தப் புத்தக நிறு வனரைப் பார்க்கச் செல்லவில்லை.

ஏனைய நூல்களை இவர் வெளியிட்டதைப் போல இதையும் வெளியிடுவது என்று தீர்மானிக்கிறார்.

''இந்த நூல் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்ளும்; அறிமுகம் தேவை இல்லை'' என்று சில வரிகளைத் தன் முன்னுரையில் சேர்த்து வெளியிட்டார். வாசகர்களின் விமரிசனமே ஒரு நூலுக்கு அணிந்துரை என்பது அவர் கருத்தாக அமைகிறது.

# 21

# இணைக் கல்வி

''சற்றே விலகியிரு''

''என்னப்பா சந்நிதானம் மறைக்குதா?''

அதை மறுபடியும் இன்று சொல்கிறான்; ''சற்றே விலகியிரு; இல்லாவிட்டால் விலங்கு இட்டு மரியாதை யாக இழுத்துச் செல்வார்கள்''.

இனிமேல் குளிர்காய முடியாது; அருகில் சென்றால் சுட்டு விடும். காக்கி சட்டை காலர் சட்டையை இழுத்துப் பிடிக்கும் 'புதுக்கடி' வந்திருக்கிறது. இப்படி இள வட்டங் களுக்குள் கருத்துப் பரிமற்றங்கள் நடைபெறுகின்றன.

'காக்கி பேண்ட்' இன்று அவசியத்துக்காக 'ஜீன்ஸ் பாண்ட்' அணிகிறது. ஏற்கனவே கட்டி வைத்தமுடி; அது தொழிலுக்காக; அது இப்பொழுது எழிலுக்காக.

கல்லூரிக்குக் காசு தந்து சேர்ந்தது இல்லை. இன்று இந்தச் சட்டை கல்லூரி மாணவி; நங்கையர் கல்லூரி முன்

அங்கையில் கிழிந்த புத்தகங்கள் அவற்றின் உள்ளீடு கேஸ் குறிப்பு டைரி. மெய்ப் பொருள் நாயனார் கதையில் முத்த நாதன் கையில் ஆகம ஏடுகள்; உள்ளே அவன் மறைத்து வைத்திருந்தது 'கொடுவாள்'. இது பழைய கதை.

இந்தக் காக்கி சட்டை அவள் கையில் இருந்தது கம்ப்யூட்டர் புத்தகம்; நாளை இவள் ஒரு பொறியியல் இன்ஜினியர்.

இந்த பஸ்ஸில் ஏன் இந்த நெருக்கடி; இந்தப் பெண் போலீசு இவர்கள் இடம் பிடித்துக் கொள்வதால். இந்த ஜீன்ஸ் உடை சில ஜெண்ட்சுகளை இழுக்கின்றது. மெல்ல அவன் அவளை நெருங்குகிறான். அவளும் பெண் தானே! காக்கி சட்டையில் இருந்தால் அவள் ஹாக்கி கட்டை; இப்பொழுது அவள் கிரிக்கெட் மட்டை; வருகிற பந்தை அவன் அடிக்கக் காத்திருக்கிறாள்.

மெதுவகத் தொட்டான் அவள் துவள்வாள் என்று; அவள் பாய்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. கழுத்தில் அவள் கைவைத்தாள்; அந்த அழுத்தத்திலிருந்து அவனால் விடுபட இயலவில்லை.

இந்த அனுபவங்கள் தாம் அவர்களை நந்தனார் கீர்த்தனையைப் பாடவைக்கிறது. 'சற்றே விலகி இரு பிள்ளாய்' என்று இன்று பாடுகிறார்கள். காலம் மாறுகிறது; இது இளவட்டங்களின் மாநாடு; அவர்கள் தீர்மானங்கள்.

"சார் இனிமேல் காதல் கதைகள் படமே எடுக்க முடியாது". இந்தப் பேச்சு காதல் படம் தவிர வேறு எந்தப் படமும் வெற்றி தராது என்ற நம்பிக்கையில் கொட்டிக் கொடுக்கும் உற்பத்தியாளர் வட்டத்தில் பேசப்படுகிறது.

"ஏன்"

"காதல் கதைகள் இவற்றின் காதல் தொடக்கமே கல்லூரி வளாகம் தானே! ஈவ்டீசிங் இது இப்பொழுது

பரப்பரப்பான பத்திரிகைத் தலையங்கம்; இதை வைத்துத் தானே தொடக்க விழாவை நடத்துகிறோம்'' இது டைரக்டரின் புலம்பல்.

இந்த மாதிரி காட்சிகளை சென்சார் பலகை தடுத்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்த உரையாடல்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது.

வேறு வழியில்லை; காதலை விட்டுவிட்டு உருப்படியான படங்களை எடுப்பது என்று முடிவு செய்வார்கள்.

''ஏன்டி காலேஜிக்கு வரலை?''

''பிடிக்கலை; எதுக்குப் போகணும்?''

''படிக்க'' அதற்கு அஞ்சல் வழிக் கல்வி நிலையம் இருக்குது; பணம் கட்டினால் நோட்சு அனுப்பறாங்க; தேவைப்பட்டால் டியூசன். ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் நிறைய டுடோரியல் நிறுவனங்கள் நடத்துகிறார்கள்;''

''ஏன் வரமாட்டேன் என்கிறே?''

''த்ரில் இல்லை; என்னை யாரும் பின்பற்றப் போவது இல்லை; விழிகள் வழிகளில் தடுத்து நிறுத்தப் போவது இல்லை; உடுத்தும் உடை; எடுக்கும் நடை அனைத்தும் வெறும் எடைதான்; வீண்; ரசிகர்கள் இல்லாமல் எப்படிப் பாட்டுப் பாட முடியும். ரசிப்பவர் இல்லை என்றால் இந்தப் பெண் ஜென்மமே வீண். இது எல்லாம் விளக்கிக் கொண்டிருக்க முடியாது.''

இப்படியும் ஒரு சில கல்லூரி வளாக உரையாடல் நிகழ வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அவர்கள் பேசுவது நமக்கு எங்கே கேட்கிறது?

இது இந்தப் பருவ நிகழ்ச்சி; பத்திரிகைகள் இதைப் பிரச்சாரம் செய்தன, ஒரு பஸ்சும் ரயிலும் மோதிக் கொண்ட பிறகு 'நில்' 'கவனி' 'செல்' இந்தப் பிரச்சாரங்

கள்; மறுபடியும் ஒரு பஸ் ரயிலில் மோதும் டி.வி காட்சி காட்டப்படுகிறது.

எங்கும் எதிலும் இதே பேச்சு; பூங்காக்கள் வெறிச் சிடுகின்றன. 'காதலுக்குத் தடை'; உடன் பேசியவன் அவன் 'உடன் பிறந்தவன்' என்ற நற்சான்று கையில் வைத்திருந்தால்தான் தப்பமுடியும். போலிச் சான்றுகள் தயாரிக்கப்படுகின்றன என்று கேள்வி.

லாட்ஜிகளில் தாலிக் கயிறுகள் தேவைப்பட்டால் வாடகைக்குத் தருகிறார்கள்.

தற்காப்பு இனித் தேவை; "காதல் இந்தக் காட்டாறு களைக் கடக்க வேண்டியதுதான் உயிரையும் கொடுத்துக் காக்க வேண்டியது காதல்" இப்படித்தான் டைலாக்குகள்; அவற்றிற்கு உயிர் கொடுத்துத்தான் ஆக வேண்டும்; வேறு வழியே இல்லை. இது இளவட்டங்களின் வட்ட மேஜை கள் கூடிப் பேசி வெளியிட்ட தீர்மானம்.

"அம்மா ஜான் (இது அவன் பெயர்; அளவு அல்ல) என்னைப் பார்த்து "ஐ லவ் யூ" என்று சொல்றான்" அழுது கண்பிசைகிறாள். அவளுக்கு ஒரு பெயர் தேவைப் படுகிறது. எழுத்தாளனின் தேவைகளுள் இது ஒன்று; அலுமு அவள் பெயர்.

"அவன் எப்படி 'லவ்' பண்ணலாம்? நான் வந்து கேக்கறேன்" இது அந்த அலமுவைப் பெற்று அவளைப் பள்ளிக்கு அனுப்பிய அன்னையின் ஆவேசம்.

"டி.சி; தாங்க! இனிமேல் என் மகள் இங்கே படிக்க மாட்டாள்."

"ஏனுங்க உங்களுக்கு வேலை மாற்றம் டிரான்ஸ்பர் ஏதாச்சும்"

"அப்படி எல்லாம் இல்லைங்க; என் மகளை வேறு நல்ல பள்ளியில் சேர்க்கப் போகிறேனுங்க"

கோவை தமிழில் இவ் உரையாடல் நடைபெற்றது.

"எங்கள் பள்ளி நல்லாசிரியர் விருது வாங்கிய முதல்தரப் பள்ளி; ஒழுக்கத்திற்குப் பேர் போனது; நன்றாகத்தானே படிப்பிக்கிறோம்" என்று அவர் தம் பள்ளியின் சுய சரிதத்தைச் சுருக்கமாக உரைக்கிறார்.

"அதெல்லாம் இல்லைங்க! உங்க பள்ளியில் 'ஈவ்டீசிங்க்; என் மகள் இங்கே படிக்க முடியாது"

ஆசிரியர்க்கு இது விளங்கவில்லை.

அந்தப் பள்ளி ஆரம்பப்பள்ளி; அந்த மாணவி எல்.கே.ஜி.; இந்தப் பெண் அவளைப் பார்த்து ஒரு இளந்தளிர் ஈவ்டீசிங்க்; அவரால் நம்பமுடியவில்லை.

"அவள் வகுப்பு மாணவன் என் பெண்ணைப் பார்த்து "ஐ லவ் யூ" என்று கூறியதாக இதைச் சொல்லி இருக்கிறாள்".

"ஐ ஹேட் யூ என்று சொல்லவில்லையே! 'நான் நேசிக்கிறேன் என்ற தானே கூறி இருக்கிறான்? இதிலே என்ன தப்பு?"

"இல்லைங்க இவன் சினிமாவைப் பார்த்துக் கற்றுக் கொண்டது; அதே டைலாக்தான் இது; டி.சி. கொடுத்து விடுங்க."

"தவறு இல்லையே! இணைக் கல்வியின் நோக்கமே இந்த ஈவ் டீசிங்கைத் தவிர்ப்பதற்குத்தான்; ஆண்கள் பெண்கள் சேர்ந்து படிக்கும் கல்வி நிலையங்களில் இந்த இழுபறி நடப்பது இல்லை; பிரித்து வைப்பதால்தான் இந்தத் தவறுகள் நடக்கின்றன. காதல் வாழ்வின் ஒரு பகுதி தானே; அதற்கு அடிக்கல் இங்கே இவன் நாட்டி இருக்கிறான். இதில் என்ன தவறு? பெண்ணை மதிப்பது மட்டும் போதாது, நேசிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்; அதைத் தடுப்பது கூடாது" என்று அறிவுரை கூறுகிறார்.

''சாரி அவசரப்பட்டுவிட்டேன். இதைப் பத்திரிகைகள் பிரகடனப்படுத்திவிட்டன. அதனால் அடைந்த அதிர்ச்சி; மன்னிக்கவும்.'' என்று கூறி விடை பெறுகின்றாள்.

மறுபடியும் அந்த அலமு பக்கத்தில் நெருங்குகிறாள். ''சாரி ஜான்! நான் செய்தது தப்பு; சீரியஸா எடுத்துக்கிட்டேன்; மன்னித்துவிடு'' என்றாள்.

''டேக் இட் ஈசி'' என்றான் அவன்; அது ஏதோ பாட்டில் அவனுக்குப் பழக்கமாகிய வரி.

"I Love You" என்று அவள் ஆங்கிலத்தில் பதிலுக்குக் கூறினாள்.

# 22

# போயிருக்கக் கூடாது

''நீங்கள் கட்டாயம் திருமணத்துக்கு வர வேண்டும்''

ஏன் இவர் தன்னை அழைக்கிறார்? கட்டாயம் என்ற சொல் எப்படிப் பொருந்தும்?

''வர முயற்சிக்கிறேன்'' என்பது இவர் சம்பிரதாயமான பதில்.

அவர் விடுவதாக இல்லை.

''இல்லை; அவசியம் வர வேண்டும்'' இது அவர் அழைப்பு.

ஏன் இவர் தன்னை அழைக்கிறார்? ஏன் வற்புறுத்துகிறார். இது இவருக்கு விளங்கவில்லை.

'கட்டாயம்' 'அவசியம்' இரண்டுக்கும் என்ன வேறுபாடு? சிந்தித்துப் பார்க்கிறார்; விளங்கவில்லை.

அவரோடு இவர் பழகியது சில நாள்தான். இவர்கள் பாதிக்கப்பட்டவர்கள்; இவர்கள் 'சிட்பண்டில்' பணம் கட்டித் தொலைத்துவிட்ட ஏமாளிகள்; அதனால் ஏற்பட்ட தொடர்பு.

அவர் தன் மகளின் திருமணத்துக்காக என்று கட்டி வைத்தார்.

அந்த மகளின் திருமணம் இது.

இரண்டு பேரும் காவல் அதிகாரிகளுக்கு ஒரே மாதிரி 'பிராது' கொடுத்தவர்கள். அதனால் ஏற்பட்ட தொடர்பு.

அவருக்குப் பணம் திருப்பித் தரப்பட்டது. இவருக்கு வரும் என்ற நம்பிக்கை இல்லை. அது அது அவரவர் அதிருஷ்டம் என்ற தத்துவம் இவரை ஓரளவு அமைதி கொள்ளச் செய்தது.

திருமணத்துக்குப் போவது என்றால் எவ்வளவோ சிரமங்கள். ரொம்பவும் நெருக்கமானவர்களாக இருந்தால் அவர் மணம் செய்து கொள்வதற்குப் 'பரிசு' தரும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பாராட்ட வேண்டியதுதான்.

இதுவும் ஒரு 'குட்டி சிட்பண்டு'தான். திருப்பித் தந்தாலும் தரலாம்; தராமல் போனாலும் போகலாம். ஓரளவு இந்த மொழிமாற்றுகள் அவசியம்தான். ஓசியில் உண்டு மகிழ்வது; அதைவிட இந்த வகையில் வரி வசூலுக்கு ஆட்படுவது நல்லதுதான். இது நகைச்சுவை விருந்து.

இந்த அறிமுகத்தோடு எப்படிப் போவது? இறுக்கமான உறவா? இல்லை; போகாமல் இருப்பதா? சே! அந்த

ஆள் இவ்வளவு தூரம் வந்து கூப்பிடும்போது எப்படிப் போகாமல் இருப்பது.

டிரைவருக்குப் போகத் துடிக்குது. ''சும்மா இருக்கிறீர்கள்; போய்விட்டு வரலாம்'' என்பது அவன் திணித்த ஆலோசனை. அவனுக்குச் சில சமயங்களில் பெரிய திருமணங்களுக்குப் போவதில் உள்நோக்கம் இருக்கத்தான் செய்தது; அது என்னவென்று விளங்காமல் இருந்தது. ஏன் இவன் தேவை இல்லாமல் அறிவுரை தருகிறான்? போகட்டும் அறிவுரை தருவது மனித உரிமை; பலரும் செய்வது.

அவனுடைய அறிவுரை இந்தப் பயணத்தை முடிவு செய்வதற்கு ஓரளவு காரணமும் ஆகியது. அவன் மகாபுத்திசாலி என்று கொள்வதற்கு இல்லை. சில சமயம் இவரைவிட புத்திசாலித்தனமான கருத்துகளும் அவன் மூளையில் உதயமாவதைத் தடுக்க முடியாது. அவன் தினமும் பத்திரிகைகளைப் படித்து வருகிறான். காலையில் தினகரன்; மாலையில் மாலை முரசு; நடுப்பகலில் டி.வி நியூஸ்.

இவர் தன் நிறுவனம் உண்டு; தான் உண்டு; தன் செல்லுலார் போன் உண்டு என்று தன் வேலையை மட்டும் கவனிப்பார்; அடுத்தவர் அக்கிரமங்களுக்கு இவர் செவி தருவது இல்லை.

எவ்வளவோ பேர் இவரிடம் தேவை இல்லாமல் ஆட்சிக் கலைப்பைப் பற்றி ஆருடம் சொல்ல வந்து இருக்கிறார்கள். இவர் அதைப் பற்றிக் கவலைப்பட்டது இல்லை.

எது எப்படிப் போனால் என்ன! நம் கடமையை நாம் செய்ய வேண்டும்; எதுவுமே நிலையில்லை; ''நிலையான ஆட்சிக்கு வாக்குத் தாருங்கள்'' என்ற பிரச்சாரம் செய்யப்பட்டது.

இவர் நம்பவில்லை; என்றாலும் கேட்பதற்கு நன்றாக இருந்தது. அது அவருக்கும் 'சரி' என்று பட்டது. அப்பொழுது வாக்குத் தந்தார். அதற்குப் பிறகு வருந்தியது உண்டு. இப்படிச் சின்ன சின்ன பாதிப்புகளைத் தவிரப் பொது வாழ்வில் பெரிய அக்கரை இவர் காட்டியது இல்லை.

டிரைவர் தினமும் அவன் படிக்கிற செய்திகளை அவனால் உள் அடக்கிக் கொண்டிருக்க முடிவது இல்லை. இவரிடம் தான் பேசித் தான் அறிவாளி என்பதைக் காட்ட முயன்றிருக்கிறான், அந்தப் பழக்கத்தில் இவர் அவன் அறிவுரைக்கு இடம் தந்தார்.

அந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சேர்வது மிகவும் சிரமமான காரியம் ஆயிற்று; இந்தக் காலத்தில் ஒரு முகவரி யைத் தேடினால் யார் சரியாகப் பதில் சொல்கிறார்கள்.

''அவரைக் கேளு எனக்குத் தெரியாது'' என்று சொல்லுபவர்கள் தாம் பலர். ''டீ கடையில் கேட்டால் அவன் பதில் சொல்லும் நேரம் அவன் தொழிலில் பாதிப்பு; அதற்குள் சூடான ''டீ'' ஆறிப்போக வாய்ப்பு, அதனால் இவர்களை மதிப்பதே இல்லை. கஸ்டமர்கள் நெருக்கடி; முகவரி கேட்டுப் பதில் சொல்லிச் சொல்லி ஒரு அலுப்பு; அவன் இவர்களுக்குப் பயன்படவில்லை.

எப்படியோ சந்து பொந்துகள் கடந்து அந்த ஒளி மயமான எதிர் காலத்தைக் காண முடிந்தது.

யார் யாரோ அங்கு இருந்தார்கள்; ஒருவர் கூடத் தெரிவதற்கு அங்கு வாய்ப்பு இல்லை. இந்த 'சிட் பண்டு' அவர் மும்முரமாக உலாவிக் கொண்டிருந்தது தெரிந்தது. எங்கும் உட்காராமல் இராட்டினமாகச் சுற்றிக் கொண்டிருந் ததைக் காண முடிந்தது. அவரை அடையாளம் தெரிய வில்லை.

பட்டு வேட்டி கொண்டு அவர் பளபளப்பாக விளங்கியதால் அவராகத்தான் இருக்க முடியும் என்று யூகிக்க முடிந்தது.

போலீசு நாய் எங்கிருந்தாலும் குற்றவாளிகளை மோப்பம் பிடிக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறார். அது முற்றிலும் உண்மை அல்ல.

கலியாணத்துக்கு வந்தவர்களை ஒருவர் விடாமல் சந்தித்து விசாரித்து 'மகிழ்ச்சி' என்று தெரிவிப்பது, மண வீட்டுக்காரர்கள் வாடிக்கை; தேர்ச்சி பெற்றவர்கள் என்பது அவருக்கு அனுபவம்.

இவரை எப்படியோ அவர் கண்டு கொள்கிறார்; இவரைத் தம் உறவினர்களுக்கு அவர் அறிமுகம் செய்தது மகிழ்ச்சி அளித்தது; 'நண்பர்' என்று மட்டும் சொல்லி இருந்தால் போதும்; அது மகிழ்ச்சியைத் தந்திருக்கும்.

கூடுதலாகக் கூறியது இதுதான் "இவர் கார் வைத்திருக்கிறார்; அவ்வப் பொழுது லிஃப்டு தருவார்; மிகவும் நல்லவர்" என்று அறிமுகம் செய்தார்.

தன்னை அவர் மதித்தது விளங்கியது; எப்படி அவர் தன்னை மதிக்கிறார் என்பதும் விளங்கியது.

இவருக்கும் அவருக்கும் இருந்த உறவு இவரால் தவறாகக் கணிக்கப்பட்டு இருந்தது. அன்று அது திருத்தப் பட்டது; 'பிழையும் திருத்தமும்' என்று அச்சில் பதிப் பிக்கப்பட்டது. சரியான வாசகம் இவருக்குக் கிடைத்தது.

இந்த அவமானம் ஏற்படும் என்று இவர் எதிர் பார்க்கவே இல்லை.

என்ன செய்வது? இதுபோல் சின்ன சின்ன தொடர்புகளுக்கு எல்லாம் திருமணங்களுக்குப் போவது தவறுதான் என்பதை உணர்கிறார்.

வந்த இடத்தில் இவர் அங்கு 'விருந்து' என்று அழைப்பிதழில் போடப்பட்டிருந்தது. அதில் கலந்து கொள்வதில் விருப்பம் ஏற்படவில்லை.

இருந்தாலும் இவர் காணிக்கை செலுத்தியிருந்ததால் தவறு இல்லை என்று சமாதானப்படுத்திக் கொண்டார். மற்றும் அதற்கு என்று நியமிக்கப்பட்டிருந்த பிரமுகர் இவரைவிட மறுத்துவிட்டார்.

''கட்டாயம் சாப்பிட்டுத்தான் போகவேண்டும்'' என்று வற்புறுத்தினார். அவசியம் சாப்பிட்டுப் போக வேண்டும் என்பதையும் மறக்காமல் சேர்த்துக் கூறினார்.

இந்த ஒலிகள் அவர்க்கு எதிர் ஒலிகளாகக் கேட்டன. வெளியே செல்ல எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வி அடைந்துவிட்டது.

இந்த டிரைவர் சும்மா இருக்கக் கூடாதா; அது அவன் பழக்கம். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கமெண்டு கொடுப்பது அவனுக்குப் பழக்கம் ஆகிவிட்டது. கிரிக்கெட் ரசிகன் ஆவான் அவன்.

''எப்படி கல்யாணம்?'' எப்படி வரவேற்பு என்பது அந்த வினாவின் உள்ளுறை.

''பிரமாதம்'' என்று தன் தோல்வியை மறைத்துக் கொண்டு பேச நினைத்தார்; அவரால் முடியவில்லை; உண்மைக்கு ஆற்றல் இருந்தது.

''போயிருக்கக் கூடாது'' என்று தாழ்ந்த குரலில் அவர் பதில் அமைந்தது; அவனும் அதையே எதிர் ஒலித்தான் ''போயிருக்கக் கூடாது'' என்றான்.

''என்னை யாரும் கண்டு கொள்ளவில்லை; அழைக்கவே இல்லை'' என்று தன் வருத்தத்தைத் தெரிவித்தான். சாப்பிட அவனுக்குப் பத்து ரூபாய் நோட்டு இரண்டு தருவது நியாயம் எனப் பட்டது.

அதை அவன் வாங்கிக் கொண்டான். வாக்குச் சாவடிக்குப் போய் வந்தது போன்ற மனநினைவோடு வண்டியை வீட்டுக்கு ஓட்டினான்.

அழைப்புக்கு எல்லாம் இழைவு தருவது தவறு என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

# 23

# தூண்டுதல்

இவன் அழைப்பிதழ் தந்தான்; இந்தப் பிழைப்புகள் நேரும் என்று யார் எதிர்பார்த்தார்கள்?

மணமக்கள் இருவரையும் வந்திருந்து ஆசீர்வதிக்க அழைத்திருந்தார்கள். இவர் அவர்கள் தயாரித்து வைத்த விருந்து அதனை ரசித்து உண்டார்.

அவர்களை ஆசீர்வதிக்க மேடை ஏறி இருக்க வேண்டும்; மேடை ஏறுவதைத் தவிர்த்துவிட்டார்.

அவரை ஒருமுறை பேச அழைத்திருந்தார்கள். அந்த நிறுவனத்துக்கு இவர் நன்கொடை தந்திருந்ததால்; அங்கே இவருக்குப் புகழ்மாலை; அதற்குக் காசு கிடையாது. அதைச் சூட்டுவதற்காக.

இவருக்கு என்ன பேசுவது என்பது தெரியவில்லை; எப்படித் தொடங்குவது என்பதும் தெரியாது.

சில பேச்சாளர்கள் பேசுகின்ற பாணிகள் நினைவுக்கு வந்தன. அங்கிருந்தவர் ஒவ்வொருவருடைய பெயர்களை

அவர்கள் சாதனைகளைச் சுட்டிக்காட்டும் சிறப்புகள் சேர்த்து முன் இருக்கும் அவர்கள் தூங்காமல் இருக்க அழைத்துவிட்டுப் பின் தன்னை அக்கூட்டங்களுக்கு அழைத்தமைக்கு நன்றி கூறுவதைக் கவனித்து இருக்கிறார்.

முன்னால் இருந்த நாற்காலிகள் தெரிகின்றன; அதில் உட்கார்ந்திருந்த புள்ளிகளை இவரால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

இவர் தலைவர்; ஆகையால் பேச்சாளர்களை அறி முகப்படுத்துவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டிய தாயிற்று. அந்தப் பெயர்களும் அவரைப் பொறுத்தவரை அந்நிய நாட்டுப் பெயர்களாக இருந்தன. பழக்கமில்லை.

அச்சடித்த அழைப்பிதழ் அவர் கையில் எடுத்துக் கொண்டார். அந்த வரிசையில் பெயர்களை வைத்து அவர்களை விளித்தார். பிறகு அங்கிருந்த மகளிர் பக்கம் பார்த்தார். தாய்மார்களே என்றார். மற்றவர்களை நண் பர்கள் ஆக்கிக் கொண்டார்.

கூட்டத்துக்கு வந்தவர்கள் எழத் தொடங்கினார்கள். தாம் வந்தது வேறு கூட்டமோ என்ற ஐயம் அவர்களுக்கு அதனால் எழ ஆரம்பித்தனர்.

இவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்ட பேச்சாளர்கள் என்று நினைத்துக் கொண்டு மேடையில் அமர்ந்திருந்த பெருமக்கள் தமமை அழைக்காமல் இருந்ததற்கு வருத்தப் அடையவில்லை.

அதன்பின் தன்னை அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க அழைத்தமைக்கு நன்றி கூறத் தொடங்கினார்.

அந்தக் கூட்டத்தின் இயக்குநர் அதாவது சங்கச் செயலாளர் பேச்சாளர் கையில் இருப்பது அவர் ஒப்புக் கொண்ட மற்றொரு கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல் என்பதை அறிந்து கொண்டார். உடனே வந்து அவர் மானத்தைக்

காத்தார். திரௌபதிக்குக் கண்ணன் புதிய புடவையைக் கொடுத்ததுபோல் அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை அவர் கையில் நீட்டினார்.

அது முதல் அவர் ‘டொனேஷன்’ கொடுப்பதோடு நிறுத்திக் கொண்டார். கூட்டத்தில் பேசுவது இல்லை. மேடை ஏறுவது இல்லை, பீஷ்ம விரதம் கொண்டு விட்டார். அதனால் தான் அன்று மேடை ஏறித் தம்பதி களை ஆசீர்வதிக்கவில்லை.

அந்தப் பையன் இவருக்கு அறிமுகம்; அஞ்சல் நிலையத்தில் அவனிடம் பேனா வாங்கி எழுதினார். அதை அவர் மறக்காமல் கூப்பிட்டுக் கொடுத்தார். அந்த நன்றி மறக்காமல் அவரை அவன் திருமணத்துக்கு அழைப்பு அனுப்பி இருந்தான்.

வீடு தேடி காரில் வந்து இவரைக் கட்டாயம் வர வேண்டும் என்று ‘சம்மன்’ தந்து அழைத்திருக்கிறான். இவரால் எப்படி மறுக்க முடியும்?

ஆசி கூறுவது இருக்கட்டும். எப்படியும் அதில் ‘டின்னர்’ என்று போட்டிருந்தான். பின்னர் அதுவும் ஒரு காரணம் ஆயிற்று.

அந்த மணத்தில் பார்த்தது அவனை. அப்புறம் அவன் என்ன ஆனான். அஞ்சல் நிலையத்துக்கு இவர் போனபோதெல்லாம் அவனைச் சந்திக்க வாய்ப்பு நேர்ந்தது இல்லை.

அந்தப் பெண் இவனைவிட சற்று உயரம் கம்மி; அதாவது சராசரி பெண்களைவிட ஆறு அங்குலம் குறை வாக இருந்தாள். அவள் உயரமான செருப்பு அதை அணிந்து அவனுக்கு நிகராக நடந்தாள் என்று கேள்வி.

இப்பொழுது குள்ளமானவர்களை ஆறு அங்குலம் உயரம் வரை நிமிர்த்தலாம்; மருத்துவம் முன்னேறி

விட்டது; கவலை இல்லை; அந்த உயர் செருப்பைத் தூக்கி எறிந்துவிட முடியும். மருத்துவம் முன்னேறிவிட்டது. சதை பெருத்து இருந்தாலும் அறுத்துக் குறைக்கிறார்கள். மூக்கு அதைச் சரிப்படுத்த ஸ்ரீதேவிபோல் அறுவைச் சிகிச்சை, பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளலாம்; சதையை அறுத்து ஒட்டிச் சரி செய்துவிடுகிறார்கள்.

மூக்கும் முழியுமாக ஒரு பெண் இருக்க வேண்டும் என்பது இல்லை. எல்லாவற்றிலும் மருத்துவம் வளர்ந்து விட்டது.

''அவனிடம் இவர் பேச்சுக் கொடுத்தார், என்ன எப்படி? தேன் நிலவுக்கு விடுமுறை?''

''பால் நிலவு'' என்று பதில் கூறினான்.

''என்னப்பா! என்ன? எங்காவது போய் வந்திருக்க வேண்டும்; முன்னாலேயே 'புக்' செய்திருக்க வேண்டும்'' என்று அனுபவ உரை தந்தார்.

''அவளைவிட நான் தேர்வில் மதிப்பெண் குறைவாகப் பெற்றிருக்கிறேன். அவள் முதல் மதிப்புப் பெற்றவள்; என்னை மதிப்பது இல்லை'' என்று குறைபட்டுக் கொண்டிருந்தான்.

''இது ஒரு குறையா! எப்படியும் நீ ஆம்பளை! உனக்கு என்னப்பா குறைவு?''

''அவள் கண்களுக்கு நான் மன்மதனாக இருக்கிறேனாம். அது அவள் டேஸ்ட்டுக்குப் பிடிக்கவில்லை.''

''இது என்னப்பா புதுசா இருக்குது; உன் அழகுக்கு என்ன குறைவு?''

''அதை அவள் மதிக்கவில்லை; படிப்பில் சற்று மதிப்பெண் குறைத்து வாங்கி இருக்கிறேன். சர்ட்டி பிகேட்டு ஒப்பிட்டுப் பார்த்தாள். அதனால் வந்த வினை'' என்றான்

"இப்பொழுது என்ன ஆயிற்று? நீ அவளை நேசிக்கிறாயா? அதைச்சொல் முதலில்"

"அவள் குள்ளமாக் இருக்கிறாள். வெளியே போகும் போது உயர் செருப்பு; தெரிவதில்லை; தனியாக வீட்டில் இருக்கும்போது அவள் குள்ளம் அதனால் எனக்கு அவளிடம் 'அப்பீல்' உண்டாவது இல்லை" என்று அவன் புதுமையாகக் கூறுகிறான்.

"இதை யாரிடம் முறையிடுவது? கிடக்கட்டும் சரி ஒற்றுமையாகக் குடித்தனம்?"

"வேறுபாடு வந்துவிட்டது. நடத்தமுடியாது; இரு வரும் விவாகரத்துக்கு மனு செய்து இருக்கிறோம்".

இவருக்கு இது வருத்தமாக இருந்தது. அன்று தான் மேடைக்கு ஏறி வாழ்த்தாததுதான் தவறு; வாழ்த்தி இருந் தால் இதற்குள் அவர்கள் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு பெற்றிருப்பார்கள்.

இனி எந்தக் கலியாணத்துக்குப் போனாலும் அவர் கள் தரும் அட்சதையைத் தவறாமல் கிட்டே சென்று அவர்கள் தலையில் விழுமாறு தூவுவது என்று முடிவுக்கு வருகிறார்.

இதுவரை அந்த அரிசியை முன்னால் இருந்தவர்கள் தலையில்தான் தூவி இருக்கிறார். வேறு என்ன செய்ய முடியும்? எழுந்தா மேடைக்குப் போக முடியும். மேடை அவருக்கு ஒரு அலர்ஜி.

வழக்கின் முடிவுதான் என்ன? இவர்கள் மனத்தில் ஒரு கோளாறு; 'காம்ப்ளெக்ஸ்' உயர்வு தாழ்வுகள் இவர் களைப் பிரித்து வைத்திருக்கிறது. தன்னினும் மற்றவர் தாழ்வு என்பது; மதிக்க முடியாமல் போகிறது; 'கவர்ச்சி' அது குறைவு.

இவர்கள் தங்களை மானிட இனமாகப் பார்க்கிறார் கள். இவர்கள் மிருகங்களாக மாறினால்தான் உருப்படுவார் கள் என்ற எண்ணம் தோன்றியது. ஏதோ இப்படி ஒரு பைத்தியகார எண்ணம், இந்த மனுஷனே ஒரு பைத்தியம்தான். கண்டபடி எண்ணுவது; பேசுவது இது மற்றவர்கள் பார்த்துச் சிரிப்பதற்குக் காரணம் ஆகிறது.

தனக்கு ஒரு சமூகக் கடமை இருக்கிறது என்பதை உணர்கிறார். அவர்கள் மனத்தில் புதிய எண்ணங்களைத் தோற்றுவிக்க வேண்டும். என்ன செய்வது?

என்ன செய்வது; அவர்களுக்கு ஒரு விருந்து வைப் பது என்று முடிவு செய்கிறார். மற்றும் அந்த மணமக்களை மதித்து இதுவரை தன்வீட்டுக்கு அழைக்கவில்லை. இது அவர்களைக் கவுரவிக்கச் செய்யும் கடமை; அதைச் செய்யலாம்.

அன்று மேடையில் வாழ்த்துவதை மறந்தார். இந்த வரவேற்பு விருந்து தருவதைத் துறந்தார்.

எப்படியும் அவர்களை அழைப்பது என்று துணிவு கொண்டார். அவர்கள் வராவிட்டால் என்ன செய்வது? வீட்டில் ஒருநாள் சலசலப்புத் தேவைப்பட்டது; தன் வீட்டில் ஒரு விருந்து; தன் மனைவி சமைப்பதை அவர்கள் பாராட்டிக் கூறுவதற்கு ஒருவாய்ப்பு; இதுபோன்ற வாய்ப்புகள் தந்தால் இவர் மனைவிக்கு ஒரு பெரு மகிழ்ச்சி. அதற்கு இடம் தரவேண்டும். அதற்காகவாவது அவர்களை அழைப்பது என்பது தீர்மானம்.

விருந்து உண்டபின் சிரித்துப் பேச வேண்டிய கட்டம் வருகிறது.

அந்த எழில் முகத்தை இவர் பார்க்கிறார். அது இவனுக்கு ஏன் தெரியவில்லை? வியக்கிறார்.

ஆண் அழகன்; கட்டுக் கோப்பான உடம்பு; கஷ்டப் பட்டுப் பல உடற்பயிற்சிகள் செய்து கொழுப்பைக்

குறைத்தவன். வயிற்றைச் சிறுக வைத்துத் தசைநார்கள் தன் தோள்களில் அங்கே நிமிர்ந்து அமைய அழகுடன் விளங்குகிறான். சில மதிப்பெண்கள் குறைவு, அவ்வளவு தானே .

"ஏன்'பா! உன் மனைவியைப் பத்திரமாகப் பாது காத்துக் கொள்; அவள் பேரழகி; எவனாவது தட்டிக் கொண்டு போய்விடுவான்" என்று குத்திக் கிளறினார். இது அவருக்கு ஒரு விளையாட்டு; அவனுக்கு இது ஒரு தூண்டுதல்.

"ஏன்'மா; இவன் பின்னாலே பெண்கள் சுற்றுகிறார் கள். கிடைத்தால் போதும் காத்திருக்கிறார்கள். கவனமாக இருக்க வேண்டும்?" என்று தூண்டிவிட்டார்; சுடர் விடத் தொடங்கியது.

அவ்வளவுதான்; அடுத்த ஆண்டு அந்த வீட்டில் குழந்தைக்குத் தொட்டில் பழையது தேவை என்று இவரிடம் வந்து கேட்கிறான்.

"என்னப்பா விசேஷம்?"

"பழைய தொட்டில் அதில்தான் எங்கள் செல்வன் அவனைப் போடவேண்டும். நீங்கள் கட்டாயம் அந்த விழாவுக்கு வரவேண்டும்" என்று அழைத்தான்.

இவர் பேனாவைத் தவறாமல் அவனுக்குத் தந்திருக் கிறார். அவனும் மறக்காமல் தொட்டிலைத் திருப்பித் தந்தான் இவர் நினைவுப்படுத்தாமலேயே.

# 24

# ராசியான பேர்

'என்ன புதுத் தலைப்பாக இருக்கிறதே' என்று வியக்கலாம்; விஷயம் பழையதுதான்.

நான் அதிசயமாக ஒரு ஸ்கூட்டர் வாங்கினேன். அது பதிவு செய்ய அனுப்பினேன். அதற்குக் கிடைத்த எண் அதிருஷ்டம் என்கிறார்கள். அது வாங்கிய பிறகுதான் நான் தொட்டது எல்லாம் பெண்ணாகவே இருந்தது; தவறு பொன்னாக இருந்தது.

நான் தாடி வளர்க்க ஆரம்பித்தேன்; வயது காரணம் என்று நினைக்காதீர்கள், சந்திரசேகர் பிரதமராக இருந்த போது அவர் குறையாக வளர்த்து வந்த தாடி மீசை எனக்குப் பிடித்து இருந்தது. ஒரு கல்சர் இது, அவர்களுடன் பாதி சிவாஜி ஸ்டைல்; அதுவும் என்னைக் கவர்ந்தது.

அப்படியே வளர்த்தேன். செடி கொடிகளை வளர்க் கும்படி பிரச்சாரம் செய்கிறார்கள். அது முடியவில்லை என்றாலும் இதுவாவது வளர்ப்போமே என்று விட்டு வைத்தேன். தண்ணீர் ஊற்றாமலே எப்படி வளர்கிறது? இது ஒரு ஆராய்ச்சி, வியர்வைதான் காரணம் என்பதைக் கண்டுபிடித்தேன்; இந்தக் காலத்திலே உடைகளில் தலை மயிர் முடியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதம் இல் லாமல் போய் விடுகிறது. நிச்சயம் அவர்கள் என்னோடு இந்த வகையில் போட்டி போட முடியாது என்பதிலே ஒரு

திருப்தி. தொட்டுத் தொட்டுப் பழகிய பிறகு வெட்டிப் போட மனம் வரவில்லை.

எப்படியாவது வளரட்டும் என்று விட்டு விட்டேன். என்னைப் பார்த்து என் நண்பர்கூட வளர்க்க ஆரம்பித் தார்கள். முடியவில்லை; அவர்கள் வீட்டில் எதிர்ப்பு வந்து விட்டது. அது விளைவிக்கும் குத்துச்சண்டையை அவர் களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சத்தம் செய்யாமல் அவர்கள் இளைஞர்கள் ஆகி விட்டார்கள்.

நான் வளர்த்த அருமை தாடிக்கு என் மனைவி மறுப்பே சொல்லவில்லை; நிச்சயம் நான் விரைவில் சாமியாராகி விடுவேன் என்ற நம்பிக்கை அவளுக்கு; அதனால்தான் அவள் என்னை எதுவும் சொல்லவில்லை. காவி உடை ஒன்று அவளே வாங்கிக் கொண்டு வைத் திருந்தாள். 'தாடி' என்று என்னை அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். எங்கள் வீட்டைத் 'தாடிகாரர் வீடு' என்று சொல்லி வந்தார்கள். 'தாடி' என்று சொன்னால் நேரே என் முன்னே கொண்டு வந்து நிறுத்தி விடுவார்கள்.

எனக்கு இந்தத் தாடி மீது வெறுப்பு வந்து விட்டது; யாரும் என்னிடம் கிண்டலாகப் பேசுவதை நிறுத்தி விட்டார்கள்; அளவுக்கு மீறி மரியாதை காட்டினார்கள். 'தாத்தா' என்ற புதிதாகப் பிறந்த ஐந்து வருஷம் ஆன பக்கத்து வீட்டுக் குழந்தை என்னை அழைக்க ஆரம் பித்தது. யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தது என்று கேட்டேன். என் 'மம்மி' என்றது. அந்த அம்மையார் கொஞ்சம் அழகாகவே இருந்தார்கள்.

திருப்பதிக்குப் போவது என்று முடிவு செய்து விட்டேன். இங்கே லோக்கல் சலூன்களில் அதைத் தொட மறுத்து விட்டார்கள். உங்களுக்கு இது நன்றாக இருக்கிறது என்று மறுப்புச் சொல்லி வந்தார்கள். தாடியைப் பறி கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். அடிக்கடி தொட்டுப் பார்ப்பேன்; பழகிய தோஷம்.

வீட்டுக்கு வருகிறேன்.

''வெளியே போய்யா! அய்யா வீட்டில் இல்லை'' என்று என் மனைவி சொல்கிறாள்.

''அய்யா இருக்கிறார். பொய் சொல்றீங்க'' என்று சொல்கிறேன்.

அவள் சிறிது நேரம் ஆயிற்று என்னை அடையாளம் காண.

''அடியோடு மாறிவிட்டீர்களே'' என்றாள். ''முடியோடு தான் மாறிவிட்டேன்'' என்றேன்.

தாடிபோன பிறகுகூட என்னை மற்றவர்கல் 'தாடி' என்றே அழைத்தார்கள். இந்தப் பெயர் என்னை விட்டு நீங்காது என்பதை உணர்ந்து கொண்டேன்; ஒரு தடவை தவறு செய்துவிட்டால் அவள் அவிசாரி தான். பத்தினி என்று சொல்ல மாட்டார்கள் என்பதை உணர்ந்தேன்.

தாடியோடு இருந்தபோது ஒரு போட்டோ பிடித்து மாட்டி வைத்திருந்தேன். என் பக்கத்தில் என் சகதர்மினி உட்கார்ந்திருந்தாள். நான் நாற்காலியில் அமர்கிறேன். அவள் பக்கத்தில் நிற்கிறாள்; சிலபேர் பாரதியின் பழைய படம் என்று நினைக்க ஆரம்பித்தார்கள்.

சிலர் 'யார்' இந்தப் பெரியவர் என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். பெருமை என்பதே தாடியால்தான் வருகிறது என்பதை உணர்கிறேன்.

மொட்டை அடித்துக் கொண்டபிறகு என்னைப் பார்த்தவர்கள் ''நீ வில்லனாக நடிக்கலாம்'' என்றார்கள்.

தாடிக்கும் மொட்டைக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண முடிந்தது.

நடிப்பதில் ஆசை பிறந்தது. நடிகர் அசோகன்தான் நினைவுக்கு வந்தார். வில்லனாக நடிப்பதற்கு அவர் மொட்டை அடித்துக் கொண்டது நினைவுக்கு வந்தது.

''சினிமாவிலே நடிக்க வேண்டும்'' என்ன செய்ய லாம்?

பேட்டிகள் பல படித்து இருக்கிறேன். பாரதிராஜா வின் நினைவு வந்தது.

''ஏன் அவரைப் பற்றிய நினைவு'' சரியான கேள்வி.

ஏனென்றால் அவர் மூலமாகத்தான் பல நடிகர்கள் திரையைக் கிழித்துக் கொண்டு உள்ளே வந்திருக்கிறார்கள்.

''புதுமுகம்'' என்றேன்.

''மொட்டை அடித்த முகம்'' என்று அவர் கிண்டல் செய்தார்.

நான் நரிமுகத்தில் விழிக்கவில்லை.

அதற்கப்புறம் புரிந்தது. தலையில் பூச்சூடி நிலாப் போல ஒளிவீசும் வட்டமுகம்தான் புதுமுகம் என்று.

சரி போனால் போகட்டும் போடா என்று அந்தத் திசைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பினேன்.

வடபழனி கோயிலுக்குப் போவதைக்கூட நிறுத்திக் கொண்டேன்.

''உங்களைப் பார்த்தால் ஒரு பைத்தியக்காரனைப் போல இருக்குது'' என்றாள் என் மனைவி.

ஏன் அப்படிச் சொன்னாள் என்பது புரியவில்லை.

பாரதியின் படத்தைக் காட்டினாள். அவருக்குத் தலைப்பாகை இருந்தது. மீசை இருந்தது; எனக்கு இல்லை.

இப்பொழுது புரிந்தது. அவரைப் போல நான் ஒரு பைத்தியம் என்பது அவள் கணிப்பு.

பாரதிக்கு ஒரு கும்பிடு போட்டேன். ''நீதான் அருள் செய்ய வேண்டும்'' என்றேன்.

''கவலைப்படாதே கலைமகள் உனக்கு அனுக்கிரகம் செய்வாள்; எழுது'' என்றார்.

மகாகவி பாரதியின் அருள் கிடைத்துவிட்டது என்ற ஓரே சந்தோஷம்.

அதுமுதல் என்னை ஒரு மகாகவி என்று நினைத்துக் கொண்டேன்.

கவிதை எழுதுவது என்று என் பேனா எடுத்தேன். தவறு என் 'எழுதுகோல்' எடுத்தேன். செங்கோல் ஓச்சியது.

என் மனைவி எதிரே நின்றாள்.

காளியைப் பற்றி ஒரு கவிதை எழுத முடிந்தது.

'மகாகாளி' என்று அதற்குத் தலைப்புக் கொடுத்தேன்.

ஒவ்வொரு எழுத்தாளன் பின் ஒருத்தி இருக்க வேண்டும் என்பது இந்த வகையில் உண்மையாயிற்று.

''என்ன காளியைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள்'' என்று கேட்டாள்.

''லட்சுமியைப் பற்றி எழுத முடியவில்லை. எனக்குத் கிடைத்த அருட்பிரசாதம் இதுதான்'' என்றேன்.

''என் கவிதை வடிவாக அவள் நின்றாள்; ரசித்தேன்.''

''நீ எனக்கு நறுந்தேன்'' என்று தொடர்ந்தேன்.

''உன்னை அடியோடு வெறுத்தேன்'' என்றாள்.

எங்கள் பேச்சுத் தேனாகப் பொழிந்தது.

''இதை எங்குக் கற்றீர்?'' என்றாள்.

''கண்ணதாசன் காட்டிய வழி'' என்றேன்.

அவள் சொன்னாள். ''கண்ணதாசனைப் பின்பற்றுங்கள் எழுதினால் வெற்றி கிடைக்கும்'' என்றாள்.

கவிஞன் ஆக முடியாது என்பதை உணர்ந்தேன். காரணம் இந்தச் சினிமாக்காரர்களால் கவிஞர்கள் உற்பத்தி மிகுதி என அறிந்தேன்.

வீட்டிலேயே இருந்து கொண்டு அறுக்க விரும்பவில்லை; எங்காவது ஏதாவது எப்படியாவது என்று ஆவதற்கு உரிய வழிவகைகளைச் சிந்தித்தேன்.

லைட் பாயாக இருந்தவர்கள் எல்லாம் லைஃப்பாய் சோப்பில் விளம்பரம் ஆகிப் பின் படிப்படியாக முன்னணி நடிகர் ஆகிறார்கள். 'எமன்' என்ற நடிகனின் பேட்டியைப் பார்த்தேன். கொலையாளி வேடத்தில் அவனை வெல்பவர் இல்லை என்பதால் இந்தப் பெயர் அவனுக்குப் படப் பெயர் ஆகிவிட்டது.

''எங்கேயும் உள்ளே நுழைவதுதான் கஷ்டம்; பிறகு ஒட்டிக் கொள்ளலாம்'' என்று அவன் பேட்டி கொடுத்து இருந்தான்.

இந்த சினிமாத் துறை மதிக்காத ஒரு நபர் யார் என்று சிந்தித்தேன்; கதாசிரியன் என்பதை உணர்ந்தேன். அந்த இடத்துக்கு அதிகம் போட்டி இல்லை என்பதை அறிந்தேன்.

'கதாசிரியன்' என்றால் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதைப் பார்த்திருக்கிறேன். கேட்டால் 'அறுவை'; அதனால் உள்ளே விடுவது இல்லை என்று காவல் கூர்க்கா சொல்கிறான்.

பத்திரிகைக்குள் நுழைவது என்று தீர்மானித்தேன். 'பூணூல் இல்லை' உள்ளே நுழைய முடியாது என்று சிலர் சொன்னார்கள்.

''அனுமதி இல்லை'' என்று எழுதி இருந்தது.

"ஆசிரியரைப் பார்க்க வேண்டும்" என்றேன்.

"அவர் மும்முரமாகத் தலையங்கம் தீட்டிக் கொண்டு இருக்கிறார்" என்று சொன்னார்கள்.

கோபம் வந்து விடுவிடு என்று கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தேன்.

அவர் உண்மையில் தலையங்கம் தீட்டுவதைப் பார்க்க முடிந்தது.

மற்றும் சில அங்கங்களையும் அவர் கரங்கள் வருடிக் கொண்டிருந்தன.

அதிர்ச்சி அடைந்தேன்; எழுதவில்லை. குளிர் காய்ந்து கொண்டிருந்தார்.

அவர் செய்கையை வைத்து அவரை மிரட்டினேன்.

"எனக்கு இங்கு எழுத இடம் கொடு; மறுத்தால் உன்னை வைத்து எழுதி விடுவேன்" என்றேன்; விசுவநாதன் வேலை கொடு என்பது போல் இருந்தது இந்த மிரட்டல்.

பதறாமல் அவர் ஆரம்பத்தில் அச்சுப்பிழை திருத்தும் உத்தியோகம் தர ஏற்பாடு செய்தார்.

அச்சுப்பிழை திருத்தும் உத்தியோகம் தான், அங்கு வரும் கதைகளைப் படிக்க முடிந்தது. திருட முடிந்தது; பெயர்களை மாற்றினேன். தலைப்பைத் திருத்தினேன். தகிடுதத்தம் செய்தேன்; முடிவு நான் ஒரு சிறந்த சதை எழுத்தாளன் ஆக முடிந்தது.

என் மனைவியிடம் இந்த ரகசியம் சொல்லவில்லை? "எப்படிங்க உங்களால் எழுத முடிகிறது" என்று கேட்டாள்.

அவள் என்னை ஒரு மேதை என்று முடிவு செய்து விட்டாள்.

"இரவில் ஏன் கண் விழிக்கிறீர்"? என்று கேட்டாள்.

"இப்படி எழுதினால் உடம்புக்கு என்ன ஆகும்" என்று விசாரிப்பாள்.

"நீங்கள் உண்மையில் பிரமதேவனாகப் பிறக்க வேண்டியவர் இப்படி வந்து மாட்டிக் கொண்டீர்கள்" என்பாள்.

எனக்குக் குழந்தை இல்லை.

எதை வைத்து இவள் என்னை இப்படிக் கூறினாள் என்பது புலப்படவில்லை.

"எழுத்து தத்ரூபமாக இருக்கிறது" என்பாள்

"பொய் சொல்லக் கூடாது" என்றேன்.

அவளுக்கு விளங்கவில்லை.

"பொய்யை வைத்து எழுதக் கூடாது" என்றேன்.

அவள் ஒரு கதை எழுதி வைத்திருந்தாள். அதை என்னிடம் தந்து பத்திரிகையில் போட்டு அருளுமாறு வேண்டினாள்.

"நீ அறிமுகம் ஆகாதவள்; எடுபடாது" என்றேன்.

"உங்கள் பேரிலேயே வரட்டும்" என்றாள்.

அவள் எழுதிய முதல் கதை காதல் கதை. அவள் ஆரம்ப எழுத்து என்பதை அது காட்டியது. அவள் இளமை ஆசைகளை எல்லாம் இதில் கொட்டி வைத்து இருந்தாள்.

'அவள் தானா இவள்?' என்று சந்தேகம் வந்தது. "நீ யாரை வைத்து எழுதுகிறாய்" என்று கேட்டேன்.

"சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைகிறேன்" என்றாள்.

அந்தக் குட்டிச் சுவர் நான்தான் என்பதை அறிய முடிந்தது.

ஆதாரத்தோடுதான் தான் எழுதுவதாக அறிவித்தாள்.

''கரிக்கட்டை'' என்று அந்தக் கதைக்குத் தலைப்புத் தந்தாள்.

அவள் அதில் என்னைத் தீட்டித் தீர்த்துவிட்டாள்.

''அவன் கருப்பு என்கிறாய்; எப்படி அவனிடம் அவள் காதல் கொண்டாள்'' என்று கேட்டேன்.

''அப்படித்தான் ஒரு சிலர்'' என்றாள் அவள்.

அதிர்ச்சி தந்தது; அதனால் அந்தக் கதைக்கு அமோகமான வரவேற்பு ஏற்பட்டது.

கரிக்கட்டை என்ற தலைப்பு அவளை ஓர் ஓவியனாகவும் ஆக்கிவிட்டது. வீட்டுச் சுவர்களில் எல்லாம் இந்தத் தலைப்பு இடம் பெற்றது. அதைச் கிறுக்கி வைத்தாள்.

அதே நினைப்பு ''ஏன் இப்படிச் சுவரைக் கரியாக்கி விட்டாய்'' என்று கேட்டேன்.

அவள் என்னை விரும்புகிறாள் என்பதை அறிய முடிந்தது.

''கரித்துண்டு' என்ற நாவல் பரிசு வாங்கி இருக்கிறது'' என்றாள்.

'அது கதை; இது சதை' என்றேன்.

'அந்த நாவல் தான் இதற்கு விதை' என்றான்.

இவள் தமிழில் நாவல்கள் படிக்கிறாள் என்ட தை அறிய முடிந்தது.

தாடி என்ற பெயரே எனக்கும் புனை பெயராகி விட்டது.

தாடி எழுதுகிற கதை புதுமை மிக்கது என்ற பெயர் வாங்கிவிட்டேன்.

பிறகு நடிகையைத் தொட்டேன். அவள் கோபித்துக் கொள்ளவில்லை வேறு யாரைப் பற்றி எழுதுவது?

''ஒரு நடிகை நடிக்க வருகிறாள்'' என்ற தலைப்பைத் தந்தேன்.

இந்தத் தலைப்பு ஒரு பிரபல நாவலாசிரியரிடம் இருந்து திருடிக் கொண்டது.

இந்தக் கதை ஒரு நடிகையின் உண்மை வாழ்க்கையைத் தொட்டு விட்டது.

அவள் என்னை வழக்கு மன்றத்தில் நிறுத்தி விட்டாள்.

அதற்குப் பிறகு 'எப்படி எழுதுவது' என்பதைத் தெரிந்து கொண்டேன்.

தாக்கி எழுதுவதுதான் எழுத்து என்பதை அறிந்து கொண்டேன்.

யார் யாரோ மிரட்டல் கடிதங்கள் எழுதத் தொடங்கி விட்டார்கள்.

''இது உன் எழுத்துக்கு வெற்றி'' என்று பாராட்டினார்கள்.

''யார் மனமும் புண்படாதபடி எழுத வேண்டும்'' என்று அறிவுரை கூறினார் என் தலைவர்; அதாவது தலையங்கம் எழுதி வரும் தலைமை ஆசிரியர்.

''அதற்கு ஒரு தமிழ் எழுத்தாளரின் எழுத்துக்களை சுட்டிக் காட்டினார். அவர்தான் எழுத்துக்கு வழிகாட்டி என்றார். எனக்கு வேகம் வளர்ந்தது. என் எழுத்தில் சூடு தெறித்தது; அனல் கக்கியது 'நீ பகையைத் தேடிச் செல்கிறாய்' என்று அறிவித்தார்கள். அதுதான் எழுத்துக்கு வெற்றி என உணர்ந்தேன்.

'கரிக்கட்டை' அந்தக் கதைக்கு வடபழனியில் இருந்து அழைப்பு தந்து இதழ் அவர்களிடம் வந்தது.

அதைக் கொச்சைப்படுத்த விரும்பவில்லை.

என் மனைவி என் கருத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. கதை திரைப் படத்தில் வர வேண்டும் என்று விரும்பினாள்.

அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்க எந்த அழகியும் முன் வரவில்லை. ஆண் பெண்ணைச் கெடுத்ததாக மாற்றி னாள்.

அழகன் என்ற தலைப்பைக் கொடுத்துக் கதையை மாற்றியதற்குப் பிறகு அதை நடிக்க அமெரிக்காவுக்குப் போய்த் திரும்பி வந்த நடிகை நடிக்க முன் வந்தாள்.

அழகன் ஒகோ என்று ஒடியது.

அதற்குப் பிறகு என் வீடு தேடி அஞ்சல் கடிதங்கள் நிறைய வந்தன.

தாடி என்ற பெயரை மட்டும் கொடுத்தால் போதும் என்றார்கள்.

''முடியாது; நானே எழுதுவேன்'' என்றேன்.

''ஒருமுறைதான் ஒருவன் கதை எழுத முடியும். தொடர்ந்து எழுத முடியாது; எழுதினால் தோல்விதான்'' என்று அனுபவம் கொண்டு அறிவித்தார்கள்.

''என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டேன்.

''உங்கள் பெயர் மட்டும் தந்து விடுங்கள்; நாங்கள் படம் எடுத்துக் கொள்கிறோம்'' என்றார்கள்.

''கதையே வேண்டாம்; கதை இல்லாமல் படம் எடுப்பதில்தால் படத்தின் வெற்றி என்று அறிந்தவர்கள் தெரிவித்தார்கள். இது புதிய சிந்தனையாக இருந்தது. என் கதை அவர்கள் கேட்கவில்லை; தாடி அந்தப் பெயர் மட்டும் தந்து உதவினேன்''.

என் வீட்டு முகப்பில் 'தாடி' என்று கல்லில் எழுதி வைத்தேன். இந்தப் பெயரில் பல படங்கள் ஓடிக் கொண் டிருக்கின்றன; ராசியான பெயர்.

ஸ்கூட்டருக்குக் கிடைத்த எண் அதிருஷ்டம் என்று நினைத்தேன்; அதே போன்ற அதிருஷ்ட எண் என் புதிய காருக்குத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

# 25

# நாரத முனிவரின் பூலோக யாத்திரை

விசா இல்லாமல் விசயம் செய்த நபர் யார் என்று விறுவிறுப்பாக அவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

''விசா எங்கே'' என்று கேட்டார்கள்.

''எனக்குத் தேவை இல்லை'' என்கிறார் வந்தவர்.

''ஏன்?''

''வெளிநாட்டு டாலர்கள் நிறைய கொண்டு வந்திருக் கிறேன்; பாரத நாட்டில் முதலீடு செய்ய'' என்றார்.

''உங்களுக்கு விசா தேவையில்லை; தாராளமாக வரலாம்; கதவுகள் திறந்து வைத்து இருக்கிறோம்'' என்றார் கள்.

பொடி டப்பா எடுத்தார்; காரம் மணம் மிகுந்த பட்டணம் பொடி அவர் கையில் இருந்தது.

''இது எப்படிக் கிடைத்தது?''

''இதுதான் எங்கள் நாட்டுக்கு அதிகம் ஏற்றுமதி யாகிறது. உங்களுக்கு டாலர் சம்பாதித்துக் கொடுப்பதே இந்தப் பட்டணம் பொடிதான்'' என்றார்.

“உலகத்திலேயே பொடி டப்பாக்கள் இந்தியாவில் தான் தயார் ஆகின்றன; அதுவும் கும்பகோணம் இதற்குப் பேர் போனது” என்று அவர் சொல்லித் தெரிந்து கொண்டார்கள்.

நாரத முனிவரின் பூலோக யாத்திரை பற்றிப் பல பத்திரிகையில் முன்னறிவுப்பு வந்திருந்தன. அவரை வர வேற்க வழக்கம்போல் வருகின்ற கட்சிக்காரர்கள் யாரும் இல்லை.

பத்திரிகைக்காரர்கள் ஏராளமாக வந்து குவிந்திருந்தார் கள்.

ஒரு சின்ன பெண் பூச் செண்டும் மாலையும் கொண்டு வந்து முன் நின்றாள்.

நாரதர் முன்விழிப்போடு மறுத்துவிட்டார். அவர் பார்த்த தமிழ்ப் படங்களில் பூச் செண்டில் ‘பாம்’ வைத் திருப்பதைப் பார்த்திருக்கிறார். மாலை துண்டு எதுவும் கூடாது என்று உறுதியாக இருந்தார். ராஜீவ் காந்தியைக் கொல்லச் செய்த சதி. இதில் இருந்து அவருக்கு இப்படி ஒரு பயம் ஏற்பட்டு விட்டது.

மறுநாள் பத்திரிகையில் மாலைகள் ஏற்காத பிரமுகர் என்று விளம்பரம் தரப்பட்டது.

கின்னஸ் புத்தகத்தில் அவர் பெயர் இடம் பெற்றது என்று கேள்வி.

பக்த கோடிகள் சிலர் அவரைத் தரிசிக்க வந்திருந் தனர்.

அவருக்கு ஆரத்தி எடுத்துக் கர்ப்பூரம் கொளுத்தி வழிபட்டு வழி விட்டனர்.

“ஏன் சுவாமி தங்கள் பூலோக விஜயம்?” என ஒரு குட்டிக் கலை விமர்சனப் பத்திரிகை ஒன்றுபேட்டியில் கேட்ட கேள்வி இது.

"தெய்வங்கள் எல்லாம் அண்ணா நகருக்கும் பெசன்ட் நகருக்கும் குடி வந்து விட்டார்கள். அஷ்டலட்சுமி களும் அடையாறு வந்து சேர்ந்து விட்டார்கள். அங்கு எனக்கு 'போர்' அடித்தது; வந்து விட்டேன்" என்றார்.

"கலகம் செய்வது உம் தொழிலாமே"

"தெய்வத் திலகங்கள் அப்படி நினைக்கிறார்கள். என் வாயிலிருந்து ஏதாவது வந்தால் அதை வைத்து அவர்கள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இப்பொழுது தெய்வப் பெண்கள் ரொம்பவும் முன்னேறிவிட்டார்கள்; கம்ப் யூட்டர் சைன்ஸ் அது இது என்று படிக்க ஆரம்பித்து விட்டார்கள். கணவனோடு சண்டை போடுவது தம் நிலைக்குத் தாழ்வு என்று கருதுகிறார்கள். ஊடல் என்பது வாடல் இருந்தால் தானே வரும்! அவர்கள் சின்ன சின்ன விஷயங்களில் ஈடுபடுவது இல்லை; அதனால் இப் பொழுது எனக்கு அங்கு வேலை இல்லாமல் போய் விட்டது" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

"பாரதப் பிரதமரைப் பார்க்க உத்தேசம் உண்டா?"

"முக்கியமாக அவரைத்தான் பார்க்க வந்திருக் கிறேன். வெளிநாட்டு மூலதனம் கொண்டு வந்து தொழில் நடத்த அனுமதி தருகிறார்" என்று கேள்விப்பட்டோம்.

"அளகாபுரியில் இருந்து குபேரன் ஒரு செய்தி சொல்லி அனுப்பினார். அவர் நடத்தும் உலக வங்கியில் இருந்து நிறைய மூலதனம் அள்ளித் தந்திருக்கிறார். தமிழ் நாட்டில் இப்பொழுது நிறைய புராணப்படங்கள் எடுக் கிறார்களாமே அதுபோல் ஒரு படம் எடுத்துக் கொண்டு வர அனுப்பி இருக்கிறார்".

நாரதர் சொன்னது மிகவும் வியப்பாக இருந்தது. அவர் வள்ளித் திருமணம் சகதலப்பிரதாபன் காலத்தில் இருக்கிறார் என்று நினைத்தார்கள்.

"புராணப் படங்களா? திருவிளையாடற் புராணம் எடுத்தோமே அதைச் சொல்கிறீர்களா"

"அது இல்லை இன்று ராட்சதர்களுக்கும் தேவர்களுக்கும் நடைபெறும் போராட்டத்தை எடுக்கிறீகளாமே"

"அப்படி எல்லாம் இல்லையே"

"கடத்தல்காரர்களை வைத்துப் படம் எடுக்கிறார்களே அதைத் தான் சொல்கிறேன். பெரும்பாலும் படங்களில் இதுபோன்ற வில்லன்கள்தாம் வருகிறார்கள். ரஜனிகாந்த், விஜயசாந்தி இவர்கள்தாம் தெய்வ அவதாரங்கள் என்று கேள்விப்படுகிறார்கள்; சிறுவர்கள் எல்லாம் இவர்களைத்தான் வழிபடுகிறார்களாம் இவர்கள். இந்த வில்லன்களை எதிர்த்து அடிக்கும் படங்கள்தாம் ஓடுகிறதாம். இதுக்கும் புராணப் படங்களுக்கும் எங்களால் வித்தியாசம் காண முடியவில்லை. அடி உதை இடி மின்னல் இதுதானே தமிழ்ப்படம். இந்த நவீன புராணப்படங்களை தேவலோகத்து ரசிகர்கள் பார்க்க வேண்டுமாம்" என்றார்.

டி.வி. நிலையத்தில் இவருக்கு ஒரு சந்திப்பு நிகழ்ச்சி ஏற்பட்டது. அதற்கு என்றே நியமிக்கப்படும் ஆரணங்கு ஒருத்தி அவரை வளைத்துக் கொள்கிறாள்.

இவள் தெய்வப் பெண்ணோ மானிடப் பெண்ணோ என்ற சந்தேகம் வந்துவிட்டது.

அவள் கண்கள் இமைத்தன; கால்கள் கால் செருப்பு அணிந்திருந்தன; இதழ்களில் லிப்ஸ்டிக்; அவள் வைத்திருந்த பூ பிளாஸ்டிக். அதனால் இவள் மானிடப் பெண்ணே என்று முடிவுக்கு வந்தார்.

"நீங்கள் ஒண்டிக் கட்டையா ஜால்ராவா?" என்று ஒரு கேள்வி கேட்டு வைத்தாள்.

அதாவது மணம் ஆகாதவரா மணம் ஆகி மனைவிக்குத் தாளம் போடுகிறவரா என்பது இதன் அர்த்தம் என்பதைத் தெரிந்து கொண்டார்.

"பொடி மட்டை" எடுத்துக் கொஞ்சம் உறிஞ்சினார்.

உற்சாகம் வந்தது.

"இதென்ன கெட்ட பழக்கம்" என்கின்றனர்.

"புகை பிடிக்கக் கூடாது என்று சொல்கிறார்களே தவிரப் பொடி போடக் கூடாது என்று யாரும் சொல்லவில்லையே" என்று கூறினார்.

"சிகரெட் உடம்புக்குக் கெடுதி; அதனால்தான் இந்தப் பொடி மட்டை" என்றார்.

"சங்கீதம் பாடுகிறவர்கள் பழகிக் கொள்ளும் பொடி விஷயம் இது" என்றார்.

"உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்று திருப்பிக் கேட்டார் அந்த லிப்ஸ்டிக் பிளாஸ்டிக் பூவையை;

"ஆகிவிட்டது; டைவர்ஸ் செய்துவிட்டேன்" என்றாள் வினா தொடுத்தவள்.

"இந்த வயதிலா?"

"கிழவியான பிறகா டைவர்ஸ் செய்து கொள்வார்கள்" என்று கேட்டாள்.

"காரணம்?"

"இதைவிட better chance வர இருந்தது"

"என்ன ஆயிற்று?"

"என்னைவிட better girl அவரை வளைத்துக் கொண்டாள்"

"உங்கள் நிலைமை?"

"கொஞ்சம் பொடி கொடுங்கள் சொல்கிறேன்" என்றாள்.

''ஒரே கிக்கா இருக்கிறதே'' என்றாள்.

''கொஞ்சம் திக்காகப் போட்டுப் பாருங்கள்''

அவள் கண்களில் நீர் நிறைந்தன.

''நீங்கள்தான் இசைக்கே மூலகர்த்தா என்று சொல்கிறார்களே''

''அப்படிச் சொன்ன காலம் உண்டு; இப்பொழுது கூட்டத்தைக் கலைக்கப் போலீஸ் தேவை இல்லை''

''கருநாடக சங்கீதம்''

''நாங்கள் இப்பொழுது பாப்மியூசிக்குக்கு வந்துவிட்டோம்; நீங்கள் இன்னும் கருநாடக சங்கீதத்தையே கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்''

''நீர் தேவனாகப் பேசவில்லையே''

''நாங்கள் எல்லாம் மாறி விட்டோம்; மனிதனைப் போல வாழ்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்''

''காரணம்''

''சுக போதை எங்களைக் கெடுத்துவிட்டது. உழைப்பில் உள்ள சுகம் மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். அதை இழந்து விட்டோம்.''

''நாங்களும் மனிதர்களைப் போலக் குழந்தைகளைப் பெற விரும்புகிறோம்; இது முதற்படி''

''அது எப்படி''

''தேவர்கள் குழந்தைகள் பெற்றதாக எந்தக் கதை யாவது கேள்விப்பட்டது உண்டா? ஆடல், பாடல், கூடல், கும்மாளம் சுருக்கமாகச் சொன்னால் குடி கூத்து இதுதான் கேள்விப்பட்டிருப்பீர்கள். நரை, திரை, வயது, மூப்பு இந்த மாற்றங்கள் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? நாங்கள் மாறுதலை விரும்புகிறோம்.

எங்கள் பழைய பல்லவி எடுபடாது. தெய்வங்களை நம்புவதை விட்டு உழைப்பை மதிக்கக் கற்றுக் கொண்டோம்; நீ இந்திரன், சந்திரன் என்று இந்த இரண்டு பெயர்களைச் சொல்வதில் அலுத்துவிட்டோம்.''

''டி.வி.யில் கந்தபுராணம் போடுகிறோமே அது பற்றி உங்கள் அபிப்பிராயம்?''

''மனுஷனைப் பற்றிப் பேசும் காலம் இது; மனு ஷனைச் சந்திக்கப் பயப்படுகிறீர்கள். மக்களைத் திசை திருப்ப எங்கள் கதைகளைப் போட்டுக் கொண்டு இருக் கிறீர்கள்''.

அதற்குமேல் இவரைச் சற்றுப் பேசவிட்டால் விபரீத மாகி விடும்; அயோத்தியில் கோயிலைக் கட்டத் தேவை இல்லை என்று சொன்னாலும் சொல்லி விடுவார் போல் இருந்தது ஜன கண மன பாடி முடிக்க விரும்பினாள் அந்த மனோகரி.

''இக்கால இளைஞர்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி ஏதாவது?''

''எத்துறையில்'' என்று அவர் திருப்பிக் கேட்டார்.

''அறிவுரை?''

''அறவுரைகள் சொல்லிப் பழகிய எனக்கு அறிவுரை கூறத் தெரியாது. அதற்கு அனுபவம் தேவை; மண் ணுலகில் வாழ்ந்து அவர்கள் பிரச்சனைகளை அறிந்துதான் அறிவுரை கூறமுடியும். அறவுரைகள் கூறக் கீதை, குறள், நீதிநெறி, நல்வழி ஏராளம் உள்ளன. கற்றுத் தர யான் வரவில்லை; கற்றுக் கொள்ளவே வந்திருக்கிறேன்'' என்று கூறி முடித்தார்.

இந்தச் சந்திப்பு புதுமையாக இருந்தது. நாரதரின் தேவ கானம் கேட்பது போல இருந்தது.

நயா டில்லிக்கு நாரதர் பயணம் தொடர்ந்தது.

தான் எப்படிப் பிரதமரைச் சந்திப்பது என்று யோசனை செய்தார். வெளிநாட்டுத் தூதர் என்றால் மரியாதை கிடைக்கும் என்பதால் தன்னை இந்திரன் அனுப்பி வைத்ததாக அறிவித்தார்.

''இந்திரன் மாறவே இல்லையா'' என்று கேட்டார்.

''இந்திராணிதான் ஆட்சி செய்கிறாள். தேவர்கள் பெண்களை மதிக்கத் தொடங்கி விட்டார்கள்; சட்டத் திருத்தம் செய்து விட்டார்கள்''

''இந்திரன்?''

''வேலை இல்லை; வேதனைப் படுகிறான்; ஊழல் வழக்குகளில் சிக்கிக் கொண்டு வெளிவரமுடியாமல் இருக்கிறார்''

''அங்கும் இப்படித்தானா'' என்று கேட்டுவிட்டு அப்புறம்?'' என்றார்.

''எந்தப்புரம்'' என்று கேட்டார்.

''நடன மாதர்கள்?''

''அவர்கள் அதை அகௌரவம் என்று ஆடுவதை விட்டு விட்டுப் படித்துப் பதவிகள் தாங்கி மற்றவர்களை ஆட்டுவிக்கிறார்கள்''

''குடும்பக் கட்டுப்பாடு?''

''மரண பயம் இல்லாமல் இருந்தது. அதைப் புகுத்திய பிறகு எல்லாம் சரியாகி விட்டது''

''புதுவெள்ளம் வருகிறது. பழைய வெள்ளம் மறைகிறது. காலங்கள் மாறுகின்றன. ஞாலத்தைப் போல சப்த ஸ்வரங்களைக் கேட்கிறோம்; புதுமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. பழமை மடிந்து விடுகிறது''

''சத்தியலோகம் வைகுந்தம் கயிலாயம்?''

''அந்த செட்டுகளை எடுத்துப் போட்டுவிட்டார்கள்; மருத நாயகம் படப்பிடிப்பு நடக்கிறது''.

அவருக்கு திக்கென்று தூக்கி வாரிப்போட்டது.

அதற்குமேல் அவருக்கு விசாரிக்க விருப்பம் எழ வில்லை.

''வந்த விஷயம்?''

''வெளிநாட்டு மூலதனம் நிறைய கொண்டு வந்திருக் கிறேன். கடத்தல் படங்களை எடுக்க விரும்புகிறோம்'' என்றார்.

''அனுமதிக்க முடியாது'' என்றார்.

'''நாங்களே இந்த வன்முறைப் படங்களைக் கட்டுப் படுத்த வழி தெரியாமல் வாடுகிறோம். நீர் இவற்றை மேலும் வளர்க்க இடம் தரமுடியாது. பக்திப் படங்கள் வேண்டுமானால் பிடிக்கலாம்'' என்று அறிவுரை தந்தார்.

''எங்கள் இளைஞர்கள் துடித்துக் கொண்டு இருக் கிறார்கள். ஆதிகாலத்தில் இராவணன் சீதையைக் கடத்தி யது முதல் கடத்தல் படம். அப்புறம் இதைப் போலப் படங்கள் வரவில்லை என்று ஏங்குகிறார்கள்''

''இந்தப் படங்களால் கோடிக்கணக்கான டாலர்கள் வந்து குவியும்'' என்றார்.

காந்தியின் படம் பிரதமர் முன்னால் இருந்து அவரைத் தடுத்தது.

''முடியாது'' என்று சொல்லி மறுத்து விட்டார்.

''அசத்தியங்களுக்குப் பாரதம் துணை போகாது'' என்று சொல்லி முடித்தார்.

நாரதர் மிகவும் சோர்வோடு காணப்பட்டார். பாரத நாட்டில் மக்களைத் திசை திருப்பும் கடத்தல் படங்கள் தான் ஓடுகின்றன என்ற அபிப்பிராயத்தில் வந்தவர்; அதற்கு எதிர்ப்பும் இருக்கிறது என்பதை அறிகிறார்.

அன்று இரவு பொழுது போகவில்லை. வெள்ளிக் கிழமை நள்ளிரவு புதிய படம் ஒன்று பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. திருட்டுத்தனமாக வெளியிடப்பட்ட காசெட்டு அது.

'திருப்புமுனை' என்ற தமிழ்ப் படம் காட்டப் பட்டது. பாரத தேசம் முழுவதும் பார்க்கிறார்கள்.

அவருக்கே வியப்பு ஏற்பட்டது.

நாட்டு மக்களின் அல்லல்கள் தீவிரமாகச் சித்திரிக்கப் பட்டு இருந்தன. அரசியல் மோசடிகள், கட்சிகளின் ஆதிக்கம், அதிகாரிகளின் அட்டூழியங்கள்; மக்கள் எதிர்ப்பு, பயங்கரவாதம், சாலை மறியல் போராட்டங்கள் இவற்றைக் காட்டிய படம் அது.

இன்று மக்கள் விழிப்போடுதான் இருக்கிறார்கள். போராட்டங்கள் தொடர்கின்றன என்பதை அச் சித்திரம் காட்டியது.

'காதல்' என்பது அடியோடு இடம் பெறவில்லை. வாழ்க்கையின் மோதல்களைக் காட்டும் அருமையான படம் அது.

பாரதம் விழித்துக் கொண்டது. போராட்டங்கள் தொடரும் என்பதை அறிய முடிந்தது அடுத்த படம்.

''தெருமுனை'' என்பது அந்தப் படத்தின் தலைப்பு; எதையும் ஊர்வலம் செய்துதான் சாதிக்கிறார்கள்; தெரு முனைதான் பாராளுமன்றம் என்று காட்டப்பட்டது.

ஜனநாயகத்தின் கொடுமைதான் ஊழல்களுக்குக் காரணம் என்பதை அறிந்து அச்செய்தியோடு தெய்வ

லோகம் திரும்பிச் சென்றார். வழி அனுப்ப அவர் யாரை யும் எதிர்பார்க்கவில்லை.

வந்ததும் தெரியாது, போனதும் தெரியாது. அவர் யாத்திரை விளம்பர முத்திரையின்றி முடிந்தது.

படம் எடுக்க அனுமதி கிடைக்கவில்லை; மூலதனம் தவறான வழிகளுக்குப் பாரதம் ஏற்காது என்று தெரிந்து கொண்டார்.

தொழில் வளர்ச்சிக்காகத்தான் வெளிநாட்டு மூல தனம் வரவேற்கப்படும் என்ற செய்தி அறிந்து மனநிறை வோடு திரும்பிச் சென்றார்.

# 26

# நவீன தெனாலிராமன்

அவன் அறிவாளி; ஆனால் புத்திசாலி அல்ல; அவன் போக்கும் விமரிசனமும் தனி; மற்றவர்கள் நினைப்பது போல் செய்வது போல் அல்லாமல் புதுமையாக ஏதாவது செய்துவிடுவான்; பேசிவிடுவான்; அதனால் அவனைத் தெனாலிராமன் என்று அழைத்தார்கள். புரியாமல் மண்டு வாக இருக்கும்போது 'மாங்காய் மடையன்' என்றும் சொல்வார்கள்.

“நீ ஒரு மாங்காய் மடையன்” என்பார் அவன் தந்தை.

“அப்படியானால் தேங்காய் மடையன்” யாருப்பா என்று குழைந்து கேட்டான்.

''சீனிவாசன்'' என்றார்.

கதாசிரியனுக்குத் தலைகுனிவு ஏற்பட்டது.

''யார் பா அந்த சீனிவாசன்''

''அவர் ஒரு சிறந்த நடிகர். உன்னைப் போலத்தான் சிரிப்பு ஊட்டும்படி பேசுவார்'' என்றார் அவர்.

''ஓ! தேங்காய் சீனிவாசனைச் சொல்கிறீரா''? என்று சிரித்தான்.

கதாசிரியருக்குக் கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

அவர்கள் பேச்சில் தான் அகப்படவில்லை என்று புரிந்து கொண்டார்.

அப்பா சொல்வதால் கல்லூரிக்குச் சென்று படித்து வந்தான். அவனுக்கு ஒருநல்ல பழக்கம்; தான் அழகாக இல்லாவிட்டாலும் பெண்களைப் பார்ப்பது அவனுக்கு ஒரு 'ஹாப்பியாக' இருந்தது. இவள் எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறாள் என்று சில சமயம் வியப்பான்.

பொதுவாக அழகு அவனுக்கும் பிடிப்பது இல்லை; அழகில்லாத பெண்களைத்தான் அவன் விரும்புவான்; அதற்குக் காரணம் அழகில்லாவிட்டால் அவர்களிடம் குணம் இருக்கும் என்ற முட நம்பிக்கை தான்.

கல்லூரியில் தமிழாசிரியர் சிலப்பதிகாரம் பாடம் நடத்தினார்.

''கண்ணகி விரித்த கூந்தலும் பிடித்த சிலம்பும் கொண்டு தலைவிரி கோலமாகப் பாண்டியன் அவைக்களத்துக்குப் போனாள்'' என்று சொன்னார்.

அவனால் கண்ணகியை மறக்க முடியவில்லை. எதிரே ஒரு கல்லூரிப் பெண் வந்து கொண்டிருந்தாள்; அவள் கொஞ்சம் அழகாக இருந்தாள்; இதுதான் அவன் முதல் தடவையாக அழகிய பெண்ணைப் பார்த்து ரசித்தது; விமரிசித்தது.

அவள் கூந்தல் கண்ணகியைப் போல் விரிந்து கிடந்தது; வாரி முடிக்கவில்லை.

"உங்கள் பெயர் கண்ணகியா?" என்று துணிந்து கேட்டான்.

"சொர்ணமுகி" என்றாள்.

"இதுதான் உங்கள் பெயரா" என்று கேட்டான்.

" பொன்னம்மா என்பது என் பெயர்; அதை மாற்றிக் கொண்டேன். நவ நாகரீகப் பெண்மணி" என்று விளக்கம் தந்தாள்.

"பெண்மணி! நீ என் கண்மணி" என்று சொல்லி விட்டு நீங்கினான்.

அவனை அவள் விடவில்லை; கிடைத்த வாய்ப்பு; "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றாள்.

உடனே இவன் அழத் தொடங்கினான்;

"ஏன் அழறீங்க?" என்று கண்துடைத்தாள்.

"அப்புறம் உன்னைக் கட்டிப்பிடிக்கச் சொல்வாய். அப்புறம் டியூட் ஆடவேண்டும் என்பாய். கடலோரக் கவிதைகள் பாடச்சொல்வாய்" என்றான்.

"சாரி; உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன். உங்களுக்கு நாட்டியம் வராது; பாடவராது என்பது தெரி யாது நான் வேறு ஆளைப் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள்.

மறுபடியும் "பெண்மணி! நீ என் கண்மணி" என்று முணுமுணுத்தான்.

"என்ன மறுபடியும்" என்று மிரட்டினாள்.

"இது சினிமாப்பாட்டு; 'விசு' பாடியது" என்று விளக்கம் தந்தான். அது சரியோ தவறோ அவனுக்குத் தெரியாது.

அவள் சிரித்துக் கொண்டே அழுதாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததிலேயிருந்து அவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை வந்தது. அவனுக்கு அவள் விரித்த கூந்தலும் சிரித்த முகமும் பிடித்து இருந்தன.

''அப்பா! நான் கலியாணம் பண்ணிக்கப் போறேன்'' என்றான்.

''படிடா; கலியாணத்துக்கு என்ன அவசரம்?'' என்று கேட்டார்.

''நீ மட்டும் ஏன் பண்ணிக்கிட்டே'' என்று கேட்டான்.

''உங்க அம்மாவைப் போய்க் கேளு'' என்றார்.

''அம்மா! நீ ஏன்மா அவசரப்பட்டுக் கலியாணம் பண்ணிகிட்டே. எனக்குப் பண்ணி வச்சிட்டு நீ பண்ணிக் கிறதுதானே'' என்று கேட்டான்.

''தப்புதாண்டா'' என்று சொல்லிச் சமாதானப் படுத்தினாள்.

''நீ படிச்சு பாஸ் பண்ணு; உடனே நல்ல பெண்ணா பார்த்துக் கலியாணம் பண்ணி வைக்கிறோம்'' என்றார்கள்.

''பெண்ணை நானே பார்த்து வச்சிருக்கேன். நீங்க கலியாணம் மட்டும் பண்ணிவச்சாப் போதும்'' என்றான்.

''யாருடா அவள்?''

''சொர்ணாமுகி'' என்றான்.

நிலாவைப் பிடிக்க அவன் ஆசைப்பட்டான்

''படிக்காமல் கல்யாணம் பண்ணிவைக்க முடியாது'' என்று சொல்லிவிட்டார்கள்.

விழுந்து விழுந்து படித்தான். படிப்பே ஏறவில்லை.

''மற்றவங்க எல்லாம் ஏன்'மா படிக்கிறாங்க'' என்று கேட்டான்.

''பட்டம் வாங்கிப் பணக்காரப் பெண்ணைக் கலி யாணம் பண்ணிப்பாங்க'' என்றாள்.

''நன்றாகப் படித்தால் உத்தியோகம் கிடைக்கும்; வரதட்சணை நிறைய கிடைக்கும்'' என்று அவனுக்கு விளக்கம் தரப் பட்டது.

''மடப்பசங்க'' என்று முணுமுணுத்தான்.

''எதுக்குடா அப்படி முனகறே?''

''வரதட்சணை கேக்கறாங்களே அதுக்குத்தான்'' என்றான்.

இவன் சரியாகப் படிக்கவில்லை.

''நீ குட்டிச்சுவராத்தான் போகப்போறே'' என்று சபித்தார் அவனுடைய அப்பா.

தான் சபித்தால் அது பலிக்காது என்பது அவருக்குத் தெரியும்.

டி.வி.யிலே அவன் போட்டோ வந்தது.

''ஏனுங்க இவன் போட்டோ?'' என்று பெற்றுக் கடன் பட்டவள் கேட்டாள்.

''காணாமல் போய்விட்டான்'' என்று நண்பர்களுக்குச் சொன்னார் அவர்.

''போய் முதலிலே அவனைத் தேடுங்கோ'' என்று அவன் அம்மா நச்சரித்தாள்.

''இந்தத் குட்டிச்சுவரைப் போய்த் தேடறேன்'' என்று போனார்.

அவனைக் கண்டுபிடித்தார்.

''என்னைக் குட்டிச்சுவர் என்று சொல்லிவிட்டு ஏன் என் பின்னாலேயே வந்தீங்க'' என்று கேட்டான்.

''கழுதைக்குத் தெரியும் கர்ப்பூர வாசனை'' என்றார்.

''இனிமேல் அப்படிச் சொல்லாதீங்க அப்பா! நான் குட்டிச்சுவர் என்றால் பொறுத்துக் கொள்வேன்; நீங்க கழுதையாகி விடுவிங்க'' என்று புத்தி சாலித்தனமாகப் பேசினான்.

அதிலிருந்து அவனை யோசித்துதான் திட்டுவார்

''அட முண்டம்!'' என்றார்.

தனக்கு அறிவு இருக்கிறது என்ற காட்டுவது போல அவர் முன் வந்து தலைகாட்டினான்.

''நீ தறுதலை'' என்றார்; அவன் 'மறுதலை' ஒன்றும் சொல்லவில்லை.

எதிர்விட்டில் ஒரே கூட்டமாக இருந்தது.

''ஏன்'பா இவ்வளவு கூட்டம்?'' என்று கேட்டான்.

''முதல் தேதி ஆயிற்றே; கடன்காரர்கள் வந்திருக் கிறார்கள்'' என்றார்.

அதே வீட்டில் சில நாட்கள் கழித்துக் கூட்டம் சேர்ந் திருந்தது.

''ஏன்'பா இன்று முதல் தேதியா?'' என்று கேட் டான்.

''அவருக்குக் கடைசி தேதி'' என்று விளக்கம் தந்தார்.

இவன் ஒரு கலியாணவீட்டுக்குப் போயிருந்தான்;

இவனுக்கு ரசம் பரிமாறப் பட்டது.

''கொஞ்சம் கையைப் பிடியுங்க'' என்றாள் ரசம்பரி மாறிய இளமங்கை ஒருத்தி.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாமல், சட் டென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

அவள் குய்யோ முறையோ என்று கத்தினாள்.

''கையைப் பிடிச்சிட்டானே'' என்று கத்தினாள்.

உடனே கூட்டம் கூடியது.

"ஏன்'டா அவள் கையைப் பிடிச்சு இழுத்தே?" என்று கேட்டார்கள்.

"அவள்தான் கையைப் பிடிக்கச் சொன்னாள்" என்றான்.

"கணவன்தான் ஒரு பெண்ணின் கையைப் பிடிக்க வேண்டும்" என்று சொன்னார்கள்.

"அப்படியானால் அவளை எனக்குக் கட்டி வையுங்கள்; தவறுதலாக அவள் கையைப் பிடித்து விட்டேன்" என்றான்.

"அவள் மணமானவள்" என்று சொன்னார்கள்.

"சீக்கிரம் புருஷன் கிட்டே சொல்லி டைவர்ஸ் பண்ணிக்கச் சொல்லுங்க எனக்காக" என்றான்.

"எதுக்கு?"

"நான் அவளுக்குப் புது புருஷன் ஆவதற்கு" என்றான்.

"அவள் கணவன் வரட்டும் சொல்கிறோம்" என்றார்கள்; அவன் ஒரு முரடன் என்று யாரோ சொன்னார்கள் அதற்குப் பிறகு அவளை மறந்து விட்டான்.

அவன் தாத்தாவுக்கு அவன் மீது ரொம்பவும் பிரியம். "தாத்தா! இந்தப் பாட்டிக்கு ரொம்பவும் வயசாகி விட்டது. நீ வேறு ஒரு கலியாணம் பண்ணிக்கோ" என்று கிண்டல் செய்தான்.

"வீடு போ போ என்குது காடு வா வா என்குது" என்றாள் பாட்டி.

"பாட்டி என்ன சொல்கிறார்?"

"நீ போய்வா; என்கிறாள்;" என்றார் அந்தப் பெரியவர்.

“உனக்குக் கலியாணம் பண்ணி வச்சிட்டுத் தான் கண்ணை மூடப் போறேன்” என்றார் பாசத்தோடு.

“அது வரையும் எப்படித் தாத்தா கண்ணைத் திறந்து வச்சிக்க முடியும் உன்னால்?” என்று கேட்டான்.

“சீ மடையா! நான் அதுவரை சாகமாட்டேன் என்று சொல்ல வந்தேன்” என்றார்.

“நான் கலியாணமே பண்ணிக்க மாட்டேன்” என்றான்.

“எதுக்கடா” என்று கேட்டார்.

“நீ செத்திடுவே அதுக்குத்தான்” என்று பிரியமாகப் பேசினான்

“தாத்தா! படிப்பு முக்கியமா? கலியாணம் முக்கியமா?” என்று கேட்டான்.

“படிப்புதான்” என்றார் தாத்தா.

“கலியாணம் தான்” என்றான் அவன்.

“எப்படிடா?” என்று கேட்டார்.

“படிப்புகூட இல்லாமல் இருக்க முடியும்; யாராவது கலியாணம் இல்லாமல் இருந்திருக்காங்களா” என்று கேட்டான்.

“நீ புத்திசாலிடா” என்றார் அவர்.

இவனை அவன் தாயார் பால் வாங்கி வரச் சொன்னார்.

ஆண்பாலா பெண்பாலா என்று கேட்டான்.

‘ஆவின்’ என்றாள் அந்த அம்மையார்.

“ஆ என்றால் பசு என்பது பொருள்; ஆவின் பால் என்றால் பசுவின் பால்” என்பது அவள் தந்த விளக்கம்.

“எங்க ஆசிரியர் இலக்கணம் படித்தவர்; ஆதலால் பால் ஐந்து வகைப்படும் என்று சொன்னாரம்மா” என்றான்.

''ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும் என்று சொன்னா ரம்மா'' என்றான் அவன்.

''இது ஆவின்பால்'' போய் வாங்கிவா; என்றாள்.

கடைசியிலே அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள். இவன் பணம், அழகு, படிப்பு எதுவும் பார்க்க வில்லை. கல்யாணத்தைத்தான் பார்த்தான். தன் னைவிரும்பக் கூடியவள் இருந்தால் போதும் என்று எதிர் பார்த்தான்.

''அழகில்லாத ஒரு பெண் தேவை'' என்று விளம் பரம் தந்தான்.

ஒரு பெண் கூட விண்ணப்பம் போடவில்லை.

''சுமாரான அழகு இருந்தால் போதும்'' என்று விளம்பரப்படுத்திப் பார்த்தான்.

அதற்கும் யாரும் வரவில்லை.

''மிகவும் அழகாக இருக்க வேண்டும்'' என்று விளம் பரப்படுத்தி இருந்தான்; ஐந்நூறுக்கு மேல் கடிதங்கள் வந்து குவிந்தன. மிகவும் மோசமான ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்தான்.

'''அழகில்லை; அதனால்தான் உன்னை மணக் கிறேன்'' என்றான்.

''அதனால்தான் நானும் உங்களை ஒப்புக் கொண் டேன்'' என்றாள் அவள்.

அப்பா வைத்து விட்டுப்போன சொத்து அவ னுக்குக் கை கொடுத்தது. கொஞ்சம் வசதியாகவே வாழ முடிந்தது.

''வண்டலூரில் மனை சரசமாகக் கிடைக்கிறதாம்'' தேவி படித்து உரைத்தாள். அது அவன் மனைவியின் பெயர். அதனால் அவளை அவன் தெய்வமாக மதித்தான்.

''வீடு கட்டப் பணம் வேண்டுமே''

''பாங்கியில் கடன் வாங்கிக் கொள்ளலாமே''

''கட்டிய வீட்டுக்கு யார் அங்கே குடி வருவார்கள்?''

''யோசிக்க வேண்டிய விஷயம்தான்''

அதனால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

''வர்ர அதிருஷ்டம் எங்கிருந்தாலும் வரும்'' என்று சொல்வார்கள். அது போலத்தான் முகமூடிக் கொள்ளை யர்களும்.

''தட்டுங்கள் திறக்கப்படும்'' என்பது கிறித்துவ வேதவாக்கு:

''உடையுங்கள் திறக்கப்படும்'' என்பது புதுதாக்கு.

முகமூடிக் கொள்ளையர் உள்ளே நுழைந்தனர்.

இவனுக்கு ஒரு வியப்பு ஏற்பட்டது. தன்னை அவர் கள் மதித்து வந்தார்கள் என்பதால்.

தேவி நகைகளை எல்லாம் கழற்றி வைத்தாள்.

அவர்களைப்பார்த்துக் கேட்டான்.

''நீங்கள் ஏன் முகமூடி அணிகிறீர்கள்''? என்றான்.

''வருமான வரி அதிகாரிகள் என்று தவறாக நினைத் துக் கொள்ளக் கூடாது; உடனே பதுக்கி விடுவீர்கள். அதனால்தான்'' என்றான்.

''எப்படி நீங்கள் கொள்ளையடிக்கும் பொருளைக் கணக்குக் காட்டாமல் பாதுகாக்க முடிகிறது?'' என்று கேட்டான்.

''எங்களிடம் கொடுத்து விடு. நாங்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்வோம்'' என்று சொன்னார்கள்.

சனியன் விட்டது என்று அப்பா சேர்த்து வைத் திருந்த கருப்புப் பணத்தை வாரிக் கொடுத்து விட்டான்.

''நான் கேட்கும்போது கொடுங்கள்'' என்றான்.

''நகைகளையும் கொடுங்கள்'' என்று மருட்டினார் கள்.

''நீங்களே எடுத்துக் கொள்ளலாம்'' என்று மரி யாதையாகச் சொன்னான். சில விருந்துகளில் பரிமாறுவது இல்லை. அவர்களே விரும்புவதை எடுத்துக் கொள்கிறார் கள்; அதை இவன் பார்த்திருக்கிறான்.

''பத்திரமாக எங்கள் லாக்கரில் இருக்கும்'' என்றார் கள்.

''தேவையில்லை; நகையில்லாமலே என் தேவி அழகு குறைந்தவளாக இருப்பாள்'' என்று பதில் சொன் னான்.

அதிருஷ்டம் தேடி வருதோ இல்லையோ துர திருஷ்டம் தேடி வரும் என்பதையும் கண்டு கொண்டான்.

''யாரவது என்னைத் தேடிக் கொண்டு வந்தால் இல்லை என்று சொல்லி விடு'' என்று ஆபீஸ் டைப்பிஸ் டிடம் சொல்லி வைத்தான் ஐந்து மணிக்கு மேலே.

''நம்ப மாட்டார்களே'' என்றாள்.

''முதலில் நீ இடத்தைக் காலிப் பண்ணு நம்புவார் கள்'' என்றான்.

ஒரு விபச்சார விடுதிக்குப் போனான். மாறு தலுக்காக.

''எல்'' போர்டு போட்டிருந்தது.

தைரியம் இல்லை உள்ளே போக.

'வாங்க' என்று வரவேற்றாள்.

''எல்'' போர்டு; எனக்கு பயமாக இருக்கிறது'' என்று திரும்பி வந்து விட்டான்.

''எல்'' போர்டு போட்ட காரில் ஏறமாட்டான். அதே பழக்கம் இவனைத் தடுத்துக் காப்பாற்றியது.

இதே போல மற்றொரு சம்பவம். கொஞ்சம் பாழடைந்த வீடு; ஒதுக்குப்புறமாகவும் இருந்தது.

விளக்கு சிகப்பாக எரிந்து கொண்டிருந்தது.

''டாக்டர் வீடா?'' என்று கேட்டான்.

''விலை மகள் வீடு'' என்றாள்.

''சிகப்பு விளக்கு எரிகிறதே! அதனால்தான் கேட்டேன்'' என்றான்.

''இரண்டு இடங்களும் அபாயம் தான்; அதை அறிவிப்பதற்கு; உங்களை வரவேற்கிறேன்'' என்றாள்.

சிரித்தாள்; ''வலது காலை வைத்து வரலாம்'' என்றாள். அவள் தொழில் நடத்துபவள் என்று தெரிந்து கொண்டான்.

இவன் இடது சாரிக் கட்சிக்காரன்; அதனால் இடது காலை வைத்து உள்ளே நுழைந்தான்.

''இங்கே போலீஸ்காரர்?''

''வரமாட்டார்கள்''

''வேறு யாராவது?''

''உங்களைத் தவிர வேறு யாரும் இங்கே வர மாட்டார்கள்'' என்றாள் அழுத்தமாக.

அதுமுதல் அந்த ஆசை அவனை விட்டது.

எதிர்வீட்டில் ஏந்திழையாள் ஒருத்தி குடி வந்திருந்தாள். கல்லூரிப் பழக்கம் கடைசி வரை இவனை விடவில்லை. அவளை அவ்வப்பொழுது பார்த்துக் கொண்டிருப்பான். தேவிக்கு சந்தேகம் வந்தது.

அவளுக்கு இவளே அவன் பெயர் போட்டு ஒரு காதல் கடிதம் எழுதினாள். ''சாயங்காலம் ஐந்து மணிக்குத் தயாராக இரு. சினிமாவுக்குப் போகலாம்'' என்று எழுதி அனுப்பினாள் வேலைக்காரி மூலமாக.

இதை வந்தவுடன் அவனிடம் சொன்னாள்.

''என்ன ஆச்சு'' என்று கேட்டான்.

''அதோ ஆள் தயாராக இருக்கிறாள் ஆடை அலங்காரத்தோடு'' என்றாள்.

''ஏன் இப்படி எழுதினே?''

''உண்மையைத் தெரிந்து கொள்ள''

அதுமுதல் அவன் எதிர் வீட்டுப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுப்பது இல்லை.

இவன் தேவியை அடங்கி நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்தான்.

''கணவனே கண்கண்ட தெய்வம்'' என்று ஒரு வாசகம் எழுதி மாட்டி இருந்தான்.

பார்த்தாள்; இவனுக்கு ஒரு பாடம் கற்பித்தாள்.

வடை பாயசத்தோடு உணவு படைத்தாள். இவன் படம் முன்னால் வைத்துக் கர்ப்பூரம் காட்டினாள்.

இலை போட்டுக் கொண்டு அவள் மட்டும் சாப்பிட்டாள்.

''பசிக்குது'' என்று பரிதாபத்தோடு கேட்டான்.

''தெய்வம் சாப்பிடாது; வழிபாடு போதும்'' என்றாள்.

அந்த வாசகத்தை அந்த இடத்திலிருந்து நீக்கி விட்டாள்.

''உட்காருங்கள் சாப்பிடுங்கள்'' என்றாள். அவனைக் கணவனாக மதித்து நடத்தினாள்.

அவன் சிகரெட்டு பிடித்தான்; அளவுக்கு அதிகமாகப் பிடித்தான்; அவள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்; அவன் கேட்கவில்லை.

''சிகரெட்டு பிடிக்காதீர்'' என்று சொன்னாள்.

"Cancer வரும் என்று சொல்லப் போறே! அவ்வளவு தானே"

‘‘நாற்றம் வருது; அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; முகத்தை அணைக்க வேண்டாம்’’ என்று கேட்டுக் கொண்டாள்.

இந்தப் பிரச்சாரம் பலம் வாய்ந்ததாக இருந்தது.

‘‘சிகிரெட் பிடிக்காதீர்; மனைவி விரும்ப மாட்டாள்’’ என்ற பிரச்சாரம் பயன் உடையது என்பதை உணரத் தொடங்கினான்.

அன்றிலிருந்து சிகரெட்டுப் பிடிக்கும் பழக்கத்தை விட்டு விட்டான். அடியோடு என்பதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

‘‘உனக்கு தேவி என்று யார் பெயர் வைத்தது?’’

‘‘எங்கப்பன் மூக்கையன் தான் வைச்சாங்க’’

‘‘மூ தேவி’’ என்று எழுத வேண்டி இருக்கிறதே’’

‘‘அப்படியானால் என் பெயரை மாற்றிக் கொள் கிறேன்’’.

‘‘உன் அப்பனை மாற்றிக் கொள்; அது எளிது’’ என் றான்.

கலியாண அழைப்பிதழ் வந்தது.

‘‘மொழி விலக்கப்படவில்லை’’ என்று கொட்டை எழுத்தில் எழுதியிருந்தார்கள்.

அவன் அந்தக் கலியாணத்துக்குப் போகவில்லை.

அவனுக்குப் பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது.

Teen age நிகழ்ச்சி; நீச்சல் குளத்தில் நேரிழையாள் ஒருத்தி அடித்துச் செல்லப்பட்டாள்; அப்போது அவன் ஒரே பாய்ச்சலாகச் சென்று அவளைக் கரை ஏற்றினான்.

முதல் உதவி செய்தான். கை, கால்களைப் பிடித்து விட்டான். மின்சாரம் பாய்ந்தது. அதாவது அவள் தன்னை விரும்பிக் காதலிப்பாள் என்று எதிர்பார்த்தான்.

சினிமாவில் பார்ப்பதுபோல் "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்றான்.

அவள் ஈரப்புடவையை மாற்றிக் கொண்டு வேறு புடவை உடுத்திக் கொண்டு வந்து நின்றாள்.

அதற்குள் அவன் காதல் உணர்வு உலர்ந்து காய்ந்து விட்டது.

அவள் அவனுக்குச் சகோதரிபோல் காணப் பட்டாள்.

"நன்றி" என்று இவன் சொன்னான்.

"உனக்கு என்ன பஸ் ஸ்டான்டில் வேலை?"

"பிடிச்சுட்டு நிற்கிறதுக்கு ஒரு போஸ்டு இருக்குதே அவ்வளவுதான். வேற ஒன்றும் இல்லை".

வசதி உடையவன்; அதற்கு விளம்பரம் அவன் வாங்கி வைத்திருந்த புதிய கார்.

தேவி கார் ஓட்டக் கற்றுக் கொண்டிருந்தாள்.

அவசரப்பட்டு அவளை நம்பி வெளியூருக்குப் போனான்; பிரேக் அவளைக் கைவிட்டது.

"என்ன செய்வது" என்று கேட்டாள்.

"பேசாமல் புளியமரத்தில் மோதி விடு" என்றான்.

"எதற்கு?"

"அதுக்கு இன்சூரன்சு அதிகம் கொடுக்க வேண்டியிருக்காது" என்றான்.

சமாளித்துக் கொண்டாள்; புளியமரம் தப்பியது; காரும் தப்பியது; இவர்கள் உயிரும் தப்பியது.

"கார் ஷெட்டை இடித்துக்கட்ட வேண்டும்" என்றான்.

''இன்னும் கொஞ்சம் இடியட்டும்; நான் முழுமை யாகக் கற்றுக் கொள்ளவில்லை'' என்றாள்.

''சரி மொத்தமாக இடித்து விடு; இடிக்கும் கூலி மிச்ச மாகும்'' என்றான்.

அன்புள்ள தேவிக்கு என்று கடிதம் எழுதினான். இரண்டு நாள் தள்ளித் தேதியைப் போட்டு வைத்தான்.

''ஏனுங்க தேதி தள்ளிப் போட்டீங்க?''

''படிக்கும்போது நேரில் அப்பொழுதே பேசுவது போல இருக்க வேண்டுமே அதற்குத்தான். தபாலில் வந்து சேர இரண்டு நாள் ஆகுமே'' என்றான்.

''நான் ஊருக்குப் போனேனே எப்படித் தனியாக இருந்தீர்கள்?''

''வேலைக்காரி இங்கே தனியாக இருந்தாள்; அவளுக்குத் துணையாக நான் இருந்தேன்'' என்றான்.

''நீங்க என்னை நினைக்கிறது உண்டா?''

''உன் நினைவைத் தவிர வேறு எதுவும் இருப்பது இல்லை. எப்போ திரும்பி வந்துவிடுவியோ என்ற பயம் இருந்தது.''

''ஏனுங்க lipstick- கை காணோம்''

''என் உபயோகத்துக்கு எடுத்து வச்சிருக்கேன்''

''உங்களுக்கு எதுக்கு?''

''யார் பூசிக் கொண்டாலும் ஒன்னுதானே. அத னால் தான்''.

''ஏனுங்க நம்ம கலியாண போட்டோவைக் காணோம்.''

''எடுத்து வச்சிட்டேன்''

''இவள்தான் உங்க மனைவியா என்று துக்கம் விசாரிக்கிறாங்க''

''ஏன்? எதுக்கு? எனக்கு என்ன குறை?''

"உனக்கு ஒன்னும் குறையில்லை; எனக்குத்தான். நான் உனக்கு match இல்லையாம்; நீ என்னைவிட படத்திலே அழகா இருக்கிறே".

"அப்படிச் சொல்லுங்க"

"ஸ்கூட்டரில் பின்னாலே கொஞ்சம் உட்கார்ரீங் களா"

"எதுக்கு?"

"வழியிலே யாரும் lift கேட்காமல் இருக்க"

"சதா உழைக்கிறேன். கூடமாட ஏதாவது வேலை செய்யக் கூடாதா?' என்று கேட்டாள்.

"என்ன செய்யச் சொல்றே"

"துணி துவைக்கிறது; புடவையை அலசிப் போட றது; மாவாட்டறது; வீடு பெருக்கறது. இந்த மாதிரி சில்லறை வேலைகளை மட்டும் செய்யலாமே?"

"எதிர் வீட்டுக்காரி உங்களுக்கு ஒரு லெட்டர் எழுதியிருக்கா"

"என்ன எழுதியிருக்கா?"

"ஒரே பொய்; நீங்க மன்மதனாம்; மதன காமராஜ னாம்"

புடவைக் கடை ஒன்றுக்கு அவன் அவளோடு போனான்.

பொம்மைக்குப் புடவை சுற்றி இருந்தது; கவர்ச்சி கரமாக இருந்தது.

"என்ன அதையே பார்க்கிறீங்க?"

"அசல் பொம்பளை மாதிரி இருக்கே! அதுதான் பார்க்கிறேன்" என்றான்.

சிறிது நேரத்தில் சில அழகிகள் அசைந்து நடந்து உள்ளே நுழைந்தனர்.

"என்ன பார்க்கிறீங்க" என்று கேட்டாள்.

''பொம்மைகள் அசைகிறதே அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''இன்னிக்கு என்ன டிபன்?''

''பூரி உருளைக் கிழங்கு; வடை''

''அதெல்லாம் வேண்டாம்; வெறும் தயிர் சாதம் போதும்''.

''ஏன்?''

''நான் சாப்பிட; அதெல்லாம் வச்சால் டிபன் பாக்ஸ் தான் மிச்சமிருக்கும். எல்லாம் காலி பண்ணி வச்சிடுவாங்க ஆபீசில்.''

''விரைவு பஸ் வருது ஜாக்கிரதை''.

''ஏன் பயப்படறீங்க''

''அவங்களாலே accident செய்யாமல் ஓட்ட முடியாதாம்''

''பேசாமல் இருக்கிறீங்களா?''

''எப்படி முடியும்?''

பேசாமல் இருப்பது எப்படி என்பதைப் பற்றி மூன்று மணி நேரம் மூச்சு விடாமல் பிரசங்கம் செய்து முடித்தாள்.

இவன் ஒருமுறை பஸ்சில் பயணம் செய்தான்.

''எதுவரை'' என்று கண்டக்டர் கேட்டார்.

''கடைசி வரை''

''உங்கள் மனைவி?''

''வீடு வரை'' என்றான்.

ஒருநாள் கோபமாகப் பேசினாள்.

''கொஞ்டம் ரேடியோவை நிறுத்த முடியுமா?''

''எத்தனை மாசமா சொல்றேன். காஞ்சிபுரம் புடவை வாங்கி வாங்க என்று. அதிலே கொலஸ்டால் இல்லை.

காரம் மணம் இல்லை; உடம்புக்குக் கெடுதி இல்லை. இதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம். போய் வாங்கி வாங்கன்னா வாங்கி வாங்க'' என்றாள்.

மறுபடியும் ரேடியோவை 'ஆன்' பண்ணினான். அதுவும் அதே மாதிரி ஒலித்தது.

தேவிக்கு TVஇல் பேச வேண்டும் என்று ஆசை.

''சிந்தனைக் கதிர்'' இதற்கு அழைப்பு வந்தது. இதற்கு எந்த டெஸ்டும் இல்லை; அதனால் சான்சு கிடைத்தது.

''கணவன்மார்கள் மடையனாக இருந்தாலும் சரி; அடி முட்டாளாகவும் இருக்கலாம். எப்படிப்பட்டவரையும் நாம் வழிக்குக் கொண்டுவர முடியும். சமையல் வேலை தெரியாவிட்டாலும் கற்றுக் கொடுத்து விடலாம். கணவன் முட்டாளாக இருந்தால்தான் பெண் அதிகாரம் செலுத்த முடியும். எந்த வகையிலும் ஆண் நம்மைவிட உயர்வாக இருக்கக் கூடாது'' என்று தன் சுய சிந்தனையோடு பேசினாள்.

அவன் நண்பர்கள் அவனைப் பாராட்டினார்கள்.

''நான் தான் எழுதிக் கொடுத்தேன். இல்லாவிட்டால் இதைவிட அதிகமாகப் பேசியிருப்பாள்'' என்றான்.

''நான் டான்சு கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

''எதுக்கு?''

''உடம்புக்கு நல்ல பயிற்சி'' என்றாள்.

''அதைவிட கராத்தே கத்துக்கோ; தற்காப்புக்கும் பயன்படும்'' என்றான்.

''ரொம்ப நாளா ஒண்ணு சொல்லலாம்னு நினைக்கிறேன். உன்னை வரவர எனக்குப் பிடிக்கலை'' என்றாள்.

''நானும் நெனைச்சேன். ஆனால் சொல்லமாட்டேன். இதுதான் நம்ம ரெண்டு பேருக்கும் உள்ள வித்தியாசம்'' என்றாள்.

"T.V.-யில் பாரதம் பார்க்கிறீர்களே கர்னனைப் பற்றி என்ன நினைக்கிறீங்க".

''கொடுத்துக் கொடுத்துத் தேய்ந்தான் என்னைப் போல''

''எப்படிங்க?'

''அவன் பிறருக்கு; நான் உனக்கு''

''விசுவாமித்திரனை மேனகை எப்படிங்க விரும்பினாள்?''

''ஏன் தாடி, மீசை, சடைமுடி, அது அந்தக் காலத்து fashion''

''நேற்று இருந்தவங்க இன்னைக்கு இல்லை; நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''நூற்றுக்கு நூறு உண்மை; நேற்று பாக்கட்டில் நூறு ரூபாய் வச்சிருந்தேன்; இன்று இல்லை'' என்றான்.

''மற்றொரு சான்சு டி.வி.யிலே கிடைக்குமா? உங்களுக்கு யாராவது தெரியுமா?''

''தெரியுமே; சோபனா ரவி, செந்தமிழரசு, பாத்திமா இன்னும் நிறைய பேர்''

''எப்படிங்க''

''தினம் நம்ம டி.வி.யிலே வர்ராங்களே''

''ஏங்க இந்த நர்சே வேணும் என்கிறீங்க''

''அவள்தான் கொஞ்சம் அழகாக இருக்கா''

''உங்களை இங்கே விட்டு வச்சது தப்பா போச்சு; பேசாம வீட்டுக்கு வந்து சேருங்க''

''அந்த அழகிய முகத்தை வீட்டிலே பார்க்க முடியாதே''

பொன்னகையோடு வந்தால் இங்கு இருக்கலாம் என்று சண்டை போட்டுத் தாய் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்; அவள் இரண்டு மாதம் அங்குத் தங்கிஇருந்தாள்.

பிரிவு அவர்களை வாட்டியது; அவன் வீட்டுக்குத் திரும்பிவர அழைத்தான்.

''நகை இல்லை; வரமுடியாது'' என்றாள்.

''புன்னகையே போதும்; புறப்பட்டு வா'' என்றான்.

கட்டிய புடவையோடு வந்து சேர்ந்தாள்.

''அதுவும் தேவையில்லை; நீ இருந்தால் போதும்'' என்றான்.

சினிமாவுக்குப் போனார்கள். விளக்கு அணைக்கப் பட்டது.

தேவியின் கால் மிதிபட்டது.

''விட்டுக்கு வாங்க சொல்றேன்'' என்றாள்.

''இங்கேதான் சொல்லேன்''

''சொல்ல முடியாது''

வீட்டுக்குப் போனார்கள்.

''சும்மா இருக்கக் கூடாதா? என் காலை அங்கு வந்து மிதிக்கணுமா?''

''சாரி, நான் பக்கத்திலே அழகா ஒருத்தி இருந்தாளே அவள் கால்னு நினைச்சி மிதிச்சேன், மன்னிச்சிடு''

''சரி, உங்க கால் இல்லை அது. அந்தப் பெண்ணின் கணவன் கால்; அது இப்பத்தான் தெரியுது''.

''நாயகன் படத்தைப் பார்த்தாயா?''

''விசேஷம்?''

''நீ நல்லவரா கெட்டவரா என்று பேரன் கேட்கிறான். அவரால் பதில் சொல்ல முடியவில்லை''

''சுட்டுத் தள்ளி விட்டார்களே அதுதான் முடிவு''

''தீமை அழியும் என்பது சொல்லாமல் சொன்ன பதில்''.

''எங்கேயாவது ஓடிப் போகலாமா?''

''எதுக்கு?''

''அப்படிப் பேசுவதுதானே காதல் உரையாடல்''

''முதல் மரியாதை படத்து வெற்றிக்குக் காரணம்''

''ராதாவின் நடை உடை பாவனைதான்''

''இல்லை அவள் உடை''

''சிவாஜி?''

''காதல் பெண்ணின் கண்வீச்சில் கல்லைச் சுமக்கிறார்''.

''நீங்க ?''

''நீ பெற்ற குழந்தைகளைச் சுமக்கிறேன்''

''ஏனுங்க ஆபீசிலே இருந்து வரும்போது கைவீசிகிட்டு வர்றீங்களே உங்களுக்கு வெக்கமா இல்லையா?''

''எதுக்கு?''

''கையிலே அழகா ஒரு முழம் பூ இருந்தால் எவ்வளவு அழகா இருக்கும்?''

''இதுவரை பூ தலையிலே இருந்தால் அழகா இருக்கும்னு நினைச்சேன். இப்பத்தான் தெரியுது அது கையிலே இருந்தாலும் அழகா இருக்கும் என்று''

''ஆபிசிலே டைப்பிஸ்டு ராஜினமா செய்துட்டாள்''

''ஏன் அவளை என்ன சொன்னீங்க''

''ஹல்லோன்னு சொல்லலையாம்; அதனாலே அவளுக்குக் கோபம்''

''சொல்லித் தொலையறது தானே''!

‘‘இனிமேல் சொல்றேன்; நீ எதாவது சொல்லு வியேன்னு பயந்தேன்!’’

‘‘கடற்கரை பீச்சுக்குப் போகலாமா?’’

‘‘எதுக்கு?’’

‘‘மலரும் நினைவுகள் பேசுவதற்கு’’

‘‘இதோ பாருங்க ஒரு சோப்பு வாங்கினால் ஒரு டி.வி. இனாம்.’’

‘‘சோப்பு விலை?’’

‘‘பத்தாயிரம்’’

‘‘டி.வி. மட்டும் வாங்கிக்கலாம்; போதும்’’

‘‘ஏன் உங்க நண்பர் காஃபி சாப்பிடாமல் போயிட் டார்’’

‘‘எனக்கு நீ போட்டு வைத்த காஃபின்னு சொன் னேன்; அவ்வளவுதான்’’

‘‘ஏன் தனியா சிரிக்கிறீங்க’’

‘‘உன்னைப் பார்த்துச்சிரிக்க முடியாததால் தான்’’

‘‘ஏதாவது இப்படி அனுபவம்?’’

‘‘அதை ஏன் கேக்கறே ; ஒரு பெண்ணைப் பார்த்துச் சிரித்தேன்; அவள் என் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள்; அதனால்தான்’’

‘‘fat சாப்பிடாதீங்க கொலஸ்ட்ரால் வரும்’’

‘‘சர்க்கரை போட்டுக்காதீங்க டையாபிட்டீஸ் வரும்’’

‘‘உப்பு சேர்த்துக்காதீங்க நமைச்சல் வரும்’’

‘‘பின் என்ன தான் சாப்பிடச் சொல்றே?

‘‘போட்டதைச் சாப்பிடுங்க எதிர் பேசாமல்’’

‘‘எப்ப பார்த்தாலும் பணத்தையே எண்ணுகிறீங் களே ஏன்?’’

"வேறு எண்ணத் தெரியாததால், அது ஒன்றுதான் எண்ணிப்பார்க்க முடிகிறது."

"பழகப் பழகப் பாலும் புளிக்கும்; இதற்கு உதா ரணம் சொல்ல முடியுமா?"

"எந்தப் பாலைக் குறிக்கிறீங்க; அதைச் செல்லுங்கள் முதலில்"

நண்பன் ஒருவன் இவனைத் தேடிக் கொண்டு வந்தான்.

"எங்கேடா இருந்தே இதுவரை"

"உள்ளே இருந்தேன். இப்பொழுதுதான் வெள யே வந்தேன்"

"எத்தனை மாசம்"

"நானா என் மனைவியா?"

"வர்ரியா வெளியே போகலாம்" - நண்பர்கள்.

"அனுமதி கேக்கணும்"

"எதுக்கு?"

"கட்டிய மனைவி அவள் உத்தரவு இல்லாமல் வீட்டைவிட்டு வெளியே எப்படிப் போக முடியும்?"

"கட்டிய மனைவி லட்சணமாக இருக்கா உனக்கு என்னடா குறைவு?

"பார்க்கவா பேசவா?

"பார்க்க"

"அப்படி ஏமாந்தவன் நான்."

"ஏண்டா எலியும் பூனையுமா சண்டை போட்டுக் கீறிங்க"

"ஒருவரை ஒருவர் விழுங்க முடியாததால் தான்"

"ஊரு கோடியிலே என்னடா ஒரே கும்பல்?"

"யாரோ செத்துக் கிடக்கிறான்"

"போய்ப் பார்க்கறது தானே"

"என் மனைவி வீட்டிலே இருக்கிறாள். தேவை இல்லை."

"கூட்டிப் பெருக்க ஒரு புது ஆளைப் பாருங்க"

"தேவை இல்லை; Calculator இருக்குது அது போதும்"

"அது இல்லேங்க ஆள்"

"அவளும் தான்; நேரம் கணக்குப் பார்த்து வேலை செய்வாள். அவளைத்தான் சொன்னேன்."

"அப்பா அவள் என் பாண்டை போட்டுகிட்டு காலேஜிக்குப் போயிட்டாள்"

"இன்னைக்கு ஒரு நாள் அட்ஜெஸ்டு பண்ணிக் கோடா; பிறகு பார்க்கலாம்"

"எப்படிப்பா"

"அவள் சேலை ஏதாவது இருக்கும் பார்த்து சுத்திக்கோ."

"வயசு வந்த பையன் வீட்டோடு இருக்கிறான். அவனை வச்சிகிட்டுப் பெண்ணுக்கு என்ன அவசரம் கலியாணத்துக்கு?"

"அவள் நாலு இடத்துக்குப் போறவள்; ஆபீசிலே உத்தியோகம் பண்றாள். எப்படி எப்படி இருக்குமோ முன் கூட்டிக் கலியாணம் செய்யறதுதான் நல்லது"

"அப்பா! தாத்தா மண்டையைப் போட்டுட்டாரு"

"என்னடா அவலட்சணமா பேசறே"

"கீழே விழுந்து மண்டை உடைஞ்சி போச்சு அது தான் சொல்றேன்"

"பையனை ஏன்டான்னு ஒரு பேச்சுக் கேட்க மாட்டேன் என்கிறீர்களே"

''அவன் திருப்பிக் கேட்டால் என்ன செய்வது; அது தான் பார்க்கிறேன்''

''இவனை யாருக்காவது சீக்கிரம் கட்டித் தொலை யுங்கோப்பா''

''ஏன் நீ அவசரப்படறே''

''எனக்கு வயசு ஆவுதே அதனால் தான்''

''இவள் யார் என்னைக் கண்டிக்கிறதுக்கு?''

''கூடப்பிறந்தவள்; நீ கெட்டுப் போகக் கூடாது என்று பார்க்கிறாள். அப்புறம் யார்ரா வந்து உன்னைக் கட்டிக்குவாள்? அதுதான் அவள் கவலை!''

''அப்பா காலேஜிலே சேர்றதுக்கு டொனேஷன்''

''இதை எப்படிடா ஈடு செய்ய முடியும்?''

''வேலையிலே சேர்றதுக்கும் லஞ்சம் தரணும்''

''முடிவு''

''நான் வேலைக்குப் போனதும் எல்லாம் சேர்த்து சம்பாதிச்சிடுவேன்; கவலைப்படாதீங்க''

''அப்பா நான் கராத்தே கத்துக்கிடப் போறேன்''

''எதுக்கும்மா இதெல்லாம்''

''நாளைக்கு சினிமாவுலே சேர்ந்தா இது ரொம்பவும் அவசியம்; சான்சு அதிகம் கிடைக்கும்''

''என்னம்மா எழுதறே''

''காதல் கடிதம்''

''யாருக்கு?''

''ஒரு பைத்தியத்துக்கு''?

''யாரம்மா அது''

''காதல் பயித்தியம் அவருக்கு''

''ஊருக்குப் போனதும் மறக்காமல் கடிதம் எழுது''

"இப்பவே எழுதிட்டேன்; போகும் முன் போஸ்டு செய்துடுவேன்."

"சேர்ந்ததும் தானே எழுதணும்?"

"அப்பாலே மறந்துடுவேன் அதனால்தான் இப் பவே எழுதிட்டேன்"

"அப்பா! எனக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கித்தாங்க அப்பா"

"எதுக்கு?"

"Boy Friend அவங்களுக்கு Lift தர"

"தப்பு பண்ணப் போறே"

"அவங்கதான் செய்வாங்க; நான் செய்ய மாட்டேன்"

"என்னம்மா சொல்றே"

"வரதட்சணை கேக்காமல் கலியாணம் பண்ணிக்க வருவானுங்க; அதைச் சொல்றேன்".

"அப்பா எனக்குப் புது நடிகன் ராவு தான் பிடிக்கும்"

"உனக்குப் பிடிச்சால் போதுமா அவருக்கு உன் னைப் பிடிக்க வேண்டாமா?"

"அப்பா அவரசப்பட்டு எனக்குக் கலியாணம் செய்து விடாதீங்க?"

"ஏன்"

"பல மாப்பிள்ளைகள் நம்ம வீட்டுக்கு வரணும்; அவர்களை நேருக்கு நேர் வச்சு மடக்கணும் இடக்கு பண்ணணும் ஒரு சின்ன ஆசை; அவ்வளவுதான்"

"அப்பா! அண்ணனைக் கொஞ்சம் கண்டித்து வையுங்க அப்பா"

"எதுக்கு?"

"என் சிநேகிதிகள் வந்தால் உம்முன்னு முஞ்சியை வச்சிக்கிறான். கலகலப்பா பேசிச் சிரிக்க மாட்டேன் என்கிறான்."

"அதனால் உனக்கென்னம்மா நஷ்டம்?"

"நம்ம வீட்டுக்கு இனிமேல் வரமாட்டேன் என்று சொல்லிட்டாங்க அவங்க"

"என்னைப் பார்த்து உதவாக்கரை என்கிறான் அப்பா"

"இல்லேப்பா! அவள் புடவையைப் பார்த்துச் சொன் னேன்"

"பாரதியின் பாடல்களில் உங்களுக்கு எது மனப் பாடம்?"

"கண்ணம்மா என் காதலி"

"காரணம்?"

"அதன் வாசகங்கள் சமயத்துக்குக் கைகொடுக் கின்றன."

"நீ எப்படிப்பா சுமுகமா குடும்பம் நடத்தறே"

"ஆமாம் போடுவேன், தலையசைப்பேன்; எதிர் பேசாமல் அடக்கமா நடந்துக்குவேன்"

"ஆட்டோக் காரர்கிட்டே என்னடி தகராறு"

"அவன் அடிபோட்டுப் பேசறான்"

"காசுக்கு அடி போட்டு இருப்பான். நீ ஒரு அடி தள்ளி நில்லு"

"என்னை Kidnap செய்து விடுவானம் அவனை உள்ளே தள்ளினால்"

"காலம் அப்படி, ஜாக்கிரதையாயிரு"

"ஒரு நூறு ருபாய் இருந்தால் கடனாத்தரமுடியுமா?"

"நூற்று ஒன்றுதானே இருக்குது"

"வேணாம்; வேறு எங்காவது கேட்டு வாங்கிக் கிறேன்"

"அடுத்தது ஆணா பெண்ணா?"

"பெண்தான் வேணும்; அவள் தான் பிற்காலத்திலே சம்பாதிச்சுப் போடுவாள்"

"நீ என்னோட சினிமாவுக்கு வர்ரியா?"

"அத்திப்பூத்தாப் போல இருக்குதே"

"கியூவிலே நின்று டிக்கட் வாங்கணும் "

"என்னடா தாடி மிசை?"

"அய்யப்பன் யாத்திரை"

"இது என்ன இதைத் தேர்ந்து எடுத்தே"

"கொஞ்ச நாள் நிம்மதியாக இருக்க"

"விளங்கலையே?"

"என்மனைவி என்னோடு அங்கு வர முடியாது"

அவன் மனைவி சுகமில்லாமல் இருந்தாள், நர்சிங் ஹோமில் அடைக்கலம் புகுந்தாள்; இவனுக்கு அவள் கவலையே பெரிதாக இருந்தது.

டாக்டர்கள் கைவிரித்து விட்டார்கள் இவனிடம் உள்ள காசு காலியாகி விட்டதால்.

"சார் என் மனைவி பிழைப்பாளா?"

"தைரியமாக இருக்கலாம்; இனிப் பிழைக்கமாட்டாள்" என்று சொல்லிவிட்டார்கள்.

"என்ன சார் செய்வது?"

''கடவுளிடம் பிரார்தனை செய்து கொள்; அது தான் காசு செலவழிக்காமல் இருக்க ஒரே வழி''

''அவள் பிழைக்க வேண்டாம் என்றா?''

''அதற்கு நாங்கள் இருக்கிறோம்; பிழைக்க வேண்டும் என்று''

''என்னங்க டாக்டரிடம் பேச்சு?''

''உன்னிடம் பேச முடியாததால் தான்; நீ போன பிறகு நான் என்ன செய்ய முடியும்?''

''இடுக்கண் வருங்கால் நகுக; வள்ளுவர் சொல்லி இருக்கிறார்''

''வந்த பிறகு என்ன செய்வது?''

''நீங்கள் அழ நான் பார்க்க மாட்டேன்''

அவள் மூடிய கண்களைத் திறக்கவில்லை.

காலம் சுழன்றது, மகனும் மகளும் பேரப் பிள்ளைகளை அவர் வேண்டிய அளவுக்குப் பெற்றுத் தந்தார்கள்.

அவர்கள் இவனைச் சிரிக்க வைத்தார்கள்.

இவன் சிரித்தான்; மற்றவர்களைச் சிரிக்க வைக்க முடியவில்லை.

பாட்டி எங்கே என்று கேட்டார்கள்.


கூடத்தில் மாட்டி வைத்த படத்தைக் காட்டினார்.

''பாட்டி கதை சொல்லுவார்களா தாத்தா?'' என்று கேட்டார்கள்.

''சிரிக்க வைத்தாள்'' என்று சொல்லி முடித்தார்.

# REVIEW

**The Hindu, dated June 2, 1998**



005098

***SILAPPATHIKARAM*** *- Moolamum Thiranaaivum;* ***MANIMEKALAI*** *- Moolamum Thiranaaivum : Both edited by* ***Dr. R. Srinivasan****. Rs.50/- Each*

*The twin epics, Silappathikaram and Manimekalai, are the most celebrated in the history of Tamil literature. They are also known as early epics. These two works have been published for the benefit of the students, researchers and the common readers.*

*Silappathikaram is the story of Kannagi and Kovalan, composed by the Chera prince, Ilango Adigal. Manimekalai is the story of Kovalan's daughter, born through Madhavi, the reputed danseuse.*

*The first book under review contains, besides the text, a series of critical essays which might be found quite useful by students from the examination point of view. The text is neatly presented with suitable sub-titles. Any Tamil reader will find the book attractive and easily readable.*

*The second book also contains a series of critical essays. The editor has beautifully presented the story part in modern prose form, which has enhanced the utility value of the book. Literary expertise and scholarship of the editor can be easily seen on every page of the two books. These two volumes will enable the students and common readers to derive maximum benefit out of them.*